வரு.74 இல. 52

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 டிசம்பர் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 25 Sunday, 2022



இலவச இணைப்பு



02 சிதிலமடைந்துள்ள நுழைவாயில்கள்



07 கொட்டாவி விட்டுத் தூங்கும் மக்கள் பிரதிநிதிகள்



09 எதிர்கால நம்பிக்கையுடன் புதிய ஆண்டில் காலடி!



24 ஒரே பார்வையில் உலகக் கிண்ணம்

## சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கு ஆதரவளிப்போம்

### நத்தார் தினச் செய்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



நாட்டின் தற்போதைய சமூக, பொருளாதார நெருக்கடி நிலையில் ஒருவரையொருவர் இரக்கத்துடனும் அன்புடனும் வாழ்த்தி, சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கு ஆதரவளிப்பதே நாம் இன்றைய நாளில் இயேசு கிறிஸ்துவுக்குச் செய்யும் கௌரவமாகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நத்தார் வாழ்த்துந் செய்தியில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் 06

## சுபிட்சமான இலங்கையை கட்டியெழுப்ப உறுதிபூணுவோம்

### பிரதமர் தினேஸ் நத்தார் வாழ்த்துச் செய்தி



வெறுப்பையும் குரோதத்தையும் ஒழித்து, மோதல்கள் தீர்க்கப்பட்டு பொருளாதாரம் மற்றும் உணவுப் பயிர்கள் செழித்து விளங்கும் சுபிட்சமானதொரு இலங்கையை கட்டியெழுப்புவதற்கு இந்த நத்தார் தினத்தை மற்றுமொரு ஆரம்பமாக ஆக்கிக் கொள்ள முடியுமென பிரதமர் தினேஸ் குணவர்த்தன தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். பிரதமரின் நத்தார் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 06

## உன்னத நற்பண்புகளை உலகுக்கு போதித்தவர் இயேசு பிரான்

### சாந்தி, சமாதானம் நிலவ எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து



அன்பு, சமாதானம், சகோதரத்துவம் என்ற கருப்பொருளைக் கொண்ட, உன்னதமான நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் சமயப் பண்டிகை மட்டுமல்லாது, இனம், மதம், குலம், நிறம், சிறியவர்கள், பெரியவர்கள் என்ற பாகுபாடின்றி உலகம் முழுவதிலுமுள்ள எண்ணற்ற மக்களால் கொண்டாடப்படும் கலாசார விழாவாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். 06

### சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மாநாட்டுக்காக

## இலங்கை வரவுள்ள உலகின் கோடீஸ்வரர் பில்கேட்ஸ்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இலங்கையில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மாநாட்டுக்கு, உலகின் கோடீஸ்வரர் பில்கேட்ஸுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்பாடு செய்யுமாறு காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் 06

# உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்த ரூ.1,000 கோடி தேவை

### பெருந்தொகை நிதி செலவாகும் என தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

**தேர்தலை நடத்தும் முறை குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் பேச்சு நடத்திய பின் செலவு நிதியை பெற கோரிக்கை விடுக்கப்படும்**

உத்தேச உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 1,000 கோடி ரூபா அளவில் பாரிய நிதி செலவாகுமென தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்தும் விதம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்திய பின்னர் தேர்தல் செலவுக்குத் தேவையான 1,000 கோடி ரூபாவை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேட்பு மனு கோரப்பட்டதன் பின்னர் வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கான செலவு,தேர்தல் கடமைக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளுக்கான செலவு உட்பட தேர்தலில் ஏனைய நடவடிக்கைகளுக்கான செலவுகள் தொடர்பில் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 24 மாநகர சபைகளுக்கும் 41 நகர சபைகளுக்கும் 276 பிரதேச சபைகளுக்கும் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

341 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 8,356 ஊறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். எனினும் 2018 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தைப் போன்று 4,486 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படுவது சிறந்ததென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வாசகர்களுக்கு இனிய நத்தார் வாழ்த்துகள்



## அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் புலம்பெயர் சமூகத்தையும் உள்ளடக்கவும்



### அமெரிக்க தமிழ் செயற்குழு சம்பந்தனுக்கு கடிதம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் சிவில் சமூகம் மற்றும் புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்குவது 06

## தேர்தலை நடத்தும் பொருளாதார சூழ்நிலை நாட்டில் இல்லை

### பொருளியல் நிபுணர்கள், புத்திஜீவிகள் கருத்து



சட்டரீதியாக தேர்தலை நடத்துவதற்கான காலம் இன்னும் சிறிது நாட்களில் வந்தாலும் தேர்தலொன்றை நடத்துவதற்குரிய பொருளாதார நிலைமை நாட்டில் தற்போது இல்லையென பொருளாதார வல்லுநர்கள், அரசியல் அவதானிகள், புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது,

தற்போது நாட்டில் உருவாகியுள்ள நிலைமையை 06

## தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் குறித்து விரைவில் தீர்மானம்

### நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உறுதி



தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் தொடர்பான வழக்குகளை விரைவாக விசாரணைக்கு எடுத்து நிறைவு செய்ய நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தலதா மாளிகை, மத்திய வங்கி குண்டுத் தாக்குதல், கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து 06

## நீர் கட்டணத்தை செலுத்தாத 2000 பேருக்கு எதிராக வழக்கு

### நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு



நீர் கட்டணத்தை செலுத்தத் தவறிய 2000க்கும் அதிகமான நீர் பாவனையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான கோப்புகள் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதில் அரசியல்வாதிகள், அரச நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பலதரப்பட்ட மக்களுடன் தொடர்புடையவர்களும் 06

## நாட்டில் கொவிட் அச்சுறுத்தல் ஆரம்பம்



### எழுமாறான பரிசோதனைகள் அதிகரிப்பு

கொரோனா பரிசோதனைக்கான மாதிரிகள் நாளாந்தம் பெற்றுக் கொள்ளப்படுவது விரிவாக்கப்பட்டுள்ளன. இதற்கமைய தற்போது முன்னெடுக்கப்படும் எழுமாறான பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்ரகுப்த தெரிவித்தார். இந்த பரிசோதனைகளின் மாதிரிகள் பொரளை மருத்துவ பரிசோதனைக்கூடம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர 06

## எங்கள் கருத்து...

### இயேசு கிறிஸ்து பூமியில் அவதரித்த உன்னத நாள்

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியை கண்டார்கள்"என்கிறது பைபிள்.

உலகெங்குமுள்ள கிறிஸ்தவ மக்கள் இன்று கிறிஸ்து பிறப்பின் நத்தார் பண்டிகையை சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்றனர்.நத்தார் பண்டிகை என்றாலே முழு உலகிலும் வசந்த காலம் போன்ற ஒரு மகிழ்ச்சியான மாற்றம் இடம்பெறுவதை காண முடியும்.

இறைமகன் இயேசு கிறிஸ்து இந்த உலகில் அனைவரும் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கான வழிகளைத் திறந்து விடவே பூமியில் அவதரித்தார்.அன்பு, அமைதி, சமாதானம், ஒற்றுமை, மன்னிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே அவரது போதனைகளும் அடங்கியுள்ளன.

அவர் போதனையில் மட்டுமல்ல தனது வாழ்க்கையில் அதனை வாழ்ந்து காட்டினார்.

பாவத்திலும் அடிமைத்தனத்திலும் உழன்ற மக்களை மீட்பதற்காக, அவர்களை அன்பு செய்வதற்காக தன்னையே பலியாக்கிய மகான் இயேசு.

"உன்னை நீ அன்பு செய்வதுபோல பிறரையும் அன்பு செய்வாயாக"என்பதே அவரது பிரதான போதனையாக அமைந்தது.

உலகம் முழுவதையும் கொரோனா தொற்று ஆட்டிப்படைத்து அதிலிருந்து சற்று விடுதலையாகும்போது பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க நேரிட்டுள்ள காலகட்டம் ஒன்றிலேயே இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை வந்துள்ளது. 06

## மின்வெட்டு நேரத்தை அதிகரிக்கப் போவதில்லை

### இலங்கை மின்சார சபை திட்ட வட்டம்



மின்வெட்டு நேரத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் அதிகரிக்கப் போவதில்லையென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நிலக்கரியைப் பெறுவதில் சிக்கல் நிலவினாலும் நீண்டநேரத்துக்கு மின்வெட்டை அமுல்படுத்த வேண்டியேற்படாதென சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ரூ நவமணி தெரிவித்தார்.

சிக்கலான சந்தர்ப்பங்களில் மின்சார 06

## மத்திய மீன் சந்தையில் மீன்களின் விலை வீழ்ச்சி

### பேலியகொடை வியாபாரிகள் தகவல்



கொழும்பு, பேலியகொடை மத்திய மீன் சந்தையில் அனைத்து மீன்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

போதுமான அளவு மீன் கிடைத்து வருவதாக பேலியகொடை மத்திய மீன் சந்தை மொத்த வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.

தற்சமயம் மீண்டும் பெருமளவிலான 06

### உலகின் அதிவேக கணிதப்போட்டி;

## இலங்கை மாணவர்கள் 18 பேருக்கு பதக்கங்கள்



அபாகஸ் ஒலிம்பியாட் சர்வதேசப் போட்டியில் கலந்து கொண்ட 18 இலங்கை மாணவர்கள் 18 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

அபாகஸ் ஒலிம்பியாட் போட்டி வயதுக் குழுக்களின் படி நடைபெறும் உலகின் அதிவேக கணிதப் போட்டியாகும். தாய்வானின் தாய்பே நகரில் 06

## தினேஸ் சாப்டர் கொல்லப்பட்டு ஒன்பது தினங்களாகிவிட்டது

### 75 பேரிடம் வாக்குமூலம் எவருமே கைதாகவில்லை



ஜனசக்தி நிறுவனத்தின் பணிப்பாளரான தினேஸ் சாப்டர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இதுவரை 75 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர் கொலை செய்யப்பட்டு இன்றுடன் 9 நாட்களை கடந்துள்ள போதிலும் எந்தவொரு 06

## 'சில்வர் ஸ்பிரிட் ' கப்பல் கொழும்பை வந்தடைவு



நாளை திருகோணமலை நோக்கி பயணம்

'சில்வர் ஸ்பிரிட்' எனும் பயணிகள் சொகுசுக் கப்பல் (23) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இக்கப்பல் நாளை 26 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தை நோக்கி பயணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக 648 பயணிகளை 06

## நாடு முழுவதும் இன்று மதுபான கடைகள் பூட்டு




நாடு முழுவதுமுள்ள மதுபான சாலைகள் இன்று மூடப்பட்டிருக்கும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் சுற்றுலாத்துறை சார் சேவைகளை வழங்குகின்ற ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் விடுதிகளில் 06

# நத்தார் தின வாழ்த்துச் செய்திகள்

## இயேசு பிரான் உலக விடுதலைக்கு வித்திட்டவராவார்

**ஜீவன் தொண்டமான்**



இயேசு பிரான் உலக விடுதலைக்கு வித்திட்டவராவார். சமூக விடுதலைக்கு மாத்திரமல்லாது, சமய விடுதலைக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இயேசுவின் கருணை நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு விடிவுபெற வேண்டுமென வேண்டுகின்றேன் என இ.தொ.கா பொதுச் செயலாரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன்று எமது அடிப்படை வாழ்வியல் தேவைக்காக போராடி வரும் மலையக மக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுக்க வழிவகுக்க வேண்டுமெனவும், இலங்கையில் எப்பகுதியிலும் நமது மக்கள் வாழ்ந்தாலும் அவர்களின் இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள் யாவற்றுக்கும் இந்த நத்தார் தினம் ஒரு விடிவை ஏற்படுத்தும் என்பதில் நாம் திடமாக நம்புகின்றோம்.

இத்தருணத்தில் கருணை இயேசுவை மனதார பிரார்த்திப்போமாக.

சகலருக்கும் நலமும், வளமும், செழிப்பும். சிறப்பும் பெற்றுத்தர வேண்டுமென முழுமனதோடு வாழ்த்துகின்றேன். அனைவருக்கும் எனது இனிய நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

## நல்லிணக்கம், மனித வாழ்க்கைக்கான நல்லொழுக்கங்களை கிறிஸ்மஸ் போதிக்கிறது

**இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்**



அன்பு, மனிதாபிமானம், சகோதரத்துவம், மத நல்லிணக்கம் என மனித வாழ்க்கைக்குத் தேவையான பல நல்ல ஒழுக்கங்களைக் கற்றுத் தந்த இயேசுபிரானின் பிறந்த நாளைக் கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடி மகிழும் அனைத்து கிறிஸ்து சமூகத்தினருக்கும் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கிறிஸ்மஸ் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

பாவ வாழ்விலிருந்து மனிதனை மீட்கவே இறை மகன் இயேசு பாலகன் மனித உருவெடுத்தார். அன்புக்கு இருக்கும் மகத்தான சக்தியை உணர்த்தவே இவ்வுலகில் இயேசுபிரான் அவதரித்தார்.

இந்த நன்நாளில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கருணைகாட்டி இனநல்லுறவுடன் கூடிய சுபீட்சமான நல்வாழ்வை எதிர்கொள்ள வேண்டும்.

உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களும் சகோதரத்துவத்துடன் அன்பு காட்டுபவர்களாகவும், இயேசுவின் போதனைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.

இயேசுநாதரின் நல்ல பல போதனைகளை நினைவு கூர்ந்து அனைவரும் கிறிஸ்மஸை நல்லிணக்கத்தோடும், புரிந்துணர்வோடும் கொண்டாடி மகிழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு 'கிறிஸ்மஸ்' விடுதலையின் செய்தியை வழங்குமென்று எதிர்பார்ப்போம்

**கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்**



பாவத்திலும், அடிமைத்தனத்திலும் வாழும் மக்கள் விடுதலையடைய வேண்டும். ஏழைகள், புறந்தள்ளப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெறல் வேண்டும். அனைத்து மக்களும் இவ்வுலகில் ஒன்றுபட்டு, மகிழ்ச்சியுடன் பகிர்ந்து வாழவேண்டுமென்பதை இயேசு பாலனின் பிறப்பினது தத்துவமாகும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நத்ததார் தினத்தை முன்னிட்டு தெரிவித்த வாழ்த்துச் செய்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இப்பிறப்பின் மகத்துவத்தை இந்த "கிறிஸ்மஸ்" தினத்துடன் அர்த்தமுள்ளதாக்குவோம். கொரோனா தாக்கம் காரணமாக கடந்த வருடம் "கிறிஸ்மஸ்" தினம் களைகட்டவில்லை. இம்முறை பொருளாதார நெருக்கடி மேலோங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளமக்களுக்கு இம்முறை "கிறிஸ்மஸ்" விடுதலையின் செய்தியை வழங்குமென்று எதிர்பார்ப்போம். இக்கிறிஸ்மஸ் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து மதங்களுக்குமான பொதுப் பண்டிகையாக இருந்து வருகின்றமையினால், அனைவருக்கும் "கிறிஸ்மஸ்" நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

## இயேசுவின் கருணை நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு விடிவை பெற்றுக் கொடுக்கும்

**கொழும்பு வடக்கு அமைப்பாளர் சி.வை.பி.ராம்**



பாவ வாழ்விலிருந்து மனிதனை மீட்கவே இறை மகன் இயேசு பாலகன் மனித உருவெடுத்தார். அன்புக்கு இருக்கும் மகத்தான சக்தியை உணர்த்தவே இவ்வுலகில் இயேசுபிரான் அவதரித்தார்.

அதே போல இன்று நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடி மற்றும் அனைத்து பிரச்சினைகளுக்கும் இயேசு பாலகன் பிறப்பான நத்தார் பண்டிகை விடிவை பெற்றுக் கொடுக்கும் என முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு வடக்கு அமைப்பாளருமான சி.வை. பி.ராம் தெரிவித்துள்ளார்.

நத்தார் தின வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடரும அவரின் வாழ்த்துச் செய்தியில்...

இயேசுபிரான் உலக விடுதலைக்கு வித்திட்டவராவார். சமூக விடுதலைக்கு மாத்திரமல்லாது, சமய விடுதலைக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இயேசுவின் கருணை நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு விடிவை பெற்றுக் கொடுக்கும். இன்று தமது அடிப்படை வாழ்வியல் தேவைக்காக போராடி வரும் மக்களுக்கான உரிமைகளை எமது அரசின் கீழ் பொற்றுக் கொடுக்க இச் சந்தர்ப்பத்தில் நாம் உறுதி கூறுகின்றோம்.

உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களும் சகோதரத்துவத்துடன் அன்பு காட்டுபவர்களாகவும், இயேசுவின் போதனைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.

இயேசுநாதரின் நல்ல பல போதனைகளை நினைவு கூர்ந்து அனைவரும் கிறிஸ்மஸை நல்லிணக்கத்தோடும், புரிந்துணர்வோடும் கொண்டாடி மகிழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## இயேசு பாலகனின் அமைதி சமாதானத்தை ஏற்றுக்கொள்வோம்

**ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார்**



இல்லாதவர்களுக்கு இயன்ற உதவி செய்தலே உண்மை நத்தார் பண்டிகை கொண்டாட்டமாகும்.

குதூகலம் நிறைந்த இந்த கிறிஸ்மஸ் காலத்தில் அமைதியும், சமாதானமும் நம் அனைவரிடமும் நின்று நிலைக்க இறைவனை வேண்டிக் கொள்கிறேன் என ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இயேசு கிறிஸ்து, இவ்வுலகில் உள்ள மக்களின் பாவத்தை ஏற்று இரட்சிக்கப் பிறந்தார். ஏசுபிரான் நமக்கு அருளிய பாவ மன்னிப்பு, கருணை காட்டுதல், பகிர்ந்து உண்ணுதல், நேசித்தல் போன்ற நற்குணங்களை நாமும் கடைபிடித்து அமைதியையும், சமாதானத்தையும் ஏற்றுக் கொள்வோம்.

வேற்றுமைகளை தாண்டி, இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து, மனித நேயத்தோடு வாழ்ந்து குடும்பத்தையும், நாட்டையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.

உலகமெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.







**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தேர்தலை உடனடியாக நடத்துவது ஒரு தீர்வாகாது. நாட்டைக் கட்டியெழுப்ப நாம் கொண்டுவரும் கட்டமைப்பு மாற்றங்களே தீர்வாக அமையும் என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாக இருந்தாலும், தேர்தலை நடத்துவது பிரச்சினைக்கான தீர்வாக அமையாது என்றும் அவர் குறிப்பிட்டார். நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

# தேர்தலை உடன் நடத்துவது நெருக்கடிக்கு தீர்வை தராது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பேட்டி

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் விரும்பினால் அக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்க்கத் தயாராக இருப்பதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

*பதில்: தற்போதைய பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாட்டை மீட்பதற்கு நல்ல தலைமைத்துவம் தேவை என்பதாலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டும் எனப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொண்டதாக நான் நினைக்கிறேன். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் கூற்று அந்த அடிப்படை யதார்த்தத்தையும் நிலைமையையும் பிரதிபலிக்கிறது என்று நான் நினைக்கிறேன்.*

**கே: கடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. இந்தச் சூழ்நிலையில் ஐ.தே.க. அல்லது வேறு ஏதேனும் கட்சியுடன் கைகோர்க்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

*பதில்: உண்மையில், அது சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமை. அதன்பிறகு பல விடயங்கள் நடந்துள்ளன. 2018 மற்றும் 2019 முடிவுகளின் அடிப்படையில் எங்களால் மதிப்பிட முடியாது. இப்போது அடிப்படை உண்மைகள் வேறு. எனவே, நாம் உண்மையை எதிர்கொள்ள வேண்டும். நாம் அவநம்பிக்கையாளர்களாக இருக்க முடியாது. இதற்கிடையில், நாமும் அதிக நம்பிக்கையுடன் இருக்க முடியாது. நாம் யதார்த்தமாக இருக்க வேண்டும்.*

**கே: எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தின விழாவிற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டுமென சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

*பதில்: இப்போது பெரும்பான்மையான இலங்கையர்களிடையே ஒருமித்த கருத்து உள்ளது. வெறும் வீண்பிரசாரத்துக்காகவோ அல்லது எமது மக்கள் மத்தியில் வேறு எந்தப் போருக்காகவோ போராடுவது சாத்தியமில்லை என்ற கருத்தே அதுவாகும். முதலில் இலங்கையர்களாகிய நாம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒன்றுபட வேண்டும். எனவே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது நம் கையில்தான் உள்ளது. கள யதார்த்தம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் நிலப்பிரச்சினைகள் போன்ற மூன்று முக்கிய காரணிகள் உள்ளன. இதனைத் தொடர்ந்து உண்மையைக் கண்டறிவது என்ற விடயம் உள்ளது. காணாமல் போனவர்கள் தொடர்பான தீர்வுகளையும் பொறுப்புக்கூறலையும் பெறுவதற்கான வழியை நாம் கண்டறிய வேண்டும்.*

*மூன்றாவது அம்சம் அதிகாரப் பகிர்வு. 75 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் மூலம் ஒரு விரிவான தீர்வைக் கொடுக்க முடியுமா என்று தெரியவில்லை. எவ்வாறாயினும், நாம் முன்னேறி, சில அர்த்தமுள்ள உடன்படிக்கைக்கு வர முடிந்தால், அது மிகவும் இன்றியமையாதது என்று நான் நினைக்கிறேன்.*

**கே: பிரதான அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துள்ள நிலையில், ஜே.வி.பி ஒரு புதிய சக்தியாக உருவாகி வருவதாக சில பிரிவினர் சித்திரிக்க முயற்சிக்கின்றனர். இந்த மதிப்பீட்டில் ஏதேனும் உண்மை உள்ளதா?**

*பதில்: மக்கள் ஜே.வி.பியை மாற்றாகப் பார்க்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதில் ஒரு உண்மை இருக்கிறது. ஒருவர் மக்களுக்கு என்ன தீர்வை வழங்குகிறார் என்பதே அடிப்படையாக அமையும். இல்லாவிட்டால் பொதுமக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். இது கட்சிகள் மற்றும் ஆளுமைகளைப் பற்றியது அல்ல. நாங்கள் வழங்கும் பொருளாதார சீர்திருத்தங்கள் பற்றியது. எங்களிடம் அதிக எண்ணிக்கை கொண்ட அரசாங்க சேவை, நஷ்டமடையும் நிறுவனங்கள், குறைவான வரி வருவாய், நாட்டிற்கு வரும் குறைந்த முதலீடு மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்காத கடுமையான தொழிலாளர் சட்டங்கள் உள்ளன. இவையாவும் நாம் உன்னிப்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளாகும்.*

**கே: தேர்தலை நடத்துவதே தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு என்று சிலர் கூறுகின்றனர். முன்கூட்டியே தேர்தலுக்கு செல்ல வேண்டிய அவசியம் உள்ளதா?**

*பதில்: எனக்கு அதில் சிறிதும் உடன்பாடு இல்லை. அரசியலமைப்புச் சட்டப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது வேறு விடயம். எவ்வாறாயினும், தற்போதைய நெருக்கடிக்கு தேர்தலை நடத்துவது தீர்வாக அமையாது. நாம் செய்யப்போகும் கட்டமைப்பு சீர்திருத்தங்களைப் பொறுத்தே நெருக்கடிக்கான தீர்வு அமையும். இந்த நீண்டகால பொருளாதாரப் பிரச்சினைக்கு நாம் என்ன தீர்வுகளை வழங்கப் போகிறோம்? இந்த இக்கட்டான தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எவரும் அந்த சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கு அதிக அறிவும் திறனும் கொண்டவர்கள் என்று நான் நினைக்கவில்லை. எனவே, தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு குறைந்தபட்சம் அவருடன் ஒத்துழைக்க இது சிறந்த வாய்ப்பு.*

**இன்றைய இக்கட்டான தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எவரும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அதிக அறிவும் திறனும் கொண்டவர்கள் என்று நான் நினைக்கவில்லை. எனவே, தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு குறைந்தபட்சம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இப்போது சிறந்த வாய்ப்பு**

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்பு மாற்றங்களே இப்போது அவசியம்!

**கே: மின்கட்டணத்தை மேலும் உயர்த்துவதற்கு ஒப்புதல் அளிப்பதை அரசு தவிர்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

*பதில்: நாம் யதார்த்தமாக இருக்க வேண்டும். மின் உற்பத்திச் செலவு, விரயம், விநியோகம் மற்றும் பிற நிர்வாகச் செலவுகளைக் குறைப்பதுதான் ஒரே வழி என்று நாங்கள் கருதுகிறோம். அத்தகைய பொறிமுறையை செயல்படுத்தும் வரை, எங்களுக்கு வேறு வழியில்லை.*

**கே: சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தவிர பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து அடுத்த ஆண்டு 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான கடனை இலங்கை எதிர்பார்க்கிறது என்றும், அரச சொத்துக்களை மறுசீரமைப்பதன் மூலம் அரசாங்கம் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்ட முடியும் என்றும் நீங்கள் சர்வதேச செய்தி நிறுவனமொன்றுக்குக் கூறியிருந்தீர்கள். இதனை விளக்க முடியுமா?**

*பதில்: நாம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை முடித்து, அதை இறுதி செய்து, கடன் மறுசீரமைப்புக்கு சிறிது நேரம் எடுக்கும் போது பலதரப்புக்கள் வரக்கூடும். ஆனால் திட்ட நிதியுதவி குறித்து நாங்கள் விவாதித்துள்ளோம். எனவே, நாங்கள் அந்தக் கடனை எடுத்து வேறு சில கடன்களை செலுத்துகிறோம். நாடு ஸ்தம்பித்துள்ளது. கட்டுமானங்களும் அபிவிருத்திகளும் நடைபெற வேண்டும். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து நிதி வருகிறது. எனவே, நாம் கவனமாகத் திட்டமிட்டு, நாட்டிற்கு உதவும் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லலாம். நாம் ஒரு ஒப்பந்தத்தில் நுழைய முடிந்தால், அடுத்த ஆண்டு எல்லாம் திரும்பி வரும் என்று அர்த்தமல்ல. நாட்டை ஸ்தம்பிக்க வைக்க முடியாது.*

**கே: இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என்று நீங்கள் சமீபத்தில் கூறியிருந்தீர்கள். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

*பதில்: தொடக்கத்தில் கடன் மறுசீரமைப்பு வெவ்வேறு நிலைகளைக் கொண்டுள்ளது. முதல் கட்டம் உத்தரவாதங்களைப் பெறுவது. உத்தரவாதங்கள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. ஆனால் கடன் மறுசீரமைப்புக்கு நேரம் எடுக்கும். இருதரப்பு கடனாளர்களிடமிருந்து உறுதிமொழிகள் வந்தால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஆரம்பக் கொடுப்பனவை நாம் முடிக்க முடியும். எனவே, இது கடனை மறுசீரமைப்பதற்கும் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கும் சில படியாக இருக்கும்.*




# இந்தியாவின் ஜி 20 தலைமைத்துவத்தினால் இலங்கையும் நன்மைகள் பெறும் வாய்ப்பு

முன்னணி நாடுகளின் கூட்டணியான அதாவது ஜி 20 அமைப்பின் தலைமைப் பதவி இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. வருடம் தோறும் ஏற்பாடு செய்யப்படும் இந்த உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடலுக்காக 2002 ஆம் ஆண்டு இந்தியாவே வசதிகளை வழங்கியது. அதற்கு ஆறு வருடங்களுக்கு பின்னர் அரசுத் தலைவர்கள் மட்டத்தில் ஜி 20 அணி அமைந்தமையை குறிப்பிடலாம். இங்கு நிரந்தர செயலாளர் அலுவலகம் இல்லை. பணிக்குழுவும் நடத்தப்படுவதில்லை. தலைமை வைக்கும் நாடு தற்காலிக செயலாளர் சபை அமைக்கும். அதில் சிறப்பு அம்சம் ஒன்றுண்டு. இதில் மூன்று இணைப்புகள் செயலாளர் காரியாலயத்துக்கு ஏற்படுத்தப்படும். முன்னைய ஆண்டிலிருந்த மற்றும் அடுத்து நியமிக்கப்படும் நாட்டுக்குமிடையே அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படும். கடந்து செல்லும் வருடம் இந்தோனேசியா, 2023 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் 2024 ஆம் ஆண்டு தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ள பிரேஸில் ஆகியன எதிர்காலத்தில் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

ஜி 20 உச்சிமாநாட்டில் தலைமைப் பொறுப்பேற்கும் நாடு தன்னுடைய அண்டைய நாடுகள் பலவற்றின் நன்மைகளுக்காக இணைந்து கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. இந்தியா தனது நெருங்கிய நண்பர்களை ஜி 20 உச்சிமகாநாட்டில் ஒரே அணியில் வைத்திருக்கும். பிம்ஸ்டெக் அமைப்புக்குரிய நாடுகளுக்காக புதிய கதவொன்று திறக்கப்படலாம். இலங்கை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் குறித்து ஏற்கனவே முடிவு செய்ய வேண்டிள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நிலைமை மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு ஜி 20 நாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். இந்தியாவுடனும் சீனாவுடனும் ஒன்றாக பயணிக்கும் நாடு என்ற ரீதியில் ஜி 20 அணியினுள் காணப்படும் நடுநிலைமையை அறிந்துகொண்டு நடவடிக்கையில் ஈடுபடலாம். ஏற்றுமதித் துறையிலும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் ஜி 20 தலைமை மூலம் அருகில் வந்துள்ளமை பெரும் பிரயோசனமாகும். தொழில்நுட்பம், தொடர்பாடல், சமூக நடவடிக்கைகள், சூழல் காரணிகளுக்கு மத்தியில் புதிதாக இங்கு கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் ஆராயப்படுவது இலங்கையின் எதிர்காலத்துக்கு பயன் தரும்.

19 நாடுகளுடன் ஐரோப்பிய யூனியனும் ஜி 20 அமைப்பில் உறுப்பினராக உள்ளது. ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மன், இந்தியா, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா, துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஒன்றியம் என்பன அந்நாடுகளாகும். ஐரோப்பிய ஒன்றியத்தில் 27 நாடுகள் உள்ளன. 45 நாடுகளின் கூட்டமைப்பு என இதனைக் கூறுவதில் தவறில்லை. உலக சனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்களவு இந்நாடுகளில் அடங்குகின்றது.

ஜி 20 அமைப்பின் 215 கூட்டத்தொடர்கள் இந்தியாவின் 55 பிரதான நகரங்களில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் பங்களிப்பு மற்றும் அநேகமானோர் கூடும் சந்தர்ப்பங்கள் மூலம் பொருளாதாரம் மற்றும் சமூக நடத்தை தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்படும். கடந்த வாரத்தில் மூன்று நாட்கள் ஜி 20 செயற்குழு மும்பையில் சந்தித்துள்ளது. இந்தியா ஜி 20 அமைப்புக்கு தலைமை தாங்குவதை கொண்டாடும் முகமாக 75 பல்கலைக்கழகங்கள் இணைந்து கொண்டமை விசேட அம்சமாகும். வெளிநாட்டமைச்சு மற்றும் பிரதமர் காரியாலய தொடர்பாடல் மூலம் இந்தியாவின் பல பிராந்தியங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் கற்கும் இலட்சக்கணக்கானவர்கள் அதில் இணைந்து கொண்டனர். இளைஞர் சக்தியை ஜி 20 திட்டத்திற்கு இணைத்துக் கொள்வதே அதன் நோக்கமாகும். அதைத்தவிர பாடசாலை மட்டத்திலும் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்தியத் தலைமை பிரயோசனமற்றது என இந்தியாவில் அரசியல்வாதிகள் கருத்துத் தெரிவிக்கவில்லை. மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை. அனைத்து சக்திகளும் இந்திய அரசின் திட்டத்துக்கு ஆஜராகியுள்ளன. இளம் பல்கலைக்கழக சமூகம் கூட இந்தியாவின் தனித்தன்மை, அபிமானம் மற்றும் ஒற்றுமையை காட்சிப்படுத்தியது.

ஜி 20 உடன் இந்தியா பாரிய தோற்றத்தை உருவாக்கி வருகின்றது. இந்தியாவின் வரலாற்று பிரசித்தி பெற்ற நகரங்கள் மற்றும் பண்டைய நகரங்களை இணைத்து விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பங்கள் முற்றிலும் பொதுமக்களுக்காகத் திறந்து விடப்பட்டன. கொவிட் தொற்றின் பின்னர் ஏற்பட்ட மக்களின் ஒன்றுகூடல் மிகவும் உற்சாகமான தோற்றத்தைக் கொண்டிருந்தது. செல்ஃபி புகைப்படங்களை பெற்றுக்கொண்டு சமூக ஊடகங்களில் பிரசாரங்களை திட்டமிடுவதற்காக சாதாரண மக்களை இணைத்துக் கொண்டதும் விசேடமானதாகும்.

ஜி 20 உடன் தற்போதைய உலக அரசியலின் வேறு பக்கங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் சீனா ஒன்றுடனொன்று இணைந்து செயல்படுவது விசேடமாகும். சாதாரணமாக இரண்டு நாடுகளுக்கு இடையே வெறுப்பு காணப்படுவதோடு அது அடிக்கடி வெடிக்கின்றது.

ரஷ்யா மற்றும் உக்ரேனுக்கு இடையேயான மோதல்கள் இன்னொரு விடயமாகும். இந்தியா மற்றும் ரஷ்யாவிற்கு இடையே தொடர்புகள் உள்ளன. ஆனால் ஜி 20 நாடுகள் அநேகமானவை உக்கிரேனுக்கு எதிராக ரஷ்யா பின்பற்றும் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக தடைகளை விதித்துள்ள அணிகளில் அடங்குகின்றன. இந்தியா மற்றும் ரஷ்யா ஒரே மாநாட்டில் சந்திப்பதும் விசேட அம்சமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# தாழமுக்கம் 48 மணித்தியாலங்களில் இலங்கையைக் கடக்கக் கூடிய சாத்தியம்

## மக்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேல் உருவாகியுள்ள தாழமுக்கம் தொடர்ந்து அடுத்த 48 மணி நேரத்துள் இலங்கையைக் கடக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள வானிலை அறிவிப்பில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேல் உருவாகியுள்ள தாழமுக்கம் (23) காலை திருகோணமலைக்கு வடகிழக்காக 370 கிலோ மீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது.

அது தொடர்ந்து வரும் 48 மணி நேரத்தில் இலங்கையைக் கடக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இத்தொகுதியின் தாக்கம் காரணமாக இன்று 24, 25ஆம் திகதிகளில் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழை நிலைமையும் காற்று ம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அவ்வப்போது மணிக்கு 40, 50 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்து கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தினகரன் இணையாசிரியர் மர்லினின் தாயார் காலமானார்

எம். எஸ். முஸப்பிர்

தினகரன் இணை ஆசிரியரான மர்லின் மரிக்காரின் அன்பு தாயார் நெய்னா முகம்மது ஹுசைமா பீவி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை புத்தளம் விருதோடையில் 71 வது வயதில் காலமானார்.

ஓய்வு பெற்ற ஆசிரியர் நாகூர் பிச்சை முத்துமாரிக்காரின் அன்பு மனைவியும், தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார், மக்கீன் மரிக்கார், பாத்திமா ரிஸானா, பாத்திமா சப்ரினா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று சனிக்கிழமை புத்தளம் விருதோடை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# எப்பாவலவில் காணாமல் போன சிறுவன் கண்டுபிடிப்பு

## ரிகில்லகஸ்கடவில் மீட்கப்பட்டார்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

எப்பாவல கிரலோகம, கெடதிவுல பிரதேசத்தில் காணாமல் போன ஒன்பது வயது சிறுவன், ரிகில்லகஸ்கட ஜோன்ஸ்லன் தோட்டத்திலுள்ள வீடொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மின்சார திருத்த வேலைகளில் ஈடுபடும் நபர் ஒருவரின் நெருங்கிய நண்பரின் வீட்டில் சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சிறுவன் கடத்தலில் சம்பந்தப்பட்ட சந்தேக நபரான மின்சார திருத்த வேலை செய்பவர் அங்கிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். காணாமல் போயிருந்த சிறுவனையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த மாணவன் கடந்த 19ஆம் திகதி இரவு முதல் காணாமல் போயுள்ளதாக தாய் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.





திகன ரஜவெல இந்து தேசிய பாடசாலையில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் கல்விப் பெறுபேறுகளின் மூலம் சாதனை நிலை நாட்டிய மாணவர்களுக்கு கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தினால் புலமைப் பரிசில்கள் வழங்குதலும் மற்றும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மத்திய மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் அதிபர் கோகிலேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கௌரவ அதிதிகளாக தேசமான்ய பி. பழனியப்பன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன், சிறப்பு விருந்தினர்களாக வத்தேகம கல்வி பணிப்பாளர் ஐ. ஹாசிம், மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

## நாடு முழுவதும் இன்று...

மாத்திரம் மதுபானம் விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை வரவுள்ள உலகின்...

ருவான் விஜயவர்தன ஆகியோருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வாரம் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ருவான் விஜயவர்தன ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடிய போது இந்த தீர்மானம் எட்டப்பட்டது.உலகில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஈடுபட்டுள்ள பல தலைவர்களை இலங்கைக்கு அழைக்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த மாநாட்டுக்கு வரும் முக்கிய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இந்த நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## நீர் கட்டணத்தை செலுத்தாத...

அடங்குகின்றனர். இதன்படி இந்த பட்டியலில் ஐந்து முதல் ஆறு இலட்சம் வரையிலான கட்டணத்தை செலுத்தத் தவறியவர்களும் உள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குறிப்பிடுகிறது.

## மத்திய மீன் சந்தையில்...

நுகர்வோர் பேலியகொடை மத்திய மீன் சந்தைக்கு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த மாதம் தலபத் மீன் கிலோவொன்று மூவாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. அத்துடன் கடந்த மாதத்துக்கு முன்னர் 600 முதல் 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சாலை மீன் கிலோவொன்று தற்சமயம் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. லின்னா மற்றும் பல மீன் கிலோவொன்று 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக பேலியகொடை மத்திய மீன் சந்தை மொத்த வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.

## சுபிட்சமான இலங்கையை...

உலகை யதார்த்தபூர்வமாக நோக்குவதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூருகின்ற நத்தார் பண்டிகையை, அன்பையும், மனித மாண்பையும், மனிதநேயத்தையும் மதிக்கும் ஒரு சமுதாயத்துக்கான புதியதோர் அடித்தளமாக ஆக்கிக் கொள்வோம்.

அது ஒடுக்கப்பட்ட மக்களை அதிலிருந்து விடுவித்து, சிறந்ததோர் சமுதாயத்தை உருவாக்க தன்னை அர்ப்பணித்த இயேசு கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படையிலான உண்மையான காலத்தின் தேவையாகும்.

அமைதி, சமாதானம், சமத்துவம் போன்ற அற்புதமான போதனைகளின் அடிப்படையில் ஏனையவர்களுக்கு உதவுவதன் மூலம் நத்தார் பண்டிகையை அர்த்தமிக்கதாக ஆக்குவோமென்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தலை நடத்தும் பொருளாதார...

கருத்தில் கொண்டு தேர்தலை குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்திவைத்து ஒரு முறையான வழிமுறையின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களை ஒரு ஆணையாளரின் கீழ் கொண்டுவரவேண்டும். அல்லது மேற்படி உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலத்தை நீடிக்கவும் வழிவகை செய்யவேண்டுமென்றும் மஹாநாம தெரிவித்தார். நாட்டில் தற்போது சாதாரண நிலைமை இல்லையென்பதை சுட்டிக்காட்டிய அவர், தேர்தலை நடத்துவதால் நாட்டின் நெருக்கடியான நிலை மேலும் உக்கிரமமடையக் கூடுமென்றும் அவர் தெரிவித்தார்.

## உன்னத நற்பண்புகளை உலகுக்கு...

கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் படி,தன்னுடைய குமாரனை உலகிற்கு அனுப்பியது, தேவனுடைய இராஜ்யத்தின் மதிப்புகள் மீண்டும் பூமியில் வாழ வேண்டும் என்று இறைவன் எதிர்பார்த்ததனாலாகும்.

உலகில் அனைத்து இறைதூதர்களும் ஒரு நல் வழியைக் கற்றுக் கொடுத்தார்கள். அவர்களது தர்மத்தின் சாராம்சம் சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் மற்றும் கருணையாக இருந்தது. ஒருவரையொருவர் அன்பாக நடத்துதல், அனைத்து மனித இனத்தையும் சகோதரத்துவத்துடன் நடத்துதல் ஆகிய உன்னத நற்பண்புகளை நடைமுறையில் உலகிற்கு போதித்தார்.எனவே, நாம் எப்போதும் உண்மையான நத்தார் தினத்தைக் கொண்டாடுவோம். ஆகவே, இந்த வருட நத்தார் பண்டிகையை நாம் இயேசுவை சந்திக்கும் நத்தார் பண்டிகையாக ஆக்குவோம்.

## தினேஸ் சாப்டர் கொல்லப்பட்டு...

சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை.இந்த நிலையில், காவல்துறையும், குற்றப்புலனாய்வு திணைக்களமும் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன. இதற்கமைய, தொழிலதிபர் தினேஸ் சாப்டர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றப்புலனாய் திணைக்களத்தினர் 58 பேரிடமும், பொரளை காவல்துறையினர் 17 பேரிடமும் இதுவரை வாக்குமூலங்களை பெற்றுள்ளனர்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட தினேஸ் சாப்டர் பொரளை பொது மயானத்திற்கு செல்வதற்கு முன்னர், அவர் சென்ற சிற்றுண்டிச்சாலை, வழமையாக செல்லும் சிற்றுண்டிச்சாலை அல்லவென தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, குற்றப் புலனாய்வுப் திணைக்கள அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தநிலையில் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றது, தினேஷ் சாப்டரா? அல்லது வேறு நபரா என்பதை உறுதிப்படுத்துவதற்கு சிசிரிவி கமராக்கள் இன்மையால் விசாரணைக்கு தடையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், சிற்றுண்டிகளை கொள்வனவு செய்வதற்கு வங்கி அட்டையை அவர் பயன்படுத்தினாரா என்பது தொடர்பிலும் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

## தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர்...

முன்னெடுக்கப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சிறைச்சாலைகளில் உள்ளதாக கூறினார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 'சில்வர் ஸ்பிரிட் ' கப்பல்...

ஏற்றிச் செல்லக்கூடிய இந்தக் கப்பலில் பயணிக்கும் பயணிகள் கொழும்பு நகரம், களனி விகாரை உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு கப்பல் தரித்திருக்கும் காலப்பகுதியில் செல்ல திட்டமிடப்பட்டுள்ளன. *Aitken Spence* இன் ஒருங்கிணைப்பின் கீழ் 2022 இல் இலங்கை துறைமுகத்தில் நிறுத்தப்படும் நான்காவது அதி சொகுசு கப்பல் சில்வர் ஸ்பிரிட் என தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை மாணவர்கள்...

டிசம்பர் 18 முதல் டிசம்பர் 20 வரை இந்தப் போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்கள் குழு நேற்று சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## நாட்டில் கொவிட்...

பல்கலைகழகத்தினூடாக மேலும் ஆய்வுக்குட்படுத்தப்படுவதாக அவர் கூறினார். இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்துவருவதாக வெளியாகும் தகவல்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்ரகுப்த தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

கொடுப்பனவுகளில் நிலவும் தாமதமே இதற்கு காரணமெனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், தேவைக்கேற்றவாறு மருந்து விநியோகத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது.

## அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில்....

அவசியமாகுமென ஐக்கிய அமெரிக்க தமிழ் செயற்குழு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய அமெரிக் தமிழ் செயல் குழுவின் (United States Tamil Action Group (USTAG) தலைவர் அனன் பொன்னன்பலம் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனிடம் எழுத்துமூலம் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளார். இந்த கடிதத்திலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது வேகமாக மாறிவரும் அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் புலம்பெயர்ந்த அமெரிக்க தமிழ் மக்களாகிய நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் தமிழர் பிரச்சினை மற்றும் தமிழ் தேசிய பிரச்சினை குறித்த எமது நிலைப்பாட்டை அதிக பட்சமாக பரிசீலிக்குமாறு மிக அவசரமாக உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக் தமிழ் செயல் குழுவின் (United States Tamil Action Group (USTAG) ஸ்தாபக உறுப்பனர்களின் ஒருவரும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களில் ஒருவருமான லவன் முத்து இக் கடித்தை இரா.சம்பந்தனிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (23) கையளித்தார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கத்துடனான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் தமிழ் சிவில் சமூகம் மற்றும் புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்குவது அவசியமாகும். தமிழ் புலம்பெயர்ந்தோர் போரின் காரணமாக உருவானார்கள், அவர்களுக்குத் தமது தாய் நாட்டுக்குத் திரும்புவதற்கான உரிமை உள்ளது. எனவே, மோதலின் பின்னரான இறுதித் (அரசியல்) தீர்வில் புலம்பெயர்ந்தோர் சட்டப்பூர்வமான பங்குதாரராக உள்ளனர். பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு கட்டத்திலும், P2P ஒருங்கிணைப்பாளர்கள், சமயத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் சம்மேளனங்களின் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட தமிழ் சிவில் சமூகத்தை கலந்தாலோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலந்துரையாடலின் நிலை மற்றும் உள்ளடக்கத்தைப் பொறுத்து சிவில் சமூகம், புலம்பெயர்ந்தோர் மற்றும் துறைசார் நிபுணர்களை உள்ளடக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## எங்கள் கருத்து

# இயேசு கிறிஸ்து பூமியில் அவதரித்த உன்னத நாள்

குறிப்பாக எமது நாட்டைப் போன்று வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு இது சுமக்க முடியாத சுமையாகியுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையைப் பொறுத்தவரை மக்கள் எதிர்கொண்டிருந்த பெரும் கஷ்டங்கள் மற்றும் நெருக்கடியான சூழ்நிலை சற்று தணியத் தொடங்கியுள்ளது. எதற்கெடுத்தாலும் தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருட்களுக்கான நீண்ட வரிசைகள்,அதிகரித்த விலைகள் என மக்கள் எதிர்கொண்ட பாதிப்புகள் குறையத் தொடங்கியுள்ளன.

ஒளிமயமான எதிர்காலம் ஒன்றுக்கான அடித்தளம் இடப்பட்டு அனைத்து பிரச்சினைகளிலிருந்தும் விடுதலை பெற முடியுமென்ற நம்பிக்கை ஒளிக் கீற்று நாட்டில் துளிர் விட்டுள்ளதை காண முடிகிறது.

பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் நம்பிக்கையளிக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகவும் அது அமைந்துள்ளது.

அதேபோன்று நீண்ட காலமாக நாட்டில் புரையோடிப் போயிருந்த இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பு, அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் என சாத்தியமான நகர்வுகளை காண முடிகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் சாதகமான முன்னேற்றங்களை எட்டியுள்ளன.

இவை அனைத்துமே பிறக்கப் போகும் புத்தாண்டு நாட்டுக்கு சிறந்த ஒரு ஆண்டாக, பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய ஆண்டாக இருக்குமென்ற பெரும் நம்பிக்கை வலுப்பெற்றுள்ளது.

இத்தகைய பின்னணியில் உதயமாகும் கிறிஸ்மஸ் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலத்தையும் தர வேண்டுமென்ற மனநிலையுடன் நாம் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வோம்.

## மின்வெட்டு நேரத்தை...

விநியோகத்தை தடையின்றி முன்னெடுப்பதற்குத் தேவையான மாற்றுத்திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் ஒரு மின்னுற்பத்தி தொகுதியின் செயற்பாடுகள் (23) நள்ளிரவு முதல் இடைநிறுத்தப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

பராமரிப்பு பணிகளுக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார். நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தில் 03 மின்னுற்பத்தி தொகுதிகள் காணப்படுவதுடன் அவற்றிலிருந்து 900 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படுகின்றது.

இதில் ஒரு மின்னுற்பத்தி தொகுதியின் செயற்பாடுகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும் 900 மெகோவோட் மின்சாரத்தில் 300 மெகாவோட் மின்சாரம் இழக்கப்படுகின்றது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்றும் நாளையும் 26 ஆம் திகதியும் மின்வெட்டு அமுல்படுத்தப்படாதென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## உன்னத படைப்பாளி... (03 ஆம் பக்கத் தொடர்)

குழந்தைப் பருவத்தை இழந்த அப்பாவியான கதையைச் சுற்றிவரும் “துன்வெனி யாமய” உளவியல் ரீதியான அகநிகழ்வைக் குறிக்கின்றது.

சைமன் நவகத்தேகமவினால் எழுதப்பட்ட கதையைக் கொண்டு உருவான “சுத்தலிகே கதாவ” (1985) தர்மசிரியின் மற்றொரு சிறந்த சினிமா படைப்பாகும். இதனை கலாநிதி பந்துல குணவர்தன தயாரித்துள்ளார். அதுவும் ஆணாதிக்க சமூக முறைமையினுள் பெண்கள் உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் எவ்வாறு சுரண்டப்படுகின்றார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது. தர்மசிரியின் மற்றைய சினிமா படைப்பான “பவ துக்க மற்றும் பவ கர்ம” (1997ம் ஆண்டில் திரையிடப்பட்டது) திரைப்படத்தினைப் பற்றிப் பேசும் போது “பவ துக்க” அவரது தந்தையின் இளைய சகோதரனான கே. எஸ். பெரேராவினால் எழுதப்பட்ட கதையினை அடிப்படையாகக் கொண்டதாகும். இது எம். ஆர். ஆப்தீனால் தயாரிக்கப்பட்டது. இதில் முக்கிய விடயம் யாதெனில், இந்தக் கதையின் ஒரு பாத்திரமாக இருந்தவர் தர்மசிரியின் தந்தையாக இருந்ததாகும். இந்த சினிமாவின் மூலம் அவர் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் குத்தகைக்காரர்களால் மக்கள் உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் சுரண்டப்படுவதையும், இந்த நிலைக்கு உள்ளாகும் பெண்களின் சிக்கலான மனோநிலையினையும் சுட்டுகிறது.

1976ம் ஆண்டின் “ஏகாதிபதி” மூலம் ஆரம்பித்த தர்மசிரியின் மேடை நாடக உலகம் “மகராக்ஸ”, “டவல பீஷன”, “யக்ஷாமனய”, “ட்ரோஜன் காந்தாவோ” போன்ற சிறப்பான தரத்திலான பல சர்ச்சைக்குரிய நாடகங்களைக் கொண்டதாகும். இந்த படைப்புக்களினால் அவருக்கு மரண அச்சுறுத்தல் கூட விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளமாகும். அதேபோன்று டீ. எம். ஜயரத்னவினால் பாடப்பட்ட, பிரேமசிரி கேமதாசவின் இசையில் உருவான “பவனட்ட செலனா தொம்ப மல் சுவந்தின்” பாடலை எழுதியவரும் தர்மசிரி பண்டாரநாயக்காவாகும். இது தாயினால் கைவிடப்பட்டுச் சென்ற குழந்தையை வளர்ப்பதற்காக பெரும் கஷ்டங்களை அனுபவிக்கும் தந்தை தொடர்பானதாகும்.

அது அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு அதிர்ச்சியின் வெளிப்பாடாகும்.

இந்த விருது வழங்கும் விழாவில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட கூறியதற்கு அமைய, “சினிமா விமர்சகர்கள் மற்றும் இந்நாட்டின் சிறப்பான சினிமா படைப்புக்களுக்கு இடையிலான இடைவெளியினை நிரப்ப வேண்டும் என்பதோடு, கடந்த காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல் பேசுபொருளை உருவாக்குவதற்கான காலம் வந்துள்ளது” என்றார். உண்மையிலேயே தர்மசிரி பண்டாரநாயக்கா இன, மத, குல சமய பேதங்களற்ற, மனிதராகும். இந்த உன்னதமான படைப்பாளி இந்நாட்டிற்கு ஒரு வளமாகும்.

## சமூகத்தில் பின்தங்கியுள்ள...

தெரிவித்துள்ளதாவது,

இருளை நீக்கி மனிதர்களிடத்தே சுபிட்சத்தை ஏற்படுத்தும் உண்மையான ஒளியின் வருகையையே நத்தார் பண்டிகைக் குறிக்கின்றது.

ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோருக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்து விடுதலையின் மகிழ்ச்சியை பறைசாற்றும் ஒரு மகிழ்ச்சியான பண்டிகை இதுவாகும்.

பெத்லஹேமில் ஒரு ஏழையின் தொழுவத்தில் பிறந்த குழந்தையே இயேசு கிறிஸ்து ஆவார். இவர் உலகை யதார்த்தமாகப் பார்ப்பதில் பிறப்பிலிருந்தே முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவித்து சிறந்த சமுதாயத்தை உருவாக்க அவர் தன் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தார்.

"செலவுகளைக் குறைப்போம், எளிமையாக நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவோம், துன்பப்படுபவர்களுக்கு நம்மிடம் எஞ்சியிருப்பதைக் கொடுப்போம்" என்று பாப்பரசர் போப் பிரான்சிஸ், மனிதநேயத்தின் மதிப்பைக் கற்பிக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

மாளிகை வீட்டுக்கும் ஏழைக் குடிசைக்கும் ஒரேவிதமான நத்தார் பண்டிகையின் மகிழ்ச்சியை வழங்குவதே எங்கள் அரசாங்கத்தின் இலக்காகும்.

எனவே அனைவருக்கும் அன்பைப் பரப்பும் மற்றும் மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்ளும் குடிமக்களாக இந்த பண்டிகைக் காலத்தில் அனைவரும் தங்கள் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு உறுதியளிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பின் மகிமையினால் நம் நாட்டைக் குணப்படுத்தும் வகையில் எதிர்கால தசாப்தத்தின் கதவுகள் திறக்கப்பட வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன்.

இயேசு விரும்பிய மனிதநேயம், நல்லிணக்கம், தியாகத்தின் நற்செய்தி ஆகியன எங்கும் பரவி இந்நத்தார் பண்டிகை மகிழ்ச்சிகரமானதாக அமைய வாழ்த்துகின்றேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனத் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பாராளுமன்றில் கொட்டாவி விட்டுத் தூங்கும் மக்கள் பிரதிநிதிகள்

**நாளாந்தம் சண்டை சச்சரவு கூச்சல் அடிபிடி வெட்டு–க்குத்து என சந்தடிமிக்க ஊர்களை அல்லது இடங்களை கொரியாவ என சிங்களப் பேச்சுவழ–க்கில் அழைப்பதுண்டு. அத்தகைய கொரியாக்களை இப்போதும் நாம் இலங்கையில் காணலாம். குறிப்பாகக் கொழும்பில் சில இடங்கள் அவ்வாறான நடத்தைகளுக்குப் பேர்போனவை. அந்த இடங்களுக்கூடாகச் செல்வதைக்கூட மக்கள் தவிர்த்துக்கொள்வர்.**

சண்டை சச்சரவுகளுக்கு கொரியாவை உதாரணங்காட்டும் வழக்கம் 1970 களில் தோன்றியதாக நினைவு. கொரிய யுத்தத்தின் பின்னர் தென்கொரியாவில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற நிலை வன்முறைக் கலாசாரம் என்பன அந்நாட்டை வன்முறைக்குப் பேர்போன ஒரு நாடாக உலகில் பிரகடனப்படுத்தியிருந்தது.

நான்கு தசாப்தங்களின் பின்னர் அதே கொரியாவிலிருந்து பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு உதவும் நோக்கில் விஜயம் செய்துள்ள தென்கொரிய அனர்த்த நிவாரண அமைப்பின் (South Korea Disaster Relief Foundation) தலைவர் சோ சங் லீ (Cho Sung Lee) முன்னரே நேரம் குறித்தொதுக்கப்பட்ட முக்கியமான ஒரு சந்திப்புக்கு முப்பது நிமிடங்கள் காலதாமதமாக வந்த இலங்கை இராஜாங்க அமைச்சர் ஒருவரையும் அதிகாரிகளையும் விமர்சித்துள்ளதுடன், இலங்கையின் வினைத்திறனற்ற அரச இயந்திரம் குறித்து காட்டமான கருத்துக்களையும் முன்வைத்திருக்கிறார்.

ஒரு காலத்தில் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் இலங்கையை விட மோசமான நிலையில் இருந்த கொரியாவில் இருந்து வந்த ஒரு முக்கியஸ்தர் இப்படி வெளிப்படையாக விமர்சித்திருப்பது குறித்து இலங்கையர்கள் வெட்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் முப்பது நிமிட காலதாமதம் என்பது இலங்கை நிருவாகக் கட்டமைப்புகளைப் பொறுத்தமட்டில் சகஜமானதுதான். ஏனெனில் மணித்தியாலக் கணக்கில் காலதாமதமான அமைச்சரவைக் கூட்டங்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடனான சந்திப்புகள் என்பன இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளன. இவைபற்றி தென்கொரிய முக்கியஸ்தருக்குத் தெரிந்திருந்க வாய்ப்பில்லை. எனவேதான் தனது நாட்டில் இப்படி முக்கிய அரசதுறை அதிகாரிகள் கால தாமதமாகி வந்திருந்தால் உடனடியாகவே ஒழுக்காற்று நடவடிக்கையைச் சந்தித்திருப்பார்கள் என்று பொரிந்து தள்ளியிருக்கிறார். உரிய நேரத்திற்கு வந்து ஏற்கெனவே வழங்கிய வாக்குறுதியின்படி நடந்துகொள்ள முடியாதவர்களைச் சந்திப்பதில் பயனில்லை என்றும் பொறுப்புக் கூறுந் தன்மை அறவே இல்லை என்றும் சாடியிருக்கிறார்.

வாக்குறுதிகளை தாராளமாக அள்ளி வழங்குவதில் இலங்கையர்கள் கிஞ்சித்தும் வஞ்சகமின்றி நடந்து கொள்வதும் ஆனால் அவற்றை நிறைவேற்றுவதில் எவ்வித கரிசனையும் காட்டாமல் காலதாமதம் செய்வதும் காற்றில் பறக்கவிடுவதும் அவர்களுக்குக் கைவந்த கலை.



> **சண்டை சச்சரவுகளுக்கு கொரியாவை உதாரணங்காட்டும் வழக்கம் 1970 களில் தோன்றியதாக நினைவு.**

கொரியப் பிரதிநிதி நெடுந்தொலைவு பயணித்து இலங்கையின் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் பயணித்து இங்கு வந்து இறங்கியபோது இலங்கை நாடு பொருளாதார ரீதியில் அதலபாதாளத்தில் விழுந்து அல்லல்படும் வேளை அரசாங்கமும் அரச அதிகாரிகளும் அதிலிருந்து எப்படியடா வெளிவருவது என்ற கேள்வியுடன் 24 மணிநேரமும் ஓய்வு ஒழிச்சல் இன்றி தீயாய் வேலை செய்து கொண்டிருப்பார்கள்; எங்கிருந்து, எப்படி இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உதவிகளைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் சீரியஸாக தனது நிறுவனம் போன்ற நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அவர் வந்திருப்பார். ஆனால் காத்துக்கிடப்பதில் இன்பம் உண்டு காக்க வைப்பதில் சுகம் உண்டு என்ற பாடல் வரிகள் போன்று அமைச்சர் என்றால் சற்றுத் தாமதமாக வந்தால்தான் கெத்தாக இருக்கும் என்ற இலங்கைக் கலாசாரத்தின்படி அமைச்சர் செயற்பட்டிருக்கிறார். அவரை நாம் குறை சொல்ல முடியாது. எல்லோரும் அப்படித்தான் நடக்கிறார்கள் என்றால் அவரை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. மாற வேண்டியது இந்த கலாசாரம்தான்.

அரசியல் தலைமைகளை அடியொற்றிச் செல்லும் இலங்கை போன்ற சமூகங்களில் அரசியல் தலைமைத்துவமே மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் தலைவர் மற்றும் அமைச்சர்கள் முதலில் உதாரணமாக மாறி நடக்க வேண்டும். அதைப்பார்த்து பாராளுமன்ற உறுப்பினர்கள் திருந்துவார்கள். படிப்படியாக அந்த மாற்றம் முழு அரச இயந்திரத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். முதலில் அமைச்சர் நேர முகாமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டும். அதன்படி நடக்கவும் வேண்டும். அதன் பின்னரே மற்றவர்களைக் கேள்வி கேட்க முடியும். அதைத்தான் தென்கொரியப் பிரதிநிதி உறைப்பாகச் சொல்லியிருக்கிறார். பொதுவாக மேற்குலகத்தினரே நேரமுகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை இலங்கைக்கு வலியுறுத்தி வந்தார்கள். இப்போது கிழக்காசியாவில் இருந்தும் கடுமையான விமர்சனம் வந்திருக்கிறது. வாக்குறுதிகளை மீறுவது, கூட்டத்துக்கு பிந்திச் செல்வது போன்ற நடத்தைகளை அரசியல்வாதி பிஸியாக இருக்கிறார், முக்கியமான ஆள், அதனால் அவரைக் காத்திருந்துதான் சந்திக்க வேண்டும். என்பது போன்ற போலியான ஒரு பிம்பத்தை இலங்கை போன்ற நாடுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. அதனை அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கான மாஸாகவும் காட்டத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அது உலக நாடுகள் மத்தியில் அருவருப்பாகவும் கேவலமாகவும் பார்க்கப்படும் என்பதை கொரிய அதிகாரி "நீங்கள் இப்படி நடந்தால் உலக நாடுகளுடன் தொடர்புகளை கட்டியெழுப்புவதை மறந்து விடுங்கள்" என்று எச்சரித்திருக்கிறார்.

முன்னர் ஒபாமா போன்ற தலைவர்கள் இன்றைய கனேடியப் பிரதமர் போன்ற அரச தலைவர்கள் மிக எளிமையான நடத்தை கொண்டவர்களாகவும் முன்னுதாரணமாகக் கொள்ளப்படக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

## அரச இயந்திரம் வினைத்திறனுடன் செயற்படுவது எப்போது?

பாராளுமன்றத்தில் கொட்டாவி விட்டுத் தூங்கும் மக்கள் பிரதிநிதிகளை நாம் நாளாந்தம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அதுமட்டுமன்றி கோப் குழுவின் முன்னே தோன்றும் அரச அதிகாரிகளின் தயார்படுத்தல்கள், கைவசம் வைத்துள்ள தகவல்கள், பதிலளிக்கும் விதம் என்பன அரச இயந்திரத்தின் வினைத்திறனற்ற தன்மையைப் பறைசாற்றும் இன்னொரு கண்ணாடியாக உள்ளது. கேள்வி கேட்பவர்களுடைய தனிப்பட்ட தராதரங்கள், நடத்தைகள் பற்றிய கரிசனைகள் ஒருபுறமிருக்க கேட்கப்படும் கேள்விகளுக்கு அப்பதவிகளுக்குரிய பதவிநிலையில் சொல்ல வேண்டியவற்றைச் சுருக்கமாகவும் குவியத்துடனும் நேர்மையாகவும் சொல்ல வேண்டியது அதிகாரிகளின் கடமை. அதிகாரி ஒருவரது தனிப்பட்ட கண்ணியத்தை பாதிக்கும் வகையில் விடுக்கப்படும் வினாக்களுக்கு பயமின்றி பதிலளிப்பதும் கண்ணியக் குறைவு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுவதும் அரசு அதிகாரியின் உரிமை.

இந்தியா, அமெரிக்கா போன்ற முதிர்ந்த ஜனநாயக நாடுகளின் மிகவும் வினைத்திறனுள்ள அறிவார்ந்த மற்றும் அனுபவமுள்ள சிவில் சேவை உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் நிர்வாக ரீதியில் பலமானவர்களாகவும் உள்ளனர். எனவேதான் அரச இயந்திரம் வினைத்திறன் வாய்ந்ததாக இயங்க முடிகிறது.

தென்கொரிய SKDRF தலைவர் சுட்டிக்காட்டிய விடயங்களை அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல அரசு அதிகாரிகளும் சீரியஸாகக் கருதி தங்களை மாற்றிக் கொள்வது நாட்டுக்கும் அவர்களுக்கும் நல்லது.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ரஷ்ய–உக்ரைன் போரை நீடிக்கச் செய்யுமா ஜெலன்ஸ்கியின் அமெரிக்க விஜயம்?

**உலகளாவிய அரசியலில் ரஷ்ய–உக்ரைன் விவகாரமே மீண்டும் முதன்மை பெற்றுள்ளது. இரு நாட்டுத் தலைவர்களது அண்மைய வெளிநாட்டு விஜயங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்த உலக விவகாரமாக விளங்குகிறது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் பெலாரஸ் நாட்டுக்கான விஜயமும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் அமெரிக்க விஜயமும் தனித்துவமான உலக அரசியலை வெளிப்படுத்தியுள்ளது.**

கடந்த பெப்ரவரியில் தொடங்கிய ரஷ்ய உக்ரைன் போர் 300 நாட்களை கடந்துள்ள நிலையில் உக்ரைன் ஜனாதிபதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதி போருக்கு பின்னர் பல நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள போதும், இருவரது தற்போதைய விஜயமும் போரை முழு நீளப் போராக மாற்றுவதுடன், உலகளாவிய போராக மாற்றுமா என்ற சந்தேகத்தைத் தந்துள்ளது. இக்கட்டுரையும் இரு நாட்டு ஜனாதிபதிகளது வெளிநாட்டு விஜயங்கள் தந்துள்ள விளைவுகளைத் தேடுவதாக அமைந்துள்ளது.

முதலாவது, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி 21.12.2022 அன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார். அவரது விஜயம் இரகசியமாக வைக்கப்பட்டதுடன் அதிமுக்கிய பாதுகாப்புக்குரியதாகவும் அமைந்திருந்தது. அவர் அமெரிக்க இராணுவ விமானத்தில் ஆன்ட்ரூஸ் விமானப் படைத்தளத்துக்கு வருகை தந்தார். உக்ரைன் ஜனாதிபதிக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்த அமெரிக்கா, செங்கம்பள வரவேற்பளித்தது. அது மட்டுமன்றி இரு அவைகளும் கொண்ட காங்கிரஸ் அவையில் ஜெலன்ஸ்கி உரையாற்றினார். முன்னாள் பிரிட்டன் பிரதமர் வின்ஸ்டன் சேச்சிலுக்கு பின்னர் போர்க்காலத் தலைவராக ஜெலன்ஸ்கியே காங்கிரஸில் உரையாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. அங்கு ஜெலன்ஸ்கி உரையாற்றும் போது, அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கிய ஆயுத தளபாடங்களுக்காகவும் நிதி உதவிக்காகவும் நன்றி தெரிவித்ததுடன், அமெரிக்கா வழங்கிய இராணுவ உதவிகள் வெறும் உதவிகள் மட்டுமல்ல அனைத்தும் உலக பாதுகாப்புக்கான முதலீடுகள் என்றும் தெரிவித்தார். அமெரிக்க காங்கிரஸின் இறுதி முடிவுதான் உக்ரைனைப் பாதுகாக்கும் எனவும் குறிப்பிட்டார். அவரது விஜயம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், அடுத்துவரும் வாரங்களில் காங்கிரஸின் பெரும்பான்மையை குடியரசுக்கட்சி பெற்றுக் கொள்ளும் தறுவாயில், உக்ரைனுக்கு வழங்கப்படும் நிதி கட்டற்றதாக உள்ளதென்ற விமர்சனத்தை எதிர்கொள்ளும் விதத்தில் ஜெலன்ஸ்கியின் உரையும் விஜயமும் முதன்மைப்படுத்தப் படுகிறது. மேலும் ஜெலன்ஸ்கி உரையாற்றும் போது உக்ரைன் படைகள் ஒருபோதும் ரஷ்யாவிடம் சரணடையாது எனத் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைன் ரஷ்யப் போர் எவ்வளவு காலமானாலும் அமெரிக்கா உக்ரையினுக்கு உதவும் என உறுதியளித்ததுடன், மேலும் உடனடியாக 1.85 பில்லியன் அமெ. டொலர் உதவியை அறிவித்தார். அது மட்டுன்றி அமெரிக்க தயாரிப்பான பேற்றியட் வான்தடுப்பு ஏவுகணையை உக்ரைனுக்கு வழங்குவதாகவும் அவ்வறிப்பில் பைடன் முன்வைத்தார். உக்ரைன் ஒவ்வெரு நகர்விலும் அமெரிக்கா உக்ரைனுடன் இருக்கும். உக்ரைனுக்கு எப்போதும் துணையாக அமெரிக்கா செயல்படும் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார். இரு நாட்டுக் கொடிகளையும் மாற்றிக் கொண்ட தலைவர்கள் நம்பிக்கையூட்டும் பயணத்தை தொடர்வதாகவே தமது உடல் மொழிகளை வெளிப்படுத்திக் கொண்டனர்.



இரண்டாவது, 19.12.2022 அன்று ரஷ்ய ஜனாதிபதி புடின் பெலாரஸ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார். அவரது விஜயம் இரு நாட்டுக்குமான இராணுவ எல்லைகளை பலப்படுத்துவதுடன் இராணுவ ஒத்திகைக்கான உரையாடலையும் கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு பலமானதாக இருப்பதுடன் உக்ரைன் ரஷ்யப் போர் தொடங்கியது முதல் பெலாரஸ் ரஷ்யாவின் ஆதரவு நாடாகவே விளங்குகிறது. அதேநேரம் தனது இராணுவ அதிகாரிகளுடன் புடின் உரையாடும் போது போருக்கும் இராணுவத்திற்கு தராளமாக நிதி உதவி வழங்கப்படும் என உறுதியளித்த ரஷ்ய ஜனாதிபதி உக்ரைனுடனான போர் மூன்றாவது நாடொன்றின் கொள்கையின் விளைவே எனவும் போருக்கு ரஷ்யா காரணமல்ல என்றும் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடும் போது உக்ரைனை சகோதர தேசமாகவே பார்ப்பதாக குறிப்பிட்டார்.

இரு நாட்டுத் தலைவர்களையும் பற்றிய மேற்கு உலக ஊடகங்களின் பார்வை வேறு விதமாகவே தெரிகிறது. குறிப்பாக புடினது பெலாரஸுக்கான விஜயத்தை ஜெலன்ஸ்கியின் அமெரிக்க விஜயத்துடன் ஒப்பிடுகின்றனர். மிக மோசமான ஒப்பீடாகவே தெரிகிறது. புவிசார் ரீதியாக ரஷ்யாவின் அயல் நாடாகவும் நட்பு நாடாகவும் பெலாரஸ் விளங்குகிறது. இரு நாட்டுக்குமான புவிசார் அரசியலாக அமைந்திருப்பதுடன் முன்னாள் சோவியத் யூனியன் காலத்தில் ஒரே தேசமாக இரு நாடுகளும் காணப்பட்டன என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அது மட்டுமன்றி உக்ரைனியர்கள் அமெரிக்க நலனுக்காக பலியிடப்படுவது போல் பெலாரஸ் மக்களோ இராணுவமோ ரஷ்யாவுக்காக பலியிடப்படவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அமெரிக்காவை உக்ரைனின் நட்பு நாடாகக் கொள்ள முடியுமா என்பது தற்போதும் கேள்வியாகவே உள்ளது. காரணம் தொழில்நுட்ப ரீதியாக அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கும் ஆயுதங்கள் எவையும் முழுமையான திறன் கொண்டவை எனக்குறிப்பிட முடியாது என இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமன்றி அமெரிக்காவின் இராணுவ ஆயுத தளபாட ஏற்றுமதி உக்ரைனுக்கானதாக மாறியுள்ளதுடன் பொருளாதார உதவிகளை விட இராணுவத்திற்கே அதிக நிதியை அறிவித்துவிட்டு அதற்கான ஆயுதங்களை அமெரிக்காவே வழங்குகிறது. ஏறக்குறைய அமெரிக்க நலனுக்காக உக்ரைன் சுடுகாடாக்கப் பட்டுள்ளது. ரஷ்யாவுடன் நேரடியாக மோதாது உக்ரைனை கையாண்டு போரை வெற்றிகரமாக அமெரிக்கா நகர்த்தியுள்ளது. இந்தப் போரின் வெற்றிகள் அனைத்தும் அமெரிக்காவுக்கும் நேட்டோவுக்குமானதே.

ஜெலன்ஸ்கியை பிரித்தானிய முன்னாள் பிரதமர் சேர்ச்சிலுடன் அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் ஒப்பிடுவதாக ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. இதுவும் மிக மோசமான ஒப்பீடாகவே தெரிகிறது. வின்ஸ்டன் சேர்ச்சில் இரண்டாம் உலகப் போரை நிகழ்த்தியவர் என்றும் மேற்குலகத்தின் போரை திட்டமிட்டு வழிநடத்தியவர் என்பதுடன் ஹிட்லரின் போர் உத்திகளை தோற்கடித்தவர் என்றும் பெருமைப்படக் கூடிய தலைவராக விளங்கினார். அவர் சொந்த நாட்டு மக்களை கொல்வதற்கு ஒரு போதும் ஜெலன்ஸ்கியைப் போல் துணை போகவில்லை என்பது நினைவு கொள்ளத்தக்கது. அமெரிக்க நலனுக்காக மட்டுமல்லாது மேற்கு ஐரோப்பாவின் நலனுக்காகவும் போர்க் களத்தை கையாண்டவரே சேர்ச்சில். புவிசார் அரசியலையும் சர்வதேச அரசியலையும் ஒருங்குசேர கையாண்டவரே சேர்ச்சில். முதலாளித்துவத்திற்கும் மேற்குலகத்திற்கும் ஆபத்தான கம்யூனிஸத்தையும் நாசிசத்தையும் ஒன்றாகவே தோற்கடித்த இராஜதந்திரியே சேர்ச்சில். ஏறக்குறைய இரண்டாம் உலகப் போரை முழுமையாக செயற்படுத்தி மேற்குலகத்திற்கான வெற்றியாக்கிய தலைவராகவே பிரித்தானிய பிரதமர் சேர்ச்சில் காணப்படுகிறார்.

இரு நாட்டுத் தலைவர்களது நகர்வுகளும் தெளிவாக போரை நீடிக்க திட்டமிடுவன என்பதை அமெரிக்க ஜனாதிபதியின் உரையிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது. அதாவது உக்ரைன் போர் எவ்வளவு காலம் நீடித்தாலும் அமெரிக்கா உக்ரைனுடன் இருக்கும் என்பதன் மூலம் போரை நீடிக்கவே அமெரிக்கா விரும்புகிறது. காரணம் இத்தகைய போர் ரஷ்யாவுக்கான எதிர்காலத்தை தோற்கடித்துள்ளதாகவே தெரிகிறது. உலகத்தின் இருதய நிலத்தை கட்டுப்படுத்தாதுவிடின் அது எப்போதும் மேற்குக்கு ஆபத்தானதாகவே அமையும் என்பதை அமெரிக்கா நன்கு புரிந்துள்ளது. அதனாலேயே உக்ரைனுக்கான ஆயுத தளபாடங்களையும் நிதி உதவியையும் வகைதொகையின்றி வழங்கி வருகிறது. அவ்வாறே ரஷ்யாவும் இப்போரை கைவிட்டால் நேட்டோவால் ஏற்படப் போகும் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் முயற்சியில்' ஈடுபட்டு வருகிறது. எனவே இருதரப்புக்கும்' போர் அவசியமானது மட்டுமன்றி போர் நீடிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாயுள்ளது. அதாவது இரு நாடுகளுக்குமான போர் புவிசார் அரசியலால் நிர்ணயிக்கப்படுகின்ற தென்பதை உணர முடிகிறது. இதன் விளைவுகள் அதிகமானவை ரஷ்ய உக்ரைனியர்களுக்கே அன்றி அமெரிக்கர்களுக்கல்ல. ஐரோப்பியர் பாதிக்கப்பட்ட அளவுக்குக் கூட அமெரிக்காவுக்கு உக்ரைன்-ரஷ்யப் போரால் பாதிப்பு ஏற்படவில்லை.

எனவே உலகம் போரின் எல்லைக்குள் நகர திட்டமிடுகிறது. பொருளாதார பாதிப்புகளால் வறிய நாடுகள் தொடர்ந்தும் ஆபத்தான நிலைக்குள் தள்ளப்பட வல்லரசுகள் ஆயுதப் போட்டியிலும் ஆதிக்க போட்டியிலும் முனைப்புச் செலுத்தி வருகின்றதைக் காணமுடிகிறது. ஐரோப்பா மீளவும் ஒரு வரலாற்றுத் துயரத்திற்குள் நகர்கிறது. அமெரிக்காவுக்காக உக்ரைனின் ரஷ்யாவுக்கு எதிரான போரை தொடரப் போகிறது. ஜெலன்ஸ்கியின் அமெரிக்க விஜயம் உக்ரைன் படைகளின் ஆயுத தளபாடங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியே பிரதான காரணமாகத் தெரிகிறது. நேட்டோவிடமும் அமெரிக்காவிடமும் ஆயுதங்களையே உக்ரைன் ஜனாதிபதி கோரிவருகிறார். போரை நிறுத்துவதற்கு பதிலாக போரை நீடிக்கவே இரு நாட்டுத் தலைவர்களது நகர்வுகளும் அமைந்துள்ளன. உக்ரைன் ரஷ்யப் போரை அமெரிக்க அதிகம் தீவிரப்படுத்த விரும்புகிறது.

# உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு ஆயத்தமாகும் அரசியல் கட்சிகள்!

**எதிர்வரும் 2023ஆம் ஆண்டின் முற்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலொன்று நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் அதிகரித்திருப்பதால், அரசியல் கட்சிகள் அதற்கான தயார்படுத்தலில் ஈடுபட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று பல அரசியல் கட்சிகள் ஏற்கனவே நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்துள்ளன.**

இந்தக் கோரிக்கைகள் மீது விரைவில் தீர்ப்பு வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவும் இந்த ஆண்டு இறுதிக்குள் 300க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுக்களை கோரவிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் கட்சிகள் தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தல்களில் இறங்கியிருந்தாலும், முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்குத் தடையாக சில காரணிகளும் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. குறிப்பாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவதாயின் சட்டரீதியாகக் காணப்படும் தடை நீக்கப்பட வேண்டும்.

அதாவது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. இது தவிரவும் பொருளாதார ரீதியான சிக்கல்களும் காணப்படுவதால் இது அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் கவலையடையச் செய்துள்ளது. இவ்வாறான பிரச்சினைகளில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஒரு விடயமாகப் பார்க்கப்படுகிறது.

தற்பொழுது காணப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8,000 ஆகக் காணப்படும் நிலையில் இதனை 4,000 முதல் 5,000 வரையில் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பான பணி எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எல்லை மீள்நிர்ணயப் பணிகள் பெப்ரவரிமாத இறுதியில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அதற்குள் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை. நிர்வாக மாற்றங்கள் நடைமுறைக்கு வருவதற்கும், வேட்புமனுக்கள் கோரப்பட்ட பின்னர் ஆறு வார கால பிரசாரத்துக்கும் அனுமதித்து, மே அல்லது ஜூன் மாதமளவிலேயே தேர்தலை நடத்துவதாயின் நடத்தமுடியும்.

தேர்தலுக்கான செலவு குறித்த விடயமே அரச தலைவர்களின் மற்றைய கவலைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. தேர்தல் என்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரமே என்றாலும், தேர்தல்களை நடத்துவதற்கான செலவு பொதுத்தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கு சமமானதாகவே அமையும். விசேடமாக அதிகளவான வேட்பாளர்கள் தேர்வுசெய்யப்பட வேண்டியிருப்பதால் வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான செலவுகளும் அதிகமாகவே இருக்கும்.

நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நேரத்தில், தேர்தலுக்கான செலவுகள், குறிப்பாக அரசாங்கத்தையோ அல்லது ஜனாதிபதியையோ மாற்றுவதற்கு வழிவகுக்காத தேர்தலுக்கு முன்னுரிமை அளிப்பதா என்றதொரு நிலைப்பாடும் அரசியல் தரப்புக்கள் மத்தியில் காணப்படுகிறது. இவ்வாறானதொரு தேர்தலுக்குப் பயன்படுத்தப்படக் கூடிய பணம் நாட்டுக்கு அத்தியாவசியமான பொருட்களைக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். தேர்தலுக்கு தற்பொழுது செலவு செய்வது அநாவசியமானது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.





தேர்தலை நடத்துவதில் காணப்படும் மற்றுமொரு சிக்கலான காரணியாக பணியாளர்களின் பற்றாக் குறையும் சுட்டிக்காட்டப்படுகிறது. அரசாங்கத்தின் கொள்கை காரணமாக இவ்வருட இறுதியுடன் பெரும் எண்ணிக்கையான அரசாங்க ஊழியர்கள் அதாவது 60 வயதை அடைந்த பலர் ஓய்வுபெறுவதால் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தும் பணியாளர்களின் எண்ணிக்கையில் இது தாக்கம் செலுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வருடத்தின் முற்பகுதியிலேயே பல்வேறு தேர்தல் பணிகளுக்காக அரசாங்க ஊழியர்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ளலாம். இவ்வாறான பின்னணியில் நீதிமன்றம் தேர்தலை குறித்த திகதிக்கு முன்னர் நடத்துமாறு தீர்ப்பு வழங்கும் பட்சத்தில் இதுபோன்ற பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கும்.

இருப்பினும், பெரும்பாலான அரசியல் கட்சிகள் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன. 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் வரவிருக்கும் பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தனது வாக்குத் தளத்தைப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்த அரசியல் கட்சிகள் முயற்சிக்கின்றன என்ற கருத்தும் நிலவுகிறது.

தேர்தலொன்றை எதிர்கொள்வதற்குத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கூறியிருந்தார். தேர்தலுக்கான காலம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன், எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கவிருப்பதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகல காரியவசம் ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

இது இவ்விதமிருக்க, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தற்காலிகமாக ஒத்திவைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் யு.ஆர். டி சில்வா தெரிவித்துள்ளார். உள்ளாட்சித் தேர்தலுக்காக பெரும் தொகையை செலவிடுவது இந்த நேரத்தில் ஒரு பயனற்ற செயல் என்று கருத்து தெரிவித்தார்.

உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி சிந்திக்கும் முன்னர் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவ வேண்டும். எவ்வாறாயினும், தேர்தல் சட்டங்களின்படி எதிர்வரும் பெப்ரவரிக்கு முன்னர் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன என்பதை ஒப்புக்கொண்ட டி சில்வா, அனைத்து சட்டங்களுக்கும் விதிவிலக்குகள் உண்டு என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

மத்திய அரசின் உதவி இல்லாமல் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களால் எதையும் செய்ய முடியாது. அவர்கள் அரசின் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். உள்ளூராட்சி மன்ற அமைப்புகளால் மக்களுக்கு மின்சாரம், எரிபொருள் அல்லது பிற அத்தியாவசிய பொருட்களை வழங்க முடியாது. எதிர்காலத்தில் அதிக மின்வெட்டு பற்றி இப்போது கேள்விப்படுகிறோம். மின்வெட்டுக்கு எல்.ஜி நிறுவனங்கள் என்ன தீர்வுகளை வழங்க முடியும்? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

இதுபோன்ற பல்வேறு சிக்கல்கள் காணப்படும் நிலையில் தேர்தலுக்குச் செல்வது எந்தளவுக்கு சாத்தியமானதாக இருக்கும் என்பதும் சிந்திக்கப்பட வேண்டியுள்ளது.

**உள்ளூராட்சித் தேர்தலைப் பற்றி சிந்திக்கும் முன்னர், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவ வேண்டும் என்பதே பொதுவான வேண்டுகோள்!**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக நாடு மீண்டெழுகின்ற வேளையில், தேர்தலுக்காக பணத்தை வாரியிறைப்பது பாதகமான செயலென பலதரப்பினரும் கருத்து!**

பி.ஹர்ஷன்...

# சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இலங்கைக்கு நன்மைகளைத் தருமா?

**இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படப் போவதாக தகவல்கள் வெளிவருகின்றன. ஆனாலும் இது தொடர்பான உறுதியான அறிவிப்புகள் இன்னுமே வெளிவரவில்லை. இது குறித்த செய்திகள் அரசதரப்புக்குள் இருந்து வெளிவந்தவண்ணமுள்ளன.**

இலங்கை_சீனா இடையிலான பொருளாதார தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்காக இருநாடுகளுக்குமிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனாலும் இந்த ஒப்பந்தத்தினால் இலங்கைக்கு பாதகமான விளைவுகளே ஏற்படுமென்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனாவின் நவீன கடல்மார்க்க பட்டுப்பாதைத் திட்டத்திற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கும் என்று ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இலங்கையுடன் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் சீனா கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றன. இது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக சீனத் தூதுக்குழுவொன்று சமீபத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக பொருளாதார ஒத்துழைப்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை இருதரப்பும் எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில் ஏற்கனவே துறைமுகங்கள், சர்வதேச விமான நிலையம், அனல் மின்நிலையம், பெருந்தெருக்கள், ஹோட்டல்கள் என பல்வேறு உட்கட்டமைப்பு கட்டுமானங்கள் சீனாவின் முதலீட்டில் நடந்துள்ளன. எனினும் சீனாவின் முதலீடுகள் நேரடி வர்த்தக இருதரப்பு கொடுக்கல் வாங்கலாக இன்னும் முன்னேற்றம் அடையவில்லை என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இந்திய சந்தையைக் கடுமையாகப் பாதிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதாக பல்கலைக் கழக பொருளியல் துறையின் மூத்த விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மோட்டார் கார் ஏற்றுமதியில் இலங்கை முக்கிய சந்தையாகத் திகழ்கிறது. எதிர்காலத்தில் உருவாகக் கூடிய சீன_ இலங்கை சுதந்திர வர்த்தக உறவுகள் மூலம் இந்தியாவின் சந்தை பாதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

சீனாவைப் பொறுத்தவரை, இலங்கையுடனான பொருளாதார உறவுகள் மூலம் அந்நாட்டிற்கு கிடைக்கும் அரசியல் நன்மைகளே அதிகம் என்றும், இலங்கைக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் மிகக் குறைவானதென்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

21 ஆம் நூற்றாண்டின் நவீன கடல்மார்க்க பட்டுப்பாதையை கட்டியெழுப்புவது சீனாவின் சிந்தனையாகும். அத்திட்டத்துக்காக சீனா தனது அயல்நாடுகளிடம் உதவி கோருகின்றது. அதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்குமா என்பது இன்னும் தெரியவில்லை. ஆனால் இலங்கை ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மாத்திரமன்றி பாகிஸ்தானிலும் சீனா துறைமுகங்களை நிர்மாணித்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமானால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற விமர்சனம் பரவலாக நிலவுகின்றது. இலங்கை போன்ற நாடுகளை கடனாளியாக்கி தனது வலைக்குள் சிக்க வைப்பதற்காகவே முதலீடுகளை ஆரம்பித்து, கடன்களையும் வழங்கி வருவதாக சீனா மீது பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

**சீனாவுக்கு மாத்திரமே அனுகூலமளிக்கும் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்**





**நவீன கடல்மார்க்க பட்டுப்– பாதையை கட்டியெழுப்புவதே சீனாவின் திட்டம்!**

சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன் தொகைக்கு வட்டி வீதம் அதிகம். அக்கடனை குறுகிய காலத்தில் மீளச்செலுத்த வேண்டியதும் அவசியமாகும்.

அவ்வாறு குறுகிய காலத்தில் கடன் தொகையை மீளச்செலுத்தத் தவறும் பட்சத்தில், நாட்டிலுள்ள சொத்துகளை சீனாவிற்கு வழங்க வேண்டிய நிலைமை ஏற்படுமென்று எதிரணிகள் சுட்டிக் காட்டுகின்றன. சீனாவுடன் பல்வேறு தேவையற்ற ஒப்பந்தங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் அல்லது உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற்றுக் கொள்ளும் போது பிரச்சினைகள் இருக்காது. ஆனால் சீனாவிடமிருந்து கடன் வாங்கும் போது சிக்கல்கள் ஏற்படுகின்றன என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

சீனா எந்தவொரு நாட்டுக்கும் மானியங்களை வழங்குவதில்லை. கடன்களையே வழங்குவது வழக்கம். சீனா தமது வர்த்தக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே, இவ்வாறான கடன்களை வழங்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றார்.

ஆகையால் சீனாவிடமிருந்து தொடர்ந்தும் கடன் பெற்றுக் கொள்ளப்படுமானால் இலங்கையை சீனாவின் ஆளுகைக்குள் சிக்க வைக்கும் ஆபத்து ஏற்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது. எனவேதான் சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வதென்பதும் ஆபத்தானதென்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இலங்கை ஏற்கனவே சீன அரசாங்கத்திடமிருந்து பல்வேறு கடன்கள், அபிவிருத்தி திட்டங்களுக்கான முதலீடுகள் என பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை துறைமுகம், ஹம்பாந்தோட்டை விமான நிலையம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுகநகர் உள்ளிட்ட மேலும் பல திட்டங்களை சீன அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. இவ்வாறான நிலையில், இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாகவே சீனாவிடமிருந்து கடன்களைப் பெற்று வருகின்றது.

அதேவேளை 'சீனாவுடன் இதுவரை செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அல்ல' என அரசாங்க தரப்பு கூறுகின்றது. 'அது இருதரப்பு ஒப்பந்தம் மாத்திரமே' என்று அரசு தெரிவிக்கின்றது.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் இதுவரை சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்துள்ள சீனா, புதிய பட்டுப் பாதையொன்றை உருவாக்குவதற்காக மேலும் பணத்தைச் செலவிடுவதற்குத் தயாராக இருக்கிறது. ஆசியாவிலிருந்து ஐரோப்பா வரையும் அதைத் தாண்டியும், உட்கட்டமைப்புகளிலேயே அதிக பணத்தைச் செலவிடுவதற்கு அந்நாடு முயற்சிக்கிறது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, சீனாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இருந்து மாலைதீவு விலகிக் கொள்ளவிருக்கும் செய்தியொன்று ஏற்கனவே வெளியாகியிருந்தது.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடு ஒன்றுடன், மிகச்சிறிய நாடு ஒன்று ஏற்படுத்திக்கொண்ட இந்த ஒப்பந்தம் பிழையான ஒன்றென மாலைதீவு தெரிவித்திருந்தது.

மாலைதீவின் இந்த அறிவிப்பானது, சீனாவிற்கு ஏற்பட்டபின்னடைவாகக் கருதப்படுகின்றது.

எஸ்.சாரங்கன்...

# இடர்மிகு பாதையை கடந்து எதிர்கால நம்பிக்கையுடன் புதிய ஆண்டில் காலடி!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்



**முடிவடையவிருக்கும் 2022ஆம் ஆண்டு இலங்கையர்கள் அனைவருக்கும் மிகவும் மறக்க முடியாத ஆண்டாக அமைகிறது. அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல்வேறு சவால்களை மக்கள் எதிர்கொண்ட ஆண்டு என்பதால் இதனை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.**

கொவிட் 19 தொற்றின் தாக்கம் படிப்படியாகக் குறைந்து நாடு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நிலையில், பொருளாதார நெருக்கடியால் குறிப்பாக அந்நிய செலாவணிப் பற்றாக்குறையால் எரிபொருள், எரிவாயுவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகள் பின்னர் அரசியல் எதிர்ப்பு அலையாக மாறியது.

இதனையடுத்து தீவிரமடைந்த போராட்டங்களால் ஒரு சில அசம்பாவித சம்பவங்களும் இடம்பெற்றன. குறிப்பாக மே 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதிகள் பலருடைய வீடுகள் வன்முறைக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்ததான சூழலில் போராட்டங்கள் வலுவடைந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை விட்டு விலகிச் செல்லும் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறான அரசியல் பின்னணியில் நாட்டுக்குத் தலைமையேற்கும் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கப்பட்டது. நாடு மிகவும் மோசமான நிலைக்குச் சென்று கொண்டுள்ளது என்ற களயதார்த்தத்தை உணர்ந்த ஒருவராக முன்னர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, பின்னர் பாராளுமன்றத்தின் ஊடாக இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிடுகையில், 'நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான





பொருளாதாரப் பிரச்சினை ஒரு புறம், பாரிய மக்கள் எதிர்ப்பு மறுபுறம். எனினும் நாட்டுக்காக இந்த கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். அதற்குக் காரணம் இருளுக்கு சாபமிட்டு கொண்டு இருப்பதை விட, ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டிற்காக நான் செய்யும் கடமை என நான் கருதியமையாகும்.

நாம் இன்று நவீன வரலாற்றிலே ஒருபோதும் எமது நாடு முகம்கொடுத்திராத கடுமையான பிரச்சினையொன்றுக்கு முகம்கொடுத்துள்ளோம். நாம் பாரிய அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளோம்.

அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணையும் சவாலை வெற்றி கொண்டால் மாத்திரமே முடியும். இந்த பாராளுமன்றத்தில் இருக்கும் கௌரவ உறுப்பினர்களும் அவ்வாறே நாட்டு மக்கள் அனைவரும் நாட்டினைக் கட்டியெழுப்பும் முயற்சிக்குத் தமது சக்திக்கு உட்பட்டவாறு பங்களிப்புச் செலுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டு மக்களுக்கு உறுதியளித்ததைப் போன்று நாட்டில் நிலவிய மக்கள் வரிசைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். எரிபொருள் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக 'கியூ ஆர்' குறியீட்டு முறை கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து எரிபொருளுக்கு பல நாட்களாக நீடித்த வரிசைகள் முடிவுக்கு வந்தன.

இதனைத் தொடர்ந்து சமையல் எரிவாயுவை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மாதக்கணக்கில் எரிபொருளுக்கு நிலவிய நீண்ட வரிசைகள் முடிவுக்கு வந்தன. படிப்படியாக மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்குத் திரும்பத் தொடங்கியது.

நாடு எதிர்கொண்டுள்ள சவாலான சூழ்நிலையிலிருந்து ஓரளவுக்கு விடுவிப்பதற்காக சர்வதேச நாடுகள் மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என சர்வதேச அமைப்புக்களுடன் ஜனாதிபதி நேரடியான பேச்சுக்களை ஆரம்பித்திருந்தார். அவருடைய பல்வேறு வெளிநாட்டு விஜயங்களின் போது முக்கிய தலைவர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதானிகளைச் சந்தித்து நாட்டின் நிலைமைக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைப் பகிரங்கமாக முன்வைத்திருந்தார்.

## நாடு படிப்படியாக மீண்டெழுகிறது; ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் முன்னேற்றகரமான திட்டங்களுக்கு சர்வதேசம் பாராட்டு

இந்தச் சந்திப்புக்கள் ஓரளவுக்கு வெற்றியளித்திருப்பதுடன், சர்வதேச நாடுகள் பல இலங்கைக்கு அத்தியாவசிய உணவுகள் மற்றும் மருந்துகளைப் பெறுவதற்கான உதவிகளை வழங்க முன்வந்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருக்கும் சர்வதேச உறவுகளுக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாக இலங்கையுடன் மனக்கசப்பைக் கொண்டிருந்த ஜப்பான் மீண்டும் இலங்கைக்கு உதவ முன்வந்தமையைக் குறிப்பிடலாம்.



சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு கடன் மறுசீரமைப்புக்குச் செல்லும்போது கடன் வழங்குனர்கள் மத்தியில் மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்தது. அத்துடன், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அனுமதி மறுக்கப்பட்ட ஜப்பானின் லயிட் ரயில் முதலீட்டுத் திட்டத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாடுகளுடன் கொண்டுள்ள வெளியுறவுகள் காரணமாக சர்வதேச நாடுகளுடன் நெருக்கமாகச் செயற்பட முடிந்துள்ளது. இது இலங்கைக்கு பல்வேறு வழிகளில் உதவியைக் கொண்டு வந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

## புதிய ஆண்டில் பொருளாதாரம் சீரடையுமென நம்பிக்கை; வீழ்ச்சியுற்றிருந்த இலங்கையை துரிதமாக மீளக்கட்டியெழுப்பும் திட்டங்கள்

மறுபக்கத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாராளுமன்றத்தில் காணப்படும் நம்பிக்கை தொடர்ந்தும் பல தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது. விசேடமாக 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், வரவுசெலவுத் திட்டம் உள்ளிட்டவற்றை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தின் பெரும்பான்மை கிடைத்தது. இதன் மூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பல தடவை நிரூபணமாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நுழைந்து பாராளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளபோதும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நிதி அமைச்சராகவும் செயற்பட்டு வரும் நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட யோசனைகள் பொருளாதார நிபுணர்களால் பெரிதும் பாராட்டப்பட்டன. நிவாரணங்களையும், மானியங்களையும் வழங்கும் வழமையான வரவுசெலவுத் திட்டமாக அன்றி நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுக்கும் வகையில் இந்த வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அரசாங்கத்தின் வரி வருவாய் கடந்த காலங்களில் கணிசமானளவு குறைக்கப்பட்டிருந்தபோதும் வரி வருவாயை அதிகரிக்கும் யோசனைகள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் எதிர்க்கட்சியிடமிருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் நாட்டின் எதிர்காலத்துக்கு மிகவும் முக்கியமானதொன்றாக இது பார்க்கப்படுகிறது.

அது மாத்திரமன்றி பெரும் நஷ்டங்களை ஈட்டும் அரச நிறுவனங்களை அரச தனியார் கூட்டாண்மையுடன் மறுசீரமைப்பது தொடர்பான பிரேரணைகளும் வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. உண்மையில் இவை மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்களாகப் பார்க்கப்படுகின்றன. இது போன்ற பல்வேறு எதிர்காலத் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது போன்ற காரணங்களால் மக்கள் தமது வாழ்க்கையை ஓரளவுக்கு சுமுகமான முறையில் முன்னெடுக்க முடிந்துள்ளது.

இருந்தபோதும், பிறக்கவிருக்கும் வருடம் அதாவது 2023 ஆம் ஆண்டானது இலங்கையர்கள் மாத்திரமன்றி உலகில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு சவால் மிக்கதாக அமையப் போகிறது எனப் பொருளாதார நிபணர்கள் கணித்துள்ளனர். ஏற்கனவே பொருளாதார ரீதியில் இலங்கை பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், உலக நாடுகள் எதிர்கொள்ளக் கூடிய நெருக்கடிகள் இலங்கையை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்த சந்தேகங்களும் காணப்படுகின்றன.





எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியிருப்பதுடன், நாட்டு மக்களாகிய நாமும் சில விடயங்களைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளவேண்டியநிலை ஏற்படலாம் என்றும் துறைசார் வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே எதிர்வரும் வருடத்தில் எமக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைக்க அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்வதே காலத்தின் தேவையாகும்.

## கொவிட் தொற்று, பொருளாதார வீழ்ச்சி, அரசியல் குழப்பங்கள் என்றெல்லாம் கடந்த வருடத்தில் இலங்கை சந்தித்துள்ள நெருக்கடிகள் ஏராளம்!

**இராகலை இலக்கம் இரண்டு தோட்டத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் திகதி அதிகாலை தீயால் பாதிக்கப்பட்ட மக்கள் இடைத்தங்கல் தொடர் குடிசை வீடுகளில் சொல்லொணா துயரங்களுடன் அடிப்படை வசதிகளின்றி வசித்து வரும் 14 குடும்பங்களின் துன்பங்களுக்கு தீர்வு கிடைக்குமா?**



# இராகலை இலக்கம் இரண்டு தோட்டக் குடியிருப்பு தீ விபத்து



2021 மார்ச் 10 ஆம் திகதி சிவராத்திரி விழாவில் கண்விழித்து ஆலய தரிசனம் செய்து வந்த இராகலை இரண்டாம் பிரிவு தோட்ட மக்களுக்கு அடுத்த நாள் (11) ஆம் திகதி அதிகாலை அதிர்ச்சி காத்திருந்தது. தோட்டத்தின் இலக்கம் ஒன்று தொடர் லயம் குடியிருப்பு திடீர் தீ விபத்துக்குள்ளானது. அந்த அதிர்ச்சியிலிருந்து அந்த மக்கள் இன்னும் மீளவில்லை.

16 வீடுகளை கொண்ட தொடர் குடியிருப்பில் 14 குடும்பங்கள் வசித்து வந்தனர். இவ் வீடுகளில் வசித்து வந்த குடும்பங்கள் அனைவரும் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர்.

அந்த தருணத்தில் கொரோனா பேரிடர் நிலவியதால் இந்த 14 குடும்பத்தைச் சேர்ந்த 70க்கு மேற்பட்டோரை சுகாதார வழிகாட்டலுக்கமைவாகவும் பாதுகாப்பாகவும் தங்க வைப்பதில் தோட்ட நிர்வாகம் மற்றும் அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள்,சுகாதார பகுதியினர்,சமூக தொண்டு நிறுவனத்தினர் பெரும் கஷ்டத்தை அனுபவித்தனர்.

*** ஒரு வருடம் கடந்தும் தகர கொட்டகைகளில் சொல்லொணா துயரங்களுடன் வாழும் மக்கள்**

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களை அத் தோட்ட ஆலயத்திலும், பிள்ளை பராமரிப்பு நிலையத்திலும் பாதுகாப்பாக தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வீட்டிலுள்ள அனைத்து உடமைகள், ஆடைகள், பணம், ஆவணங்கள் தீக்கிரையாகி தவித்தவர்களுக்கு நுவரெலியா மாவட்ட செயலகம், இடர் முகாமைத்துவ நிலையம், செஞ்சிலுவை சங்கம், தோட்ட நிர்வாகம், பிரதேச அரசியல்வாதிகள், சமூக நலன் விரும்பிகள் என பலரும் உதவிக்கரம் நீட்டினர்.

இவர்களுக்கு வீட்டு பாவனை பொருட்கள், ஆடைகள், குளிருக்கான பெட்சீட்டுக்கள், தலையணை என தேவைக்கான அனைத்து பொருட்களுடன் அத்தியாவசிய உலர் உணவு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசு ஆட்சி காலத்தில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற பின்னர் முதலில், இராகலை தீ விபத்தில் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக தங்க வைக்கப்பட்ட மக்களை பார்வையிட்டார்.

அத்தோடு தோட்ட நிர்வாகம், பெருந்தோட்ட மனிதவள நிதியம், மாவட்ட செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புதிய வீடுகள் அமைத்து கொடுக்கும் வரை அத் தோட்டத்தின் தேயிலை தவரணை செய்யும் இடத்தில் தகரத்தால் தற்காலிக குடிசைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வாறு தற்காலிகமாக அமைத்து கொடுக்கப்பட்டுள்ள குடிசைகளில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இவர்களுக்கு அதே தோட்டத்தில் இராகலை நகரை அண்மித்த பகுதியில் புதிய தனி வீடுகளும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வீடுகள் கட்டும் பணியும் மலமலவென்று நடைபெற்றது.

*** அமைக்கப்பட்ட தனி வீடுகளும் பூர்த்தியாகாத நிலையில்...**



கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன, ஆனால் கூரைகள் போடப்படவில்லை, மலசலக்கூடங்கள் தண்ணீர் வசதி இல்லை, இவ் வீட்டு திட்டத்திற்கு செல்லும் பாதை செப்பனிடப்படவில்லை.

பிரதான மின் இணைப்பு உள்ளது ஆனால் வீடமைப்பு பூர்த்தி செய்யாத நிலையில் அதுவும் அறைக்குறையாக முடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொரோனா பேரிடர்,பொருளாதார நெருக்கடி என பல பிரச்சினைகள் உருவாகிய நிலையில் இந்த வீடுகளை பூரணப்படுத்தும் பணிகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் புதிய வீடுகள் கட்டப்பட்ட பகுதி காடாகி வீடுகளுக்குள்ளும் பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன.

நாட்களும் கடந்தோடிக்கொண்டிருக்கும் நிலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தொடர் குடிசைகளில் தங்கியுள்ளோர் தினம் தினம் பல துயரங்களுக்கு மத்தியில் முறையான அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்காக தங்குமிடம் வசதி, குடிநீர்,மின்சாரம், மலசலகூட வசதிகளும் முறையாக இல்லாதுள்ளது.

**இது தொடர்பில் கருத்து தெரிவித்த மக்கள்,...**

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இராகலை தோட்ட நிர்வாகம் தனி வீடுகளை அமைத்து கொடுக்கவென தோட்டத்தில் இலக்கம் 21 தேயிலை மலையில் இடம் ஒதுக்கி அங்கு 16 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு சுவர்கள் மாத்திரம் கட்டப்பட்டு முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்த வீடுகள் கட்டுப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ளது.மேலும் கடந்த காலங்களில் இராகலை பிரதேசத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையினால் கட்டப்பட்ட வீடுகளுக்கான சுவருகளும் தனது சக்தியை இழந்து ஆட்டம் கண்டுள்ளது.

இந்த நிலையில் தமக்கான வீடுகளும் இல்லாமல்,தற்காலிக வசிப்பிடத்தில் அடிப்படை வசதிகளும் இல்லாமல் வாழும் எமக்கு விடிவும், நிரந்தர வீட்டுக்கான தீர்வையும் பெற்று தரப்போவது யார் அரசியல்வாதிகள், தோட்ட நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி நிதியம் அல்லது இடர் முகாமைத்துவம் என்று திக்கு தெரியாது தடுமாறுகின்றோம். எனவே எங்கள் துயர் துடைக்க காலம் தாழ்த்தாது சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் இவர்கள் முன் வைத்துள்ளனர்.

**இராகலை ரமேஸ்**

---

# உயிரை பணயம் வைத்த பயணப்பாதை....



கம்பளை தொலஸ்பாகை தாமரவள்ளி தோட்டத்தில் இருந்து ராக்சாவ, பெனிலேன், மாஸ்வல, சுகதகம, முஸ்வில் ஆகிய பிரதேசங்களுக்கு செல்வதற்கான பிரதான பாலம் ஆபத்தான நிலையில் உள்ளது.இதில் பயணிக்கும் மக்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர்.

கங்கஹில பிரதேச செயலகத்திற்குட்பட்ட தாமரவள்ளி பாலம்.காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கட்டடப்பட்டு 20 வருடங்களுக்கு முன் நிலையில் பொது மக்களால் அமைக்கப்பட்ட





பலகை பாலத்திலேயே மக்கள் அபாயகரமான பயணத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்த பாலத்தில் போடப்பட்டிருக்கும் பலகை இத்துப் போய் எந்த நேரத்தில் உடைந்து விழும் என்ற அச்சத்திற்கு மத்தியில் நாளாந்தம் மாணவர்கள் மற்றும் வயோதிபர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் ஆகியோர் அவதானத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த பாலத்தின் அடிப் பகுதியை முங்கில் கம்பியே தாங்கிக் கொண்டு இருப்பதை அவதானிக்கலாம்.

இந்தப் பாலத்தை செய்து தருமாறு பல அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தாலும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்,

மேலே குறிப்பிட்ட ஐந்து ஊர்களுக்கும் இந்த பாலத்தை தவிர்த்து செல்ல வேண்டுமானால். ஆறு, ஏழு கீலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். இந்த பாலத்தின் ஊடாக சென்றால் 1km மாத்திரமே ஆகும்.

இந்த பாலத்தின் ஊடாக தொலஸ்பாகை, கம்பளை, குறுந்துவத்த, நாவலப்பிட்டி போன்ற நகரங்களுக்கு மற்றும் பாடசாலை, வைத்தியசாலை ஆகியவற்றுக்கு இந்த பாலத்தின் ஊடாகவே செல்கின்றனர் ,

இந்த பிரதேசத்தில் சுமார் 200 குடும்பங்கள் இந்த பாலத்தை பாவித்து வருவதுடன் 500 க்கு மேற்பட்ட மக்கள் இந்த பாலத்தை பிரதான பாலமாக பாவிக்கின்றனர்.

இம் மக்கள் தேயிலை தோட்டங்களிலேயே தொழில் செய்வதால் அதிக பணத்தை போக்குவரத்துக்காக செலவு செய்ய முடியாத மக்கள் கூட்டத்தினர்.

அவசர தேவைகள் மற்றும் திடீர் நேய்த்தாக்கங்களின் போது உடனடியாக செல்லமுடியாது. சொல்லொணா துயரத்தையே அனுபவிக்கின்றனர். அத்தோடு தாமரவள்ளி தோட்டத்திற்க்கு செல்லும் பாதையும் உடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

மழை காலங்களில் இந்த பாலத்தின் பயணிப்பது மிகவும் அவதானத்திற்கு உரியது. பாலத்திற்கு மேல் செல்லும் நீர் உயிராபத்தை ஏற்படுத்த கூடியதாகும்.

இந்த பாலத்தை சீர் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் நல்லாட்சி அரசு காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட போது ஆட்சி மாற்றத்தால் அத் திட்டம் கிடப்பில் போட்டப்பட்டுள்ளதாக கூறினாலும் மக்கள் கருத்துப்படி கைவிடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

**கம்பளை நிருபர்**



# போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வை கோரும் பெரிக் தோட்ட மக்கள்

ஒரு கிராமத்தின் அபிவிருத்திக்கு வீதி பாரிய பங்கை வகிக்கிறது. வீதி சீராக அமைந்திருந்தால் தான் அதில் பயணிக்கும் மக்களின் வாழ்க்கையும் சீராக அமையும். நாட்டில் வீதி அபிவிருத்தி என்பது நாட்டுக்கு பெருமையையும் அபிவிருத்தியையும் வெளிக்காட்டும்.

நமது நாட்டில் வீதி அபிவிருத்திக்கென பல்வேறு முக்கியத்துவம் கடந்த காலங்களில் வழங்கப்பட்டு அமைச்சு மற்றும் அதிகார சபைகளை பலப்படுத்தி மாகாணம், மாவட்டம், பிரதேசம் என வீதி அபிவிருத்திகளுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. வெளிநாட்டுகளும் வீதி அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்துள்ளன. இவ்வாறு நாட்டில் பல பகுதிகளில் வீதி அபிவிருத்திகளும் புதிய வீதி அமைப்புகளும் நடைபெற்று வந்தாலும் மலைசார்ந்த பகுதிகளான பொருந்தோட்ட பகுதிகள் புறக்கணிக்கப்படுவது தொடர்கிறது. இன்று நாடு சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடிக்கும் செப்பனிடப்படாத வீதிகளும் காரணமாக இருக்கலாம். ஆனால் இந்நாட்டுக்கு 200 வருடங்களை கடந்து அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் பொருந்தோட்டத்துறை சார்ந்த இடங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் இன்று வரை ஓரளவாவது நிவர்த்திக்கப்படவில்லை என்ற ஆதங்கம் இருக்கிறது.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி காலத்தில் பெருந்தோட்ட மக்களை கொண்டு ஒவ்வொரு தோட்டங்களுக்கான பிரதான வீதிகள் மற்றும் உள்ளக வீதிகள் அமைக்கப்பட்டன.

அவ்வாறாக அமைக்கப்பட்ட வீதிகள் காலத்திற்கு காலம் முறையாக பராமரிக்கப்பட்டு அவ் வீதிகள் ஊடாகவே தேயிலை ஏற்றி செல்வது, இதர போக்குவரத்துக்கள் முன்னெடுக்கப்பட்டன.

இருப்பினும் நாட்டில் பிரதான வீதிகள் நவீன கால தொழிநுட்பத்துக்கு ஏற்ப அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும் மலையக தோட்டப்பகுதிகளின் வீதிகள் அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டவில்லை. என்பதை எடுத்துக்காட்டும் பல தோட்ட வீதிகள் காணப்படுகிறது.



அந்த வகையில் வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட உடப்புஸ்ஸலாவை பிரதேசத்தில் எனிக் தோட்ட பிரிவான பெரிக் தோட்டத்திற்கு உடப்புஸ்ஸலாவை இராகலை பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் இரண்டு கிலோ மீட்டர் தூரமான பிரதான வீதி போக்குவரத்து பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் உள்ளன.

இந்த வீதியானது தோட்ட வீதியாக இருந்தாலும் இவ் வீதி ஊடாக கெப்பட்டிபொல, வெளிமடை, பதுளை போன்ற தூர பகுதிக்கு சீக்கிரமாக செல்லக் கூடிய வீதியாக உள்ளது.

அத்துடன் உடப்புஸ்ஸலாவை தும்பவத்தை, கீரியகொலை, கொண்டகலை, எனிக், பெரிக் போன்ற தோட்ட மக்கள் உடப்புஸ்ஸலாவை பிரதான நகருக்கு தினமும் வந்து செல்லும் பிரதான வீதியாகும்.

இவ் வீதி ஊடாக நாள்தோறும் உடப்புஸ்ஸலாவை, இராகலை, வலப்பனை, நில்தண்டாஹின்ன போன்ற பிரதான நகர் மற்றும் டெல்மார், உடப்புஸ்ஸலாவை பிரதேச வைத்தியசாலை மற்றும் இப் பிரதேச பிரதான பாடசாலைகளுக்கு செல்லும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பொது மக்கள் தினமும் பல சௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். மழைக்காலங்களில் இந்த வீதி ஊடாக மழை நீர் வழிந்தோடுவதால் இவ்வீதியில் பயணிப்பது முடியாத காரியமாகும்.

இன்று நாடு இருக்கும் நிலை வீதி அபிவிருத்திற்கு நீதி ஒதுக்கீடு செய்ய முடியாத காலகட்டத்தில் இப்பகுதி மக்கள் பிரதிநிதிகள் மாற்று வழிகளை கையாண்டு இத் தோட்ட மக்களின் போக்குவரத்துக்கு சௌகரியமான வழியை ஏற்படுத்தி தருமாறு மக்கள் வினயமாக கேட்டுக் கொள்கின்றனர்.




## மேஷம்

மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் புதன் வக்கிரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகோதர சகாய ஸ்தானம் மற்றும் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிக்கும் இடத்திற்கு அதிபதியான அவர் வக்கிரம் பெற்று வலிமை இழக்கும் பொழுது உடன்பிறப்புகளின் வழியே சலசலப்பு ஏற்படும். பாகப்பிரிவினை சம்பந்தமாக நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் தள்ளிப் போகலாம். உத்தியோகம் மற்றும் தொழில் குறுக்கீடுகள் அதிகரிக்கும். உங்களுக்கு வரவேண்டிய பதவி உயர்வு சக பணியாளர் ஒருவருக்கு சென்றடைலாம். ஆரோக்கியத்தில் தொல்லை குறையும். மற்றும் மருத்துவர்களின் மூலம் உடலை சீராக்கி கொள்வதே நல்லது. மாமன், மைத்துனர் வழியில் உள்ள உறவில் விரிசல் ஏற்படாமல் பார்த்து கொள்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும் .

## ரிஷபம்

மார்கழி 03ஆம் திகதி (18/12/2022)தனுசு ராசியில் புதன் வக்கிரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். வாக்கு, தானம், குடும்பம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் புத்திர ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெற்று இப்படி வலிமை இழப்பது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளால் கஷ்டம் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகி மறையும். குழந்தைகளை நெறிப்படுத்தி வளப்படுத்துவதோடு உங்கள் மேற்பார்வையிலும் வைத்துக் கொள்ளுங்கள். பணி புரியும் இடத்தில் பிரச்சினை மேல் பிரச்சினை அதிகரிக்கும்.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 4ம் இடத்திற்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். சுகஸ்தானத்திற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கிய தொல்லையால் மருத்துவச் செலவு அதிகரிக்கும். உங்கள் ராசிநாதனாகவும் புதன் விளங்குவதால் எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. இரக்க சிந்தனையின் காரணமாக சில இடையூறுகளை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. மகிழ்ச்சி குறையும். விலை உயர்ந்த பொருட்கள் அல்லது வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். உறுதியான உத்தியோக மாற்றம் கூட கைநழுவிச் செல்லலாம். இக்காலத்தில் சிறப்பு வழிபாடுகள் தேவை.

## கடகம்

உங்கள் ராசிக்கு 3 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். அவர் வக்கிரம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். 12ஆம் இடத்திற்கு அதிபதி வக்கிரம் பெறும் பொழுது பயணங்கள் பலன் தரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப முன்னேற்றத்திற்காகவும் குழந்தைகளுக்காகவும் செலவிடும் சூழ்நிலை உருவாகும். இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள். சகோதர வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பாகப் பிரிவினைகளில் தாமதம் ஏற்பட்டாலும் முடிவு நல்ல விதமாக அமையும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 2,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். தன லாபாதிபதியான புதன் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதார பற்றாக்குறை உயரும். ஒரு கடனை அடைக்க மற்றும் ஒரு கடன் வாங்குவதால் சங்கிலித் தொடர் போல கடன் சுமை கூடும். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். வாசல் தேடி வந்த ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லலாம். பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். வெளிநாடு சென்றவர்கள் அங்கே உரிய வேலை கிடைக்காமல் சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உங்கள் முன்னேற்றத்தை அவர்களிடம் சொல்வதன் மூலம் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

## கன்னி

உங்கள் ராசிக்கு 10ம் இடத்திற்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். அவர் வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது நன்மைகள் அதிகம் நடைபெறும்.கேந்ராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லம் கட்டி குடியேறும் யோகம் உண்டு. மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும் வாய்ப்பு உண்டு. தங்கு தடைகள் தானாக விலகும். தைரியத்தோடு செயல் புரிவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

## துலாம்

உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். பாக்கியஸ்தானாதிபதி வலிமை இழப்பது அவ்வளவு நல்லதல்ல. உற்றார் உறவினர்களின் பகை உருவாகும். ஊர் மாற்றம் பூர்விக சொத்து சம்பந்தமான பஞ்சாயத்துக்கள் திருப்திகரமாக அமையாது. தொழிலில் கூட்டாளிகள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். வாகனப் பழுதுகளால் வாட்டமும் வளர்ச்சியில் தளர்ச்சியும் ஏற்படும். வர்த்தகம் சார்ந்த துறைகளில் நீங்கள் செய்த முயற்சிகளில் குறுக்கீடுகள் வரலாம். பணி புரியும் இடத்தில் பண பொறுப்பில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுங்கள்.

## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். அட்டமாதிபதியான புதன் வக்கிரம் பெறுவது நன்மைதான். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். லாபாதிபதியாகவும் புதன் விளங்குவதால் அதன் வக்கிர காலத்தில் பண வரவு தாமதப்பட்டாலும் திடீர் திடீரென பெரும் தொகை வந்து மகிழ்ச்சியை தரும். வர்த்தகத் துறையில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பணி புரியும் இடத்தில் கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ற விதத்தில் சம்பளமும் கிடைக்கலாம். இலாகா மாற்றங்கள் இனிமை தரும்.

## தனுசு

உங்கள் ராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) உங்கள் ராசியிலேயே வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்துக்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வாழ்க்கைத் துணை வழியேயும் வாரிசுகளாலும் பிரச்சினைகள் உருவாகும். தீர்க்கமான முடிவெடுக்க முடியாமல் திணறுவீர்கள். திடீர் திருப்பங்கள் பலவும் வந்து சேரும். வாசல் தேடி வந்த வரன்கள் திரும்பிச் செல்லலாம். வழிபாட்டில் கூட கவனச் சிதறல் அதிகரிக்கும். தொழிலில் நண்பர்கள் நம்பி ஏமாறும் சூழ்நிலை உண்டு.

## மகரம்

உங்கள் ராசிக்கு 6 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். 6க்கு அதிபதி 12ஆம் இடத்தில் வக்கிரம் பெறுவது நன்மைதான். விபரீத ராஜயோக அடிப்படையில் திடீர் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத சிலரின் சந்திப்பால் இதயத்தில் மகிழ்ச்சி கூடும். அதே நேரத்தில் பாக்கியஸ்தானத்திற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் சொந்தங்களாலும் சொத்துக்களாலும் சில பிரச்சினைகள் தலை தூக்கும். சொத்துத் தகராறுகளால் சொந்தங்களில் ஒரு சிலர் உங்களை விட்டு விலக நேரிடும்.

## கும்பம்

உங்கள் ராசிக்கு 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022)தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். 8ம் இடத்திற்கு அதிபதியானவர் வக்கிரம் பெறுவது யோகம்தான். கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு ஏற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். பண வரவு அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும். 5க்கு அதிபதியாகவும் புதன் இருப்பதால் பூர்விக சொத்துக்கள் விற்பனையாகலாம். உற்றார் உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

## மீனம்

உங்கள் ராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மார்கழி 3ம் திகதி (18/12/2022) தனுசு ராசியில் வக்கிரம் பெற்றுள்ளார். கேந்ராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கை கூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். தாய் வழி ஆதரவு உண்டு. வீடு வாங்கும் முயற்சியில் இதுவரை இருந்த குழப்பங்கள் அகலும். திருமணம் போன்ற சுப காரியங்கள் நடைபெற வழி பிறக்கும். தெய்வப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். பணி புரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கலாம்.

# பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள்

## பொறுப்புணர்ந்து செயற்படுமா ஊடகங்கள்?

எமது நாட்டிலுள்ள பெண்கள் பல்வேறு துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் அவர்கள் எப்போதும் அனைவராலும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவ்வாறு பெண்கள் மதிக்கப்படும் பட்சத்தில் எமது நாடு முன்னேற்றமடைந்த, நாகரீகமானதொரு கட்டமைப்புக்குள் நுழைந்து விட்டமை தெட்டத் தெளிவாக புலப்படும்.



பெண்களின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பாதுகாக்கும் வகையிலும் அவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை அடியோடு இல்லாதொழிக்கும் வகையிலும் பல்வேறுபட்ட விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கொன்று பத்தரமுல்லையிலுள்ள Water's Edge Hotel இல் அண்மையில் நடத்தப்பட்டது.

'பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை ஒழிப்போம்' எனும் தொனிப் பொருளின் கீழ், பாராளுமன்ற உறுப்பினரும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் தலைவியும் வைத்தியருமான சுதர்சினி பெர்னாண்டோபிள்ளை தலைமையில் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில், பல்வேறு ஊடக நிறுவனங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கின் வளவாளர்களாக இலங்கை பாராளுமன்றத்தின் உதவி பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான டிகிரி ஜயதிலக, சர்வதேச விவகாரங்களுக்கான தேசிய ஜனநாயக அலுவலகத்தின் ஆய்வாளர் ஷிவானி பெர்னாண்டஸ், பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற பெண்கள் அமைப்பின் உப தலைவியுமான ரோஹினி விஜேரத்ன, சட்டம் மற்றும் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான அதிகாரியும் சட்டத்தரணியுமான சஜீவனி அபேகோன், மனித உரிமைகள் தொடர்பான அலுவலரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சமந்தி ஜயமான்ன பரணகம, உள, உடல் சுகாதாரம், பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் லக்ஷ்மன் சேனாநாயக, குற்றம் மற்றும் நீதி தொடர்பான அதிகாரியும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மற்றும் சமூக விஞ்ஞான பீட பேராசிரியருமான நிரஞ்சினி விஜேவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்களோ அல்லது துன்புறுத்தல்களோ இடம்பெறும் பட்சத்தில் அவற்றை ஊடகங்களில் அறிக்கையிடும் போது ஊடகவியலாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை, ஊடக ஒழுக்கநெறி மற்றும் ஊடக தர்மம் தொடர்பில் இக்கருத்தரங்கில் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்,

"மக்களின் வாழ்க்கையில் ஓரங்கமாக திகழ்கின்ற ஊடகமானது, அம்மக்களின் நன்மை, தீமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பாரியதொரு ஆயுதமாக



விளங்குகின்றது. இந்நிலையில் ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், மக்களுடன் மிகவும் நெருங்கியிருந்து சரியான தகவல்களை அவர்களுக்கு வழங்குகின்றனர்.

அந்த வகையில், மிகவும் அவதானத்துடன் தமது அறிக்கையிடலை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு ஊடகவியலாளர்களுக்கு உண்டு என்றார்.

ஆண், பெண் சமத்துவத்தின் அடிப்படையில் பெண்கள் மீதான வன்முறைகள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்களைக் கண்டித்து கடந்த நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் எனும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி, அதன் ஊடாக பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக நாம் போராட முன்வந்துள்ளோம்.

இதற்காக ஊடகங்களின் வகிபாகம் மிக முக்கியமானது என்பதுடன், அது தொடர்பில் தெளிவுபடுத்தலும் தேவையாகவுள்ளது. ஊடகவியலாளர்கள் தமது கைகளிலுள்ள பேனை, காகிதம், வீடியோ கமெரா, மைக்ரோபோன் ஆகியவற்றை புகழையும் இலாபத்தையும் தேடுவதற்காக பயன்படுத்தாது, பொறுப்புக் கூறல் மற்றும் மனித கௌரவத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும். வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான ஊடகவியலாளர்களின் அறிக்கையிடலின் போது, நபர்களின் நன்மதிப்புக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் போது, அவை மிகவும் கவலைக்குரிய விடயமாகக் காணப்படுவதுடன், அவ்வன்முறைச் சம்பவங்களை அறிக்கையிடும் போது, மனித கௌரவத்துக்கு மதிப்பளித்து பொறுப்புக் கூறலுடன் ஊடகவியலாளர்கள் நடக்க வேண்டும். அவ்வேளையில் ஊடகவியலாளர்கள் ஊடக ஒழுக்கநெறிக் கோவையை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

மேலும், வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்படும் நபர்களின் கவலை, பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை ஊடகவியலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதுடன், வன்முறைகளினால் பாதிக்கப்படும் பெண்களின் உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் அறிக்கையிடல் அமையவும் வேண்டும்" என்றார்.

"நூற்றுக்கு 52 சதவீதமான பெண்களைக் கொண்ட எமது நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின், அனைவரும் ஒருமித்துப் பயணிக்க வேண்டும் என்பதுடன், அனைவரினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாறான சூழ்நிலையிலேயே எமது நாடு முன்னோக்கிச் செல்வதற்கான சாத்தியம் உண்டு.

தாயாக, சகோதரியாக, மகளாக பெண்கள், சமூகத்தில் பல்வேறு பாத்திரங்களை வகிக்கின்றனர். இவ்வாறாக விளங்கும் பெண்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் 25 சதவீதமான பெண்கள் வன்முறைகளுக்கு உள்ளாகியிருப்பதுடன், 20 சதவீதமான பெண்கள் அவர்களின் நெருங்கியவர்களினால் வன்முறைகளுக்கு உள்ளாகியமை தொடர்பில் எமக்கு அறிய வந்துள்ளது. இதேவேளை, பொதுப் போக்குவரத்தில் 90 சதவீதமான பெண்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறான வன்முறைகள் இன, மத, மொழி பேதமின்றியும் கல்வி மற்றும் பொருளாதாரத் தராதரம் இன்றியும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்றன.

எம் அனைவருக்கும் பொறுப்புக் கூறல் காணப்படும் பட்சத்தில், பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கும் ஏனைய துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கும் ஊடகவியலாளர்கள் தமது பேனாக்கள் மூலம் முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

"பெண்களையும் சிறுவர்களையும் நாம் பாதுகாக்காவிடின் எமது எதிர்காலத்தையும் அவர்களது எதிர்காலத்தையும் வெற்றி கொள்ள முடியாமல் போய்விடும். இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாலும் ஆண், பெண் பால் வேறுபாட்டுக்கு அப்பாலும் அனைவரும் சமமானவர்களாக கருதப்பட வேண்டும். ஆனால், இவ்விடயம் எழுத்தில் உள்ளதே தவிர, நடைமுறையில் இல்லை.

எமது நாட்டில் தீர்மானங்களை எடுக்கும் நிலையில் 12 சதவீதமான பெண்களே உள்ளனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்து, அவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் எமது 16 நாட்களைக் கொண்ட வேலைத்திட்டமானது, மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதியுடன் முடிவடைந்து விடவில்லை. அது தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய தொன்றாகும். எமது பெண் சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார்.

" பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்கு பாராளுமன்றத்தில் சிறு குழுவொன்று உள்ளதுடன், சபாநாயகரின் அனுமதியுடன் ஆண், பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் தெரிவுக் குழுவொன்றும் பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் பெண்கள் முறைப்பாடுகளைச் செய்ய முடியும்" என்றார்.

எனவே, ஒருவருக்கொருவர் மதிப்பளித்து ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களைக் கொண்ட நன்மதிப்பு மிக்கதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் ஊடக ஒழுக்கக் கோவையை பின்பற்றி நடப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்றார்.



ஆர்.சுகந்தினி...

# விருந்தோம்பல்

ஆவிப்பறக்கும் சம்பாச் சோறும்
அரைத்து ஆக்கிய ஆட்டுக்குழம்பும்
அவித்த முட்டையும்
அம்மாவின் கைமணத்தில் ரசமும்
அழகாக மசித்த கத்தரிக்காய் கறியும்
ஆகா என்ன ருசி

பந்தியிலே இலை போட்டு
பக்குவமாய் நாம் அமர
பலபேரும் கூடி வந்து
பல கதைகள் அங்கு பேசி
பாயாசமும் பலகாரமும் உண்டு
பந்தியை நாம் முடித்தோம்

முடித்த வாய்க்கு முடிவிலியாய்
முற்றுப்பெற வைக்க என்று
முப்பொருளை கலந்து அங்கு
முழுதாக ஒரு தாம்பூலம்
முந்திக்கொண்டு நான் உண்டு
முடித்தேன் அந்த கறி விருந்தை

வந்தவர்கள் எல்லோரது
வக்கணையான பேச்சுக்களும்
வழுவாத நெறியினிலே
வகையான விருந்தோம்பல்
வாழ்த்தியே சென்றனரே
வந்தவர்கள் எல்லோரும்

விருந்தோம்பல் என்றாலே
விரும்பி உணவளிப்பதுவாம்
வீறு கொண்ட தமிழினத்தின்
விழுமியத்தில் அதுவும் ஒன்றாம்
விஞ்சி விடும் விலைவாசியில்
வீணடித்து விட்டிடாதே..

பிரசன்யா புகழ்
லண்டன்



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன் 29



# திருவள்ளுவத்தில் ஊழியரை ஊக்கப்படுத்தல் (Staff Motivation)

முன்னர் குறிப்பிட்டது போன்று ஊழியர் ஒரு முகாமையாளரினால் ஊக்கப்படுத்தப்படுவாரா யின் அவர் எந்தவித சோர்வும் இன்றித் தனது நிறுவனத்திற்கு உழைப்பார். அத்தகைய ஊக்கம் பெறுகின்ற ஒருவரிடம் ஆக்கம் எப்போதும் இருக் கும். இந்தக் கருத்தினை கீழ்வரும் ஈரடியில் திரு வள்ளுவர் விளக்குகின்றார்.

**"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை" (குறள் –594)**

அதாவது சோர்வு இல்லாத ஊக்கம் உடைய ஒரு வனிடம் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத் திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும் என் கிறார் திருவள்ளுவர். உண்மையில் மற்றவர்கள் எல்லாரும் செல்வத்தைத் தேடி அலையும்போது ஊக்கமுடையவனை அது தானாகவே தேடிச் சென் றடையும். திருவள்ளுவர் கூறும் ஆக்கம் என்பது செல்வம், நன்மை, உயர்வு, முன்னேற்றம் என்று பலவற்றைக் குறிக்கும். எதிர்கொள்ளும் சவால் கள் இடையூறுகளைக் கண்டு சோர்வடையாமல் கவலையடையாமல் தனது இலக்குகளை நோக்கி உழைக்கும் ஒருவனிடம் எப்போதும் முன்னேற்றம் இருக்கும். எனவே முகாமையாளர்கள் தமது ஊழி யர்கள் எதிர் நோக்கும் சவால்களை முறியடித்து முன்னேறும் வகையில் நிறுவனத்தில் சூழலை உருவாக்கி அவர்களை தொடர்ந்தும் ஊக்கப்படுத்த வேண்டும் . இதனையே ஔவையாரும் "ஊக் கமது கைவிடேல்" என்று குறிப்பிட்டார். எனவே திடமான ஊக்கமுடையவனுக்கு உறுதியாக ஆக்கம் உண்டாகும் என்பது மறுக்கமுடியாத உண்மைக் கருத்து.

எந்த ஊழியராக இருந்தாலும் அவர் தான் எடுத்த ஒரு காரியத்தினை முழுவதும் முடிக்காமல் விடக் கூடாது. அவ்வாறு குறையில் விட்டால் அதனால் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படும். எனவே ஊழியர் கள் தமது பணியினை ஒழுங்காகச் செய்து முடிக் கும் வண்ணம் முகாமையாளர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் அதற்கான சூழ்நிலை யினை நிறுவனத்தில் உருவாக்க வேண்டும். இக்கருத்தினை திருவள் ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"வினைக்கண் வினை– கெடல் ஓம்பல் வினைக்– குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு" (குறள் –612)**

தொழிலைக் குறையாக விட்டவரை உலகம் கைவிடும் ஆகையால் தொழிலில் முயற்சி இல் லாதிருத்தலை ஒழிக்க வேண்டும். செய்யும் தொழிலைக் கெடுத்துவிடாமல் அதை நிறைவாக முடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். எனவே செயல் கெடுவதற்கான கடினமான சூழலி லும் நம்பிக்கை தளராமல் முயற்சியினை இடை விடாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

உதாரணமாக நெல்லினை வயலில் விதைத் தவர்கள் தண்ணீர் பாய்ச்சுதல், உரம் போடுதல், களை பிடுங்கல், கிளி துரத்தல், அருவி வெட்டு தல், சூடடித்தல் ஆகிய செயல்களைச் செய்யாமல் நெல்லினை வீட்டிற்குக் கொண்டுபோக முடியாது. எனவே எடுத்த பணியினை அரைகுறையா கச் செய்யாது சிரத்தையோடு செய்து முடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். ஆகவே திரு வள்ளுவர் கூறுவது போன்று ஊழியர்கள் தொடர்ந் தும் தம்பணியினைச் செய்யும் வகையில் அவர் கள் தமது முயற்சியினைக் கைவிடாது இருக்கும் வகையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

ஊழியர் ஒருவர் மிகச் சிறந்த பணியினைச் செய்வதற்கு சாதனை, அங்கீகாரம், பொறுப்பு, வேலையில் முன்னேறுவதற்கான வாய்ப்பு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி போன்ற காரணிகள் காரணமாக அமையும். இந்த எல்லாக் காரணிக ளையும் ஊக்குவித்தல் வழங்கும். இவ்வாறு ஊக் குவிக்கப்படும் ஊழியர் ஒருவருக்கு உளவியல் ரீதியாக திருப்தி உணர்வு ஏற்படுகின்றது. எனவே ஊக்குவித்தல் மூலம் நிறுவனப் பணியாளர்களின் உள்ளார்ந்த உணர்வுகள் தூண்டப்படுவதனால் அவர்கள் நிறுவனத்தின் இலக்கினை நோக்கி நகர் கின்றார்கள்.

எனவே ஊக்குவித்தலானது சகலரையும் நிறுவ னச் செயற்பாடுகளில் பங்கெடுக்கச் செய்வதால், சகலரும் தீர்மானம் எடுத்தலில் பங்குபற்றுகின் றார்கள். இதனால் இவர்களிடம் "தாமே உரித்துடை யவர்" என்ற உணர்வு ஏற்படுவதன் காரணமாக நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கான உந்துசக்தி ஏற்படுகின்றது. இதானால் இத்தகைய ஊழியர்கள் மற்றவர்களிடம் எத்தகைய குறை களையும் கேளாது தமது பணிகளினை நிறுவ னத்தில் செம்மையாகச் செய்வார்கள் அத்தகைய வர்களை முகாமையாளர்கள் பாரட்ட வேண்டும். பாராட்டு ஊழியர்களைத் தமது வேலையில் ஈடு பாட்டுடன் வைத்திருக்க உதவுவதுடன் அவர்களின் அர்ப்பணிப்பை அதிகரித்து உற்பத்தித்திறனை மேம்படுத்தும். பணியாளர் பாராட்டு என்பது பணி யாளர்களின் உள்ளார்ந்த மதிப்பை ஒப்புக்கொள் ளும் முகாமையாளரின் செயற்பாடாகும். எனவே முகாமையாளர்கள் ஊழியர்களின் செயல்திறனில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக அவர்களைத் தமது குழுவின் உறுப்பினராகவும் மனிதர்களா கவும் மதிப்பதோடு அவர்களின் முயற்சிகளைக் கொண்டாட வேண்டும். இவ்வாறு பாராட்டுதல் என்பது ஊக்கப்படுத்தும் ஒரு செயல்முறையாகும் இக்கருத்தினை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய**
**வாழ்வாரே வாழா தவர்" ( குறள் –240)**

தம்மைப் பிறர் இகழாமல் வாழக்கூடியவரே வாழ்பவர், புகழைப் பெறாமல் உயிர் வாழ்கின் றவர்கள் வாழாதவர் ஆவர் என்கிறார் திருவள் ளுவர். அதாவது இகழ்ச்சி இல்லாமல் வாழ்வதே வாழ்க்கை நற்பெயர் பெறாமல் வாழ்வது வாழ்க் கையல்ல. எனவே முகாமையாளர்கள் தமது ஊழியர்களை அவர்களின் பணிக்காகப் பாராட்ட வேண்டும். அவர்கள் நல்லது செய்யும்போது பாராட்டி, முடிந்தால் பரிசு வழங்க வேண்டும். இவ்வாறு பாராட்டும், பரிசும் வழங்கும்போது சரியான முறையில் பாரபட்சமற்ற வகையில் சரியான நபருக்கு வழங்குவதை முகாமையாளர் உறுதி செய்ய வேண்டும்.

முகாமையாளர்கள் தமது ஊழியர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும் நட்புடன் பழகவேண்டும். இதன்காரணமாக ஊழியர்கள் ஊக்கம் பெற்றுத் தமது பணிகளைத் திருப்தியுடன் செவ்வனே செய் வார்கள். இதன்மூலம் நிறுவனத்தின் வினைத்தி றன் அதிகரிக்கும். இக்கருத்தினைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் தருகின்றார்.

**"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு" ( குறள் –74)**

அன்பு, பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும் என்பதனால் அது எல்லோரி டத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும் என்கிறார் திருவள்ளுவர். அன் பானது பரந்து விரிந்து அனைவரையும் நட்புடன் நோக்கும் தன்மையை வளர்த்துக்கொள்வதனால் ஊழியர்களிடம் சமூக உணர்ச்சி ஏற்படும். இதன் காரணமாக நிறுவனத்தில் பகையில்லா சூழ்நிலை நிலவும் என்பதை முகாமையாளர்கள் உணர்ந்து தமது ஊழியர்களுடன் அன்பு பாராட்டுவதன் மூலம் அவர்களினை ஊக்குவிக்கலாம் என்பது திருவள்ளுவரின் கருத்து. அதாவது முகாமையா ளர் தனது ஊழியருக்கு வழங்கக் கூடிய மிகச் சிறந்த வெகுமதியே அன்பாகும்.

இவ்வாறு முகாமையாளர்கள் தமது ஊழியர்களி டம் அன்பு பாராட்டாது மிகவும் மோசமாக நடந்து கொள்வார்கள் ஆயின் ஊழியர்கள் தமது ஊக் கத்தினை இழப்பதனால் பணிகளைச் செவ்வனே செய்யமுடியாத நிலை ஏற்படுவதனால் நிறுவனத் தின் வினைத்திறன் குறைந்துவிடும்.

முகாமையாளர்கள் ஊழியர்களிடம் அன்பு பாராட்டி சிநேகபூர்வமாக நடந்து அவர்களை ஊக் குவிக்காவிட்டால் ஊழியர்கள் ஊக்கம் குறைந்து தமது பணியினைச் செவ்வனே செய்யமாட்டார் கள். இவ்வாறு ஊக்கப்படுத்தல் என்பது முகா மைத்துவத்தில் மிகவும் முக்கியம் என்பதனை அறிந்த காரணத்தினாலேயே திருவள்ளுவர் ஊக் கமுடைமை என்றொரு அதிகாரத்தினை வைத்துள் ளார்.

தொடரும்...



பேருவளை சீனன் கோட்டை வாலிபர் ஹழ்ரா ஜெமாத்தின் கல்விப் பிரிவான பாஸியா கல்வி நிலையம் 24ஆம் 25ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ள குழந்தை இல்லாதவர்களுக்கான இலவச வைத்திய முகாம் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ் வைத்திய முகாமை நடாத்த இந்தியா சென்னையை சேர்ந்த IVF விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவினர் இலங்கையை வந்தடைந்தனர்.அவர்களை ஹழ்ரா ஜெமாஅத் நிர்வாகிக ள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள். (பேருவளை பீ.எம்.முக்தார்)

# மூளைச்சாவடைந்தவர்களின் உடல் உறுப்புகளை விமானத்தில் கொண்டு செல்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

விபத்து மற்றும் அனர்த்தங்களுக் குள்ளாகி மூளைச்சாவு அடைந்தவர்க ளின் உடல் உறுப்புகளை விமானத்தில் கொண்டு செல்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது .

விபத்துகள் மற்றும் அனர்த்தங்களுக் குள்ளாகி அதன் காரணமாக மூளைச் சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை மற்றொரு நபருக்கு மாற்றுவதற்கான விமானப் போக்குவரத்து தொடர் பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன மற்றும் சுகாதார அமைச்சின் செயலா ளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தா ஆகியோர் கடந்த 2022 டிசம்பர் 21ம் திகதி விமா னப்படை தலைமையகத்தில் கைச் சாத்திட்டனர்.

சுகாதார அமைச்சின் வேண்டுகோ ளுக்கு இணங்க கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி, இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சி 130, அண்டனோ 32, எம்ஏ60, வை 12, எம்ஐ17, பெல்412, பெல்212 மற்றும் பெல்206 ஆகிய விமானங்கள் இந்த நோயாளிகள் மற்றும் அவர்களின் உறுப்புகள் கொண்டு செல்லப்பட



பயன்படுத்தப்படும்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ் வில் இலங்கை விமானப்படை வான் செயற்பாட்டுப் பணிப்பளார் எயார் வைஸ் மார்ஷல் எதிரிசிங்க, விமா னப்படை சட்ட பணிப்பாளர் எயார் கொமடோர் சுரேகா டயஸ், விமானப் படை அதிகாரிகள், சுகாதார அமைச் சின் மேலதிக செயலாளர் டொக்டர் சுனில் டி அல்விஸ், சுகாதார சேவைகள் பணிப்பாளர், டாக்டர் அயந்தி கருணா ரத்ன, பிரதம சட்ட அதிகாரி ஏ.ஆர். அஹமட் மற்றும் வைத்திய அதிகாரி கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







கொ/ சைவ மங்கையர் வித்தியாலய 2021ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் முகாமையாளர் செல்வி மாலா சபாரட்ணம், அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக சட்டமா அதிபர் சஞ்ஜய் இராஜரட்ணம், தர்மினி இராஜரட்ணம் ஆகியோரும் சிறப்புவிருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே. நவரட்ணராஜாவும் பங்கேற்றிருந்தனர். சகலதுறை சாதனையாளர் விருதினை செல்வி. துரைசாமி ஹம்சாலினி பெற்றுக்கொண்டார்.

இளைஞர் பாராளுமன்ற பிரதியமைச்சரின் வேண்டுகோளில்

# களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க நடவடிக்கை

## பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் பேருவளை வருகை

அஜ்வாத் பாஸி

இளைஞர் பாராளுமன்ற வெளிவிவ கார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக்கின் வேண்டுகோளுக்கிணங்க களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு ஊக்குவிப்பு வழங்க பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.



பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் Tareq Mohamed Ariful Islam ஐ, இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதிய மைச்சர் அஹ்மத் ஸாதிக் அண்மையில் சந்தித்து கேட்டுக்கொண்டதற்கிணங்க களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத் துறைக்கு ஊக்குவிப்பு வழங்க உயர்ஸ்தா னிகராலயம் முன்வந்துள்ளது.





அதன் அடிப்படையில் பேருவளை அல்ஹுமைசரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கிடையில் கடி னபந்து கிரிக்கெட் போட்டி நடைபெற வுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம் நிதியுதவி வழங் கியுள்ளது.

இச்செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக் கையான, இரு அணிகளையும் அறிமு கப்படுத்தும் நிகழ்வும் வெற்றிக்கிண்ண கையளிப்பு விழாவும் (21ம் திகதி) அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானி கர் Tareq Mohame Ariful Islam கலந்து கொண்டார். மேலும் பலர் அதிதிகளாக கலந்து கொண்டனர். இரு பாடசாலை களினதும் அதிபர்கள், மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்கள், கிரிக்கெட் வீரர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் களும் கலந்து கொண்டனர். கிரிக்கெட் போட்டியானது எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

# பேருவளை கெச்சிமலை தர்காவில் புனித புஹாரி தமாம் மஜ்லிஸ்

பேருவளை.பீ.எம் முக்தார்

வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை தர்ஹா வில் நடைபெற்று வரும் வரு டாந்த புனித ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் மஜ்லிஸின் தமாம் வைபவம் இன்று 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை மற்றும் வக்ப்சபை ஆகியவற் றின் உறுப்பினர் மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்க் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், முரீதீன்களின் பங்குபற்றலுடன் நடைபெறும்.

கடந்த நவம்பர் 21ஆம் திகதி மேற்படி மஜ்லிஸ் ஆரம்பமானது. வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நாட்களில் கதீஸ் பாராயணம் மற்றும் மார்க்கச் சொற்பொழிவு இடம்பெ றுவதோடு டிசம்பர் 24ஆம் திகதி



இரவு கத்தாத் ராதிப், விஷேட மார்க் கச் சொற்பொழிவு என்பனவற்றை யடுத்து தர்காவில் அடக்கபட்டுள்ள அஷ்ஷெய்க் அஷ்ரப் வலியுல்லாஹ் ஸியாரத் நிகழ்ச்சியும் இடம்பெ றும். 25 ஆம் திகதி அதிகாலை அல் குர்ஆன் தமாம் வைபவம் இடம்பெ றுவதோடு நண்பகல் தமாம் மஜ்லிஸ் இடம்பெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 71ஆவது வருடமாகவும் நேரடி யாக ஒலிபரப்பும்.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத் உட்பட அரசியல்வாதிகள் பிரமுகர்கள் தரீக்காக் களின் இஹ்வான் கள் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள் கலந்து கொள்வர். 24ஆம் 25ஆம் திகதிக ளில் தர்காவுக்கு பெண்கள் வருவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. பெரிய கந்தூரி தமாம் நிகழ்வில் பங் குபற்றும் மக்களின் பாதுகாப்புக் கருதி பேருவளை பொலீஸார் பாது காப்பு ஏற்பாடுகளை மேற்கொண் டுள்ளனர்.

# நத்தார் சிறப்பு மலர்

## இயேசுவின் பிறப்பும் பகிர்தலுக்கான தருணங்களும்

உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் இன்று இறை மகன் இயேசு இந்த பூமியில் அவதரித்த கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடி மகிழ்கின்றனர்.

கிறிஸ்து பிறப்பிற்கு சிறந்த ஒரு வரலாறு உண்டு.

இயேசுவின் வளர்ப்பு தந்தையான யோசேப்பு தன் மனைவி மரியாளுடன் வரி செலுத்த தமது சொந்த ஊருக்கு சென்றது மறக்கமுடியாத வரலாற்றுச் சம்பவம்.



மக்கள் நெருக்கடியில் அவர்களுக்கு அப்போது தங்குவதற்கு இடம்கிடைக்கவில்லை. இறுதியில் அவர்களுக்கு ஒரு மாட்டுக்கொட்டில் தான் தங்குவதற்கு கிடைத்தது, அந்த மாட்டுத் தொழுவத்தின் வெளிப்பகுதியிலேயே இயேசுபாலனின் பிறப்பு இடம் பெற்றது.

அக்காலத்தில் இடையர்கள் மதிக்கப்படாத சூழ்நிலையில் கடவுளோ இஸ்ராயேலின் நல்ல ஆயராக பேதங்களை வகுப்புவாதங்களைக் கடந்து அவர்களுக்கு உலக இரட்சகர் பூமியில் அவதரித்த நற்செய்தியை வெளிப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் கடவுளின் மாட்சி திருக்கோவிலில் எவ்வாறு விளங்கியதோ அவ்வாறு பெத்லஹேமின் மீதும் சிறு குழந்தையின் மீதும் அந்த மாட்சி விளங்கிற்று. எதிர்பார்ப்பின் காலம் முடிந்து பெருமகிழ்ச்சியின் காலம் தொடங்கிற்று.

கடவுள் இல்லை. இல்லவே இல்லை. அவரைப் போதிப்பவன் காட்டுமிராண்டி என்பவர் ஒரு பக்கமிருக்க என் இருண்ட வாழ்வுக்கு விடியல் தரும் கடவுள் எங்கே எனத் தேடுபவர் மறுபுறம் காணப்படுகின்றனர்.

கடவுளே மீட்பர் என்று விசுவசித்து அவரது வருகைக்காக காத்து ஏங்கிக் கொண்டிருப்பவர் மற்றொரு பக்கம் அந்த நிலையில் அனைவரின் ஏக்கத்திற்கும் வினாக்களுக்கும் விடையாக அமைவதே இயேசு பாலனின் பிறப்பு.

தம் பிறப்பின் மூலம் வரலாற்றைப் பிரிக்கும் வரலாற்று நாயகனாக இயேசு திகழ்கின்றார். மீட்பின் வரலாறு உலக வரலாற்றின் ஒரு பகுதியாக விளங்குகிறது. சரியாகச் சொல்லவேண்டுமாயின் கடவுள் வரலாற்று நிகழ்வுகளை தனது மீட்பின் திட்டத்திற்கு பயன்படுத்துகிறார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது உலக வரலாறு. யோசேப்பும் நிறைமாத கர்ப்பிணியான மரியாளும் செல்வதும் தம் தலைமகனை பெற்றெடுப்பதும் மீட்பின் வரலாறு.

மீட்பின் வரலாற்று தீர்க்கதரிசனத்தின்படி தாவீதின் வழி மரபிலே மீட்பர் பிறக்கவேண்டும். தாவீதின் ஊரிலேயே பிறக்கவேண்டும் அத்துடன் மீட்பர் நசரேன் என்றும் அழைக்கப்படவும் வேண்டும். யோசேப்பு தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் நாசரேத்தில் வசிப்பவர். எனவே கடவுள் அவர்கள் வரி செலுத்தும் வரலாற்று நிகழ்வை பயன்படுத்தி அவர்களை பெத்லஹேமுக்கு வழி நடத்திச் செல்கின்றார். அங்கே நிறைமாத கர்ப்பிணியான மரியாள் மீட்பரை பெற்றெடுக்கின்றாள். பெத்லஹேம் என்ற சொல்லுக்கு உணவின் இல்லம் என்று பொருள் பிறந்த பாலகனோ தன்னையே உணவாகத் தருபவர்.

இடையர்கள் வான தூதரின் வார்த்தையைக் கேட்கும் பாக்கியம் பெற்றவர்கள். இயேசு பாலகனும் நல்ல மேய்ப்பனாக இருப்பார் என்பதாலும் பாலகனின் மூதாதையர் தாவீது இடையர் என்பதாலும் இப்பாலகனை சந்திக்கும் பாக்கியத்தை இடையர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்". இரவில் காவல்காத்த இடையர்களுக்கு வான தூதர்கள் காட்சி கொடுத்து ஒளியை நோக்கி நடத்திச் சென்றார்கள். இஸ்ராயேல் மக்கள் அடிமைகளாக இருந்தபோது இரவில் எகிப்தைவிட்டு புறப்பட்டனர்.

பாலகன் பிறந்த நேரமும் ஒரு இரவுதான். பாலகன் பிறந்ததால் அந்த இரவும் ஒளிர்ந்தது. இடையர்கள் பாவிகளாக கருதப்பட்டார்கள். பாவிகள் ஆண்டவரின் தூதரைக் கண்டால் இறந்துபோவர். (ஏசாயா 6 : 5) என்பது பழைய ஏற்பாட்டு நம்பிக்கை ஆனால் இடையர்கள் இறக்கவில்லை. அவர்கள் தூதர்களானார்கள். குழந்தை இயேசு பிறந்தவுடன் பாவிகளும் வாழ்வுபெற்றனர்.அவர் அமைதியின் அரசர். அவரது பிறப்பினால் உலகில் அமைதியின்றி வாழ்ந்த மக்களுக்கு அமைதி கிடைத்தது.

அம்புறோஸ் பீற்றர்...
(மறையாசிரியர் பிரான்ஸ்)

## இருளகற்றும் பேரொளியாய் இயேசு பாலகன்

கண்களால் தரிசிக்க முடியாத கடவுள் தொட்டுவிடும் தொலைவில் ஆன்மீக உயர்வாகி, ஆழ்மன இருளகற்றும் பேரொளியானதால் மட்டுமல்ல, அமைதிக்கான வழியை அடையாளமாய் காட்டியதால் மக்கள் அகமகிழ்ந்து கொண்டாடும் ஓர் உன்னத பெருநாளாகவும் நத்தார் பண்டிகை அமைகிறது.

பெத்லேகம் எனும் சிற்றூரில் ஏழ்மையையும் எளிமையையும் தேர்ந்தெடுத்து நம் இயேசுகிறிஸ்து மனிதம் மாண்பு பெற மனிதனானார் மானிட விடுதலையையும் மானுடம் காக்கப் பட வேண்டும் என்பதையும் அவர் போதித்தும் வாழ்ந்தும் காட்டினார்.



இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினமே கிறிஸ்மஸ் தினமாக பிரமாண்டமாக கொண்டாடப்படுகிறது. உலகின் பெரும்பாலான மக்களால் நினைவு கூறப்படுகின்றது. ஒரே பண்டிகையாகவும் கிறிஸ்மஸ் திகழ்கிறது.

'அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் மீட்பார்' (மத்தேயு 1:21)

இறையரசின் விழுமியங்களான அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், சகவாழ்வு போன்ற நெறிமுறைகளை போதனைகளாய் வெளிப்படுத்தி பாவமன்னிப்பு, இரட்சிப்பு, மனந்திரும்புதல் எனும் வலுவான நம்பிக்கையை வளர்த்து ஒரு சிறந்த உலகிற்கு வழிவகுத்தார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசி உரைத்த வாக்கு நிறைவேறும்படி கன்னிமரியாளிடத்தில் மானிடனாக அவர் அவதரித்தார். மனிதரை மீக்க மனிதனாய்ப் பிறந்து மனித வர்க்கத்தின் பாவங்களுக்காய் சிலுவை மரணத்தையேற்றார். பின்பு மூன்றாம் நாள் மகிமையாய் உயிர்த்தெழப்பட்டார்.

இதன் அடிப்படையில் நம் இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்பது மனிதனுக்காகவே ஆனதாகும். நம் கடவுளாம் இயேசு கிறிஸ்து உலகத்தை மிகவும் நேசித்தார். யோவான் 3:16ன் படி 'அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுத்தார். அதனால் அவரை விசுவாசிக்கிற அனைவரும் அழியாமல் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்' மனிதனுக்கு தேவனுடன் பேசி மத்தியஸ்தம் செய்ய யாருமு இருக்கவில்லை. ஆதலால் பிதாவானவர் தேவசாயலாக இருந்த தமது குமாரனை மனித சாயலாக மாற்றி இப் பூலோகத்திற்கு அனுப்பினார். நாம் ஆக்கினைக்குட்படாதிருக்க பிதாவானவர் சித்தம் கொண்டார். இவ்விதமாய் அமைந்தது.

'இம்மானுவேல்' என்றால் தேவன் நம்மோடு இருக்கிறார் என்பது அர்த்தமாகும். இதனை மத்தேயு நற்செய்தி 1:22:23 லும் காணலாம்;. யோவான் 3:1618 தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். வழி தப்பிப்போன எங்களை தேவன் மீட்டெடுத்தார்.

மண்ணில் வந்த விண்ணின் வேந்தனான இயேசு பாலகனின் பிறப்பின் மகிழ்ச்சி தரும் நற்செய்தி யாதெனில், எம்மை விட்டு நகர்ந்து கொண்டிருக்கும் இந்த 2022ம் ஆண்டின் சொல்லொணா பாடுகளிலும் அவரது திருநாளை கண்டுகளிக்கும் கிருபை செய்துள்ளதோடு இன்னும் ஒரு புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கும் பாத்திரவான்களாகவும் ஆசீர்வதித்திருக்கிறார். சங்கீதம் 65:11 ன் படி 'வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிறீர் உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.' இந்த நத்தார் தினத்தில் தேவனை நம்புவோம். 2023ம் ஆண்டு நமக்கு தேவன் ஆதரவாயிருந்து நம்மை காப்பாற்றுவார். இனங்களின் உறவையும் ஐக்கியத்தையும் சீராக்க, வீழ்சியடைந்து போன பொருளாதாரம் உயர்த்தப்பட மதங்கள் மத்தியில் ஒற்றுமையை கொண்டுவர அழகான இலங்கையாக மாற்றி தரும்படிக்கு நம் தேவனிடம் பிரார்த்திப்போம்.

வண. ஜெயம் சாரங்கபாணி
(தலைமைப் போதகர் முகத்துவார மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயம்) ...

### கிறிஸ்மஸ் குடில்



கிறிஸ்மஸ் குடில் கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டத்தில் மிக முக்கியமான அம்சமாக விளங்குகிறது. தொடக்க கட்டத்தில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகளை சித்தரிக்கின்ற வகையில் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் ஒத்த வேடம் அணிந்த நபர்களைக் கொண்டு தத்ரூபமாக கிறிஸ்மஸ் குடில்கள் அமைக்கப்பட்டன.

காலப்போக்கில் இடையர்கள், ஆடுகள், வானதூதர்கள், கால்நடைகள், கழுதைகள், ஒட்டகங்கள் மூன்று ஞானிகள் என கதாபாத்திரங்களை உள்ளடக்கியதாக கிறிஸ்மஸ் குடில்கள் அமைக்கப்பட்டன.

வரலாற்றில் முதன் முதலாக கிறிஸ்மஸ் குடில் அமைத்த பெருமை புனித பிரான்சிஸ் அசிசியாரையே சாரும். இவர் கி.பி. 1223 ல் இத்தாலியின் கிரேச்சோ என்ற இடத்தில், ஒரு குகையில் தத்ரூபமாக ஒரு குடிலை அமைத்தார்.

இந்நிகழ்வை கி.பி. 1260ல், புனித பொனவெந்தூர் தனது "புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வு"என்ற நூலில் பதிவு செய்திருக்கின்றார். அதைத் தொடர்ந்து அன்றைய திருத்தந்தை மூன்றாம் ஒனோரியஸ் (Pope Honorius III) அதை மந்திரித்து துவங்கி வைத்தார். இந்நிகழ்வு, மாபெரும் வரவேற்பைப் பெற்று நாடு முழுவதும் அரங்கேறியது. காலப்போக்கில் கிறிஸ்மஸ் குடிலில் கதாபாத்திரங்களைச் சித்தரிக்கின்ற உருவங்கள் வைக்கப்பட்டன.

மன்னர் மூன்றாம் சார்லஸ் தனது ஆட்சிக் காலத்தில் இந்நிகழ்வை அதிகமாகப் பிரபலப் படுத்தினார். இந்த மரபு இத்தாலி நாட்டைத் தொடர்ந்து உலகெங்கிலும் வரவேற்பைப் பெற்றது. நற்செய்தியாளர்களான மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோரின் கிறிஸ்து பிறப்பு பதிவுகள் இந்த கிறிஸ்மஸ் குடில்களின் ஆதாரங்களாக அமைகின்றன.

### கிறிஸ்மஸ் நட்சத்திரம்

நட்சத்திரங்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் மிக முக்கியமான முதன்மையான அடையாளங்களாக திகழ்கிறது. கிறிஸ்மஸ் நட்சத்திரம் கிறிஸ்துவின் பிறப்பை அடையாளப்படுத்துகிறது. விவிலியத்தில் மத்தேயு நற்செய்தியின் பதிவின்படி கிறிஸ்து பிறப்பின் நட்சத்திரம் கீழ்திசை ஞானிகளுக்குத் தோன்றி அவர்களை பெத்லகேமிற்கு வழிநடத்துகிறது.



அவர்கள் வழியில் ஏரோது அரசனைக் கண்டு யூதர்களின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே? அவரின் நட்சத்திரத்தைக் கண்டோம். அவரை வணங்க வந்தோம்"என்றும் வினவுவதாகப் பார்க்கின்றோம். விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த நட்சத்திரம், இயேசுவின் பிறப்பைக் குறிக்கின்ற முதல் அடையாளமாகவும் கடவுள் தன் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேறியதன் அடையாளமாகவும் பார்க்கப்படுகிறது.

இனம், மொழி, நாகரீகங்களைக் கடந்து, கிறிஸ்து உலக மக்கள் அனைவருக்காகவும் பிறந்திருக்கிறார் என்னும் நற்செய்தியை இந் நட்சத்திரம் அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு நட்சத்திரங்கள், கிறிஸ்து பிறப்பின் அடையாளங்களாக, வீடுகளிலும், கிறிஸ்மஸ் குடில்களிலும், கிறிஸ்மஸ் மரங்களிலும் இடம் பெற்றன.

### கிறிஸ்மஸ் மரம்

பண்டைய ஜெர்மனிய நாகரீகத்தில் பிற இனத்தவர் பசுமையான மரங்களை முடிவில்லா வாழ்வின் அடையாளங்களாக வழிபட்டு வந்தனர். தீய சக்திகளைத் துரத்துவதற்கு இவ்வழிபாடு பயன்படுத்தப்பட்டு வந்தது.

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் முதன்முதல் கிறிஸ்மஸ் மரத்தை வண்ண விளக்குகளால் அலங்கரித்துப் பயன்படுத்தியவர் மார்ட்டீன் லூத்தர் என சொல்லப்படுகிறது. ஏறத்தாழ கி.பி. 1500 ல் ஒரு கிறிஸ்மஸ் காலத்தில் பனிப்பொழிவின் மாலை வேளையில் மார்ட்டீன் லூத்தர் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.



அவர் அழகான நட்சத்திரங்களை இரசித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தார். அவ்வேளையில், ஒரு கிறிஸ்மஸ் மரக்கூட்டத்தின் இடையே இந்த நட்சத்திரங்கள் தென்படும் அழகைப் பார்த்து வியந்தார்.

உடனே வீடு திரும்பிய அவர் தன் குடும்பத்தினருடன் அந்த மகிழ்ச்சியான அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அத்தோடு நில்லாமல் விரைந்து சென்று ஒரு கிறிஸ்மஸ் மரத்தை வெட்டி வந்து அதன் கிளைகளிலே சிறு மெழுகுதிரிகளை ஏற்றி வீட்டில் அலங்கரித்து வைத்தார். அதுமுதல் ஒவ்வொரு வருடமும் அவ்வீட்டின் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் கிறிஸ்மஸ் மரம் முக்கிய பங்கு வகித்தது. காலப்போக்கில் ஜெர்மனி முழுவதுமாக பிறகு உலகம் முழுவதுமாக இந்த வழக்கம் இன்றளவும் தொடர்கிறது.

### கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள்

கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்புதல் என்பது இக் கொண்டாட்டத்தின் ஒரு சிறப்பம்சமாக இருந்து வருகிறது. பெருவாரியாக இந்த அட்டைகள் குழந்தை இயேசு, புனித யோசேப்பு, அன்னை மரியாள், இடையர்கள், ஆடு மாடுகள் ஆகியவற்றை தாங்கியதாக வடிவமைக்கப்பட்டன.



1843ல்தான் இங்கிலாந்தில் வரலாற்றில் முதன்முதலாக கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை வடிவமைக்கப்பட்டு அனுப்பப்பட்டது. John Calcott Horsley என்பவர், தனது நண்பர் Sir Henry Cole என்பவரின் ஆலோசனையின்படி முதல் வாழ்த்து அட்டையை வடிவமைத்துத் தந்தார். மிகப் பெரிய தொழில் அதிபரான Sir Henry Cole, தனது ஊழியர்களுக்கும் நண்பர்களுக்கும் அதை அனுப்பி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இதில் இடம் பெற்ற காட்சியானது இங்கிலாந்தைச் சார்ந்த ஒரு பணக்காரக் குடும்பம் சுற்றுலாவைக் கொண்டாடுவது போன்றும் அதேசமயம் மக்கள் ஏழைகளுக்கு சேவை செய்வது போன்றும் இடமபெற்றிருந்தது. கிறிஸ்துவின் பிறப்பு நம்ம சேவை மனப்பான்மை உள்ளவர்களாக மாற அழைப்பு விடுக்கின்றது.

### கிறிஸ்மஸ் தாத்தா மற்றும் பரிசுப் பொருட்கள்



கிறிஸ்மஸ் தாத்தாவையும் பரிசுப்பொருட்களையும் ஒருபோதும் வெவ்வேறாக பிரித்துப் பார்ப்பது இயலாத ஒன்று. கிறிஸ்மஸ் தாத்தாவின் அடையாளமே பரிசுப் பொருட்கள்தான். புனித நிக்கோலஸ்தான் கிறிஸ்மஸ் தாத்தாவாக அறியப்பட்டவர்.

நிக்கோலஸ் துருக்கி நாட்டில் "பாரா" என்ற இடத்தில், ஏறத்தாழ கி.பி. 270ல் பிறந்தார். அவர் "மிரா" நகரின் 4வது ஆயராக இருந்தார். அவர் ஏறத்தாழ கி.பி. 345ல் இறந்திருக்கக்கூடும் என கணிக்கப்படுகிறது. அவர் டிசம்பர் 6ம் நாள் இறந்தார். ஆனால் அவர், 19ம் நூற்றாண்டில்தான் புனிதராக உயர்த்தப்பட்டார்.

புனித நிக்கோலஸ் ஏழைகளுக்கு வாரி வழங்கும் குணம் படைத்தவராக இருந்தார். ஆனால், "உனது வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும்(மத்.6:34)"என்ற இறைவார்த்தையின் அடிப்படையில் அவர் முகம் தெரியாத மனிதராகவே தனது தாராள குணத்தை வெளிப்படுத்தி வந்தார்.

பரிசுப் பொருட்கள் வழங்குதல் என்பது கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஒரு முக்கியமாக விளங்குகிறது. கீழ்த்திசை ஞானிகள் குழந்தை இயேசுவுக்கு பரிசுகளாக, பொன், வெள்ளைப்போளம் போன்றவற்றை வழங்கினார்கள். பொன், "கிறிஸ்து அரசர்"என்பதையும், தூபம், "கிறிஸ்து இறைமகன்"என்பதையும், வெள்ளைப்போளம், "கிறிஸ்துவின், இறப்பு உயிர்ப்பு" ஆகியவற்றையும் குறிக்கின்றன.

இவ்வடையாளங்கள் இல்லாமல், கிறிஸ்மஸ் இல்லை என்று சொல்லப்படும் அளவிற்கு இவை நமது கொண்டாட்டங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. பாலன் இயேசுவின் பிறப்பு நம்மை அன்பிலும் அமைதியிலும் நிறைப்பதாக.

அருட்பணி
விமல் ஆரோக்யராஜ்...

# நத்தார் சிறப்பு மலர்

# பாலகனின் பகிர்வினை பாருக்கு பறைசாற்றுவோம்



பொருளாதார நெருக்கடி உட்பட பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் தான் 2022ஆம் ஆண்டிற்கான கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டத்தினை நாம் கொண்டாடுகின்றோம்.

கடந்த மூன்று ஆண்டுகள் இடைவெளியின் பின்பு (ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொவிட் பெருந்தொற்று) இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவானது ஓரளவிற்கு சொல்லிக்கொள்ளும் படியாக நடைபெறுகிறது.

அதே வேளையில் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும், இலங்கை கிறிஸ்தவ சம்மேளனமும் தங்களது அறிக்கையில் இவ்வருடத்திற்கான நத்தார் கொண்டாட்டத்தின்போது வீணான வெளி ஆடம்பரங்களைத் தவிர்க்குமாறு தமது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அதுமட்டுமல்லாது நத்தார் விழாக் கொண்டாட்டத்தினை அர்த்தமுள்ளதாக்க இப்பொருளாதார நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் பசி, பட்டினியால் அல்லலுறும் நபர்களுடன், குடும்பங்களுடன் உங்களிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளது.

கிறிஸ்மஸ் பெருவிழா அன்பின் விழா, மகிழ்வின் விழா, பகிர்வின் விழாவாகும். இறைவன் மானிட சமூகத்தின்மீது கொண்ட அளவுகடந்த அன்பின் நிமித்தமாக கடவுளாகிய தமது ஒரே மகனையே உலகிற்கு மனிதனாகத் தந்தார்.

அந்த மகன் மக்களோடு மக்களாக அவர்களது இன்பத்திலும் துன்பத்திலும், மகிழ்விலும் துயரத்திலும், இரண்டறக் கலந்து தனது வாழ்வினைப் பகிர்ந்து கொண்டார். அதனாற்தான் அவரது பிறப்பின்போது விண்ணகத் தூதர்கள் "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" என்று பாடியதாக லூக்கா நற்செய்தியாளர் பதிவு செய்கிறார் (லூக் 2:1314).

இயேசுவின் வரவு வாழ்வினை இழந்த மாந்தருக்கு அமைதியினை, வாழ்வினைக் கொண்டுவந்த வரவாகும். அவரது வரவால் வானகத்தூதர் அணி களிகூர்ந்து கொண்டாடியது. தாங்கள் அனுபவித்த மகிழ்வின் செய்தியினை வானதூதர்கள் முதன்முதலில் ஏழை இடையர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். அவர்களிடத்தில் சென்று: "அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள், இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார் (லூக் 2:1012).

இயேசு எனும் மெசியாவாகிய மீட்பரின் செய்தி வரவிருந்த மெசியாவைக் காண காத்திருந்த மக்களுக்கு நற்செய்தியாகும். அத்தகைய நற்செய்தி கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவாகிய நத்தார் தினத்தில் அனைவருக்கும் கிடைக்கின்றது. மீட்பராகிய இயேசு எனும் மெசியாவின் வரவு மாந்தர் வாழ்வில் எவ்வளவிற்கு அக்களிப்பினையும், மகிழ்வினையும் கொண்டு வருகிறதோ அவ்வளவிற்கு வாழ்வில் மாற்றத்தையும் கொண்டு வர வேண்டும்.

அருட்பணி அ.அ. நவரெத்தினம் ...
(நவாஜி)(முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

எவ்வாறு கடவுள் மாந்தர்மீது கொண்ட தமது அன்பினை தமது ஒரே மகனையே உலகிற்குத்தந்து பகிர்ந்து கொண்டதுபோல மாந்தரும் தங்களது வாழ்வினை அடுத்தவருடன் பகிர்ந்துகொள்ள இப்பெருவிழாக் காலம் சிறப்பான அழைப்பினைத் தருகிறது. இயேசு பிறந்த பெத்லகேம் எனும் பெயரின் பொருள் 'அப்பத்தின் வீடு' எனப்படும். இயேசு தமது பிறப்பினால் தம்மையே மாந்தருக்கு உணவாகத் தந்துள்ளார் அதேபோன்று மாந்தரும் இவ்விழாக் காலத்தில் தம்மையே அடுத்தவருக்கு உணவாக, உடையாக, உறையுள்ளாக கொடுக்க முன்வரட்டும்.

நத்தார் பெருவிழா கடவுளின் அன்பினை பகிர்கின்ற விழா என்பதனை மட்டும் மாந்தர்கள் மறவாதிருக்கட்டும். எபிரேயருக்கு எழுதிய மடல் 13:16 கூறுகிறது: "நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை" எனவே இப்பெருவிழாக் காலத்தில் அடுத்திருப்பவருக்கு நன்மை செய்வதிலும், பகிர்வதிலும் கருத்தாயிருப்போம். இதனை இன்னும் ஆழமாக்க புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலில் "வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள், விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள்" (உரோ 12:13) என்று மொழிகிறார். ஒரு ஏழைக்கு உங்களிடம் உள்ளதை இப்பெருவிழாக் காலத்தில் பகிர்ந்து பாருங்கள் அவன்/அவள் அகத்தில் எழுகின்ற மகிழ்வினை முகத்தில் காண்பீர்கள். அம்மகிழ்ச்சி உங்கள் உள்ளத்தையும் நிச்சயம் மகிழ்வுக்குள்ளதாக்கும். அது உண்மையான கிறிஸ்மஸ் மகிழ்ச்சியினை உங்களில் கொண்டுவரும்.

இதனை எவ்வாறு இப்பெருவிழாக் காலத்தில் செயல் வடிவம் உள்ளதாக மாற்றுவது என்று சிந்தித்தால் திருமுழுக்கு யோவானின் போதனை அனைவருக்கும் நினைவுக்கு வரட்டும். "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும், உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" (லூக் 3:11) என்கிறார்.

அர்த்தமுள்ள, பொருள் பதிந்த கிறிஸ்மஸ் விழாவினை கொண்டாட முனைந்தால் பகிர முன்வருவோம். ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் 'Sharing is Caring' என்பதாகும். பகிர்கின்றோம் என்றால் அடுத்தவர்மீது அக்கறை கொள்கிறோம். அன்பு கொள்கிறோம் என்பதே பொருளாகும். எங்கு அன்பு உள்ளதோ, எங்கு அக்கறை உள்ளதோ அங்கு பகிர்வு இருக்கும். இக்கிறிஸ்மஸ் காலம் பகிர்வின் காலம் என்பதனை மறந்து விடாதீர்கள். இயேசு பாலகனின் அன்பினை அனைவருடனும் பகிர்வோம். அன்பினைப் பகிர்வினால் பறைசாற்றுவோம். "கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பார், அவரே ஆசி பெற்றவர்" (நீமொ. 22:9). புனித அன்னை தெரேசாவின் வார்த்தைகளில், "கருவுற்றால் ஒரு குழந்தைக்கு தாயாக முடியும். கருணையுற்றால் ஆயிரம் குழந்தைகளுக்கு தாயாகிட முடியும்." இப்பெருவிழாக்காலம் அனைவரிலும் அன்பையும், கருணையையும், பகிர்வினையும் வளர்த்திடட்டும்.

வறுமையும், பிணியும் அகன்றிட கிறிஸ்து பிறப்பு அனைவரிலும் பிறந்திடட்டும். போதையும், வன்முறையும் அகன்றிட கிறிஸ்து பிறப்பு அனைவரிலும் மலர்ந்திடட்டும். இனமுறுகல்களும், முரண்பாடுகளும் நீங்கி உண்மை நீதியும், சாந்தியும் சமாதானமும் பெருகிட கிறிஸ்து பிறப்பு அனைவரிலும் உதயமாகட்டும்.

## விடியலென வந்துவிட்டார்

வார்த்தையது வலிமையென
வணங்கியதோர் தாயுள்ளம்
வலிகளதை தாங்கிவிட
வந்துதித்தார் தெய்வமகன்..!

வாழ்க்கையது எடுத்துரைக்க
வசதியெனும் நிலைமறுத்து
ஏழ்மையதை தேர்ந்தெடுத்தார்
எல்லோருக்கும் தெய்வமென..!

அரசனவன் பிறப்பித்த
ஆணைகளும் அழிந்தொழிய
அகிலத்தின் பார்வையிலே
அரசாள அவதரித்தார் ..!

மாளிகைகள் தேடவில்லை
மண்ணிலவர் வாழ்வதற்கு
மனிதனவன் சாயலிலே
மகவாகப் பிறந்துவிட்டார்..!

வானிலுள்ள விண்மீன்கள்
வழிதன்னைக் காட்டிடவே
ஆடுமேய்க்கும் இடையர்கள்
அவரைக்காண புறப்பட்டார்..!

பொன்பொருள் தூபமெனும்
படைப்புகளை சுமந்துவிட
மூவேந்தர் மன்னர்களும்
முத்திசெய்ய புறப்பட்டார்..!

நாடெங்கும் செய்திகளை
நாலாபுறம் அறிந்துவிட
அடையாளம் அறிந்ததடி
அவர்தான் "மெசியா"என்று..!

உலகெங்கும் உன்னதரை
உள்ளங்கள் பறைசாற்ற
நம்பாரம் தீர்த்திடவே
நம்மைத்தேடி வந்துவிட்டார்..!

பாவங்களை மீட்கவந்த
பரமனவன் பிறந்தநாளை
பக்தியோடு ஏற்றிடுவோம்
பந்தமென போற்றிடுவோம்..!

துன்பங்களை களைந்துவிட
துயரங்களை தகர்த்துவிட
விடியலென வந்துவிட்டார்..
விண்ணுலக தேவனவன்..!

அன்புயெனும் பண்புகளை
ஆணித்தரமாய் சொல்லிவிட
ஆயுளையே அவர்கொடுத்தார்
அகிலத்தின் விடுதலைக்காய்..!

அவர்பிறந்த நாளின்று
அறியாமை போக்கிடுவோம்..
பகைமையதை அறுத்தெறிந்து
பாசமோடு வாழ்த்திடுவோம்..!

ஜெக்...

# காத்திருந்தவர்கள் காணவில்லை

கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றோம்.

இறைமகன் மனு ரூபமாக விண்ணை விட்டு மண்ணகம் வந்திறங்கிய நன்னாளே கிறிஸ்து பிறப்பு விழா.

தாவீதின் சிங்காசனத்தை ஆட்சிப் பொறுப்பை ஏற்க தாவீதின் சந்ததியில் இருந்து அரசர் வருவார். அவர் வந்து ஆட்சியை புதுப்பிப்பதற்கு பல புரட்சிகளை செய்வார் என்பது மரியாளின் கீதமாகும்.

அவரது புரட்சியானது சமய, அரசியல், மற்றும் பொருளாதார ரீதியான புரட்சிகளாகும் என்பதை பரிசுத்த வேதாகமத்தில் லூக்கா1:5153ல் காண்கின்றோம்.



**மெசியாவை எதிர்பார்த்து அன்று பல குழுக்கள்**

போதனைகளில் ஈடுபட்டார்கள் பக்திக் கூட்டமாகிய பரிசேயர்கள், வேதத்தை போதிக்கும் மறைநூல் அறிஞர்கள், ஆலய பணிவிடை செய்யும் ஆசாரியர்கள், உயிர்த்தெழுதலை நம்பாத சதுசேயர்கள் என அதனை அடுக்கிக் கொண்டே போகலாம்.

எனினும் இவர்கள் எவருக்கும் மாட்டுத் தொழுவத்தில் மன்னவனாக பிறந்த இயேசுவைக் காண முடியவில்லை.

அது மட்டுமன்றி மெசியாவின் ஆட்சி தாவீதின் சிங்காசனமாகிய எருசலேமில் அவர் பிறப்பார் எனவும் எதிர்பார்த்திருக்கலாம். எனினும் அதுவும் நடைபெறவில்லை. பாலகன் ஆகிய இயேசு எருசலேமின் தெற்கு பகுதியில் தூரமான 2000 அடி கடல் மட்டத்திலிருந்து உயரத்தில் இருக்கும் ஒரு மலைப்பகுதியான பெத்லஹேம் எனும் ஊரில் இரட்சகராக பிறந்துள்ளார். இங்கே தான் மீட்பர் பிறப்பார் என மீக்கா இறைவாக்கினர் கூறியுள்ளார். (மீக்கா 5:2).

பெத்லஹேம் என்பது இரு எபிரேய வார்த்தைகளின் தொகுப்பு அதன் பொருள் 'அப்பத்தின் வீடு' என்பதாகும்.

அன்று இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைத் தனத்தின் அப்பத்தை சாப்பிட்ட மக்களுக்கு வாழ்வின் உணவாகிய இயேசு, மனிதனாக ,மீட்பராக, அமைதியின் அரசராக உலகத்தின் பாவத்தைப் போக்கும் தேவ மைந்தனாக மரியாளின் மகனாக உலகில் வந்துள்ளார்.

இந்த செய்தி தங்கள் கடமைகளை செய்து கொண்டிருந்த இடையர்களுக்கு வான தூதர்கள் மூலமாக சென்றடைகிறது. (லூக்கா 2: 820) அந்த வகையில் காத்திருந்தவர்கள் இயேசு பாலனைக் காணவில்லை. கடமையைச் செய்தவர்களே இயேசு பாலனைத் தரிசித்தார்கள்.

இன்றைய சூழ்நிலையில் நாம் கடமைக்காக வாழாமல் கடமையைச் சரியாக செய்கின்றவர்களாக வாழ்வதற்கு இன்னுமொரு கிறிஸ்து பிறப்பு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

பாலன் இயேசுவின் முகத்தைக் காணும் நாம் நம் உள்ளத்தில் பகைமையையும் பழிவாங்கும் உணர்வையும் தக்க வைப்பது முறையா?

இன்று குழந்தை இயேசு நம்மிடம் கேட்பது ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகுங்கள். இன்றுள்ள நம் சூழலில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள எல்லா அரசியல் உட்பட அனைவரும் ஒப்புரவாகுங்கள் என்பதே. எம்மிடம் உருவாகும் கடமையுணர்வும் ஒப்புணர்வும் தான் அமிழ்ந்து செல்லும் நம் நாட்டைக் காப்பாற்ற முடியும். கிறிஸ்து பிறப்பதற்கு அன்று விடுதியில் இடம் இருக்கவில்லை.(லூக்கா:2:7)

கிறிஸ்து தமக்குரிய அவர்களிடம் வந்தார் அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. (யோவான்:1:11).

இத்தகைய கசப்பான நிகழ்வு இன்றும் ஒரு தொடர்கதையாக நீண்டு கொண்டு போகிறது.

இறைமகன் நம்மை ஏற்றுக்கொள்ள மறுக்க மாட்டார். ஆனால் நாம் கடவுளை ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்.

கிறிஸ்து அழகான குடிலில் பிறப்பதை விட நமது உள்ளங்களில் பிறக்க விரும்புகின்றார். நாம் நமது இதயக் கதவை திறந்தால் அவர் உள்ளே பிரவேசிப்பார். நம்முடன் உணவு உண்பார். (திருவெளிப்பாடு 3: 20)

**கிறிஸ்து பிறக்க நம் உள்ளத்தில் இடமுண்டா?**

நாம் எம் கடமைகளை சரியாக செய்கின்றோமா? அவர் விரும்புவதுபோல் நாம் ஏழை எளிய மக்களை அன்பு செய்கிறோமோ? இக் கேள்விகளுக்கு நாம் கூறும் பதில் என்ன? எமது பதில் தான் கிறிஸ்து பிறப்பு விழாவை பொருளுள்ளதாக்கும். சிந்திப்போம். செயற்படுவோம். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் இனிய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

அருட்பணி
டி.எஸ். மதி ...

# அன்பு செய்து மன்னிப்பளிக்கும் கிறிஸ்மஸ் ஆகட்டும்



உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்று எமது இரட்சகர் இயேசு பிறந்த திருநாளை கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடுகின்றனர். கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி உலகில் அனைவரும் கொண்டாடுகின்ற ஒரு பண்டிகையாக கிறிஸ்மஸ் அமைந்துள்ளது.

கிறிஸ்மஸ் என்றாலே நம் எல்லோருக்கும் நினைவுக்கு வருவது பரிசில்கள், கிறிஸ்மஸ் கேக், நத்தார் தாத்தா போன்றவைகள்தான்.

உலக ரட்சகரான இயேசு கிறிஸ்து இந்த பூமியிலேயே தாழ்மையின் கோலமாக வந்து பிறந்து பாவிகளாகிய எங்களை மீட்பதற்கு தன்னையே எங்களுக்காக தியாகமாக்கியவர்.

கிறிஸ்துவின் பிறப்பு உலகில் அன்பையும் அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வரும் திருநாள். தன்னை தான் நேசிப்பது போல பிறரையும் நேசிக்க வேண்டும் என்று அன்பை போதித்தவர் நம் இரட்சகரே இயேசு.

அன்பை வெறும் வார்த்தைகளால் அன்றி தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டி நமக்கு போதித்தவர் அவர்.

வருடத்தின் இறுதிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் நம்மைச் சார்ந்தவர்கள் உறவுகள் அல்லது நண்பர்களுடன் கோப தாபங்களுடன் வைராக்கியத்துடன் அல்லது பொறாமையுடன் இருக்கலாம்.

இந்தக் காலம் அவ்வாறானவர்களை சந்தித்து அவர்களை மன்னித்து ஒப்புரவாகும் காலமாகும்.

அத்துடன் இன்றைய நம் சூழலில் இருப்பவரை விட இல்லாதோரே மிக அதிகமாகக் காணப்படுகின்றனர்.

அவ்வாறானவர்களுக்கு எம்மால் முடிந்தளவு உதவிகளை செய்வோம். மாற்றம் மாற்றம் என வார்த்தைகளில் மாற்றத்தை வெளிப்படுத்துவது மட்டுமின்றி மாற்றத்தை எம்மிடமிருந்து ஆரம்பிப்போம்.

அன்பு செய்வோம். மன்னிப்போம். இல்லாதோருக்கு உதவுவோம். அதுதான் நம் இரட்சகர் இயேசு விரும்பும் கிறிஸ்மஸ் விழாவாக அமைய முடியும். புதிய வருடம் சிறப்பான வருடமாக பிறக்கட்டும்.

சஜீவன் பிரசாத் ...

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## சுனாமியின் நினைவலைகள்..!

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்

கடலோடு உறவாடி
களிப்பில் நிலைத்தோம்
உடலோடு உயிரென
உப்பில் திளைத்தோம்
தேடலோடு நாளும்
மூழ்கியே களைத்தோம்
பாடலோடு கரையில்
மீன்களை விதைத்தோம்

வலையும் தூண்டிலும்
கடலை முத்தமிடும்
கலையும் கனவில்
அலையும் சப்தமிடும்
விலையும் உயர்ந்திட
வறுமை விரட்டப்படும்
உலையும் கொதித்திட
மீனே வெட்டப்படும்

என்ன நடந்ததோ
சீற்றமானது கடலும்
விண்ணைத் தொட்டிடவே
பொங்கியது அலையும்
மண்ணை நிறைத்தே
கரைதாண்டியது நீரும்
சின்னா பின்னமாகியது
மனித உடலும்

மாடி வீடுகளும்
மண்ணில் சரிந்தன
வாடியே மரங்களும்
நீரில் மிதந்தன
கூடிய உயிர்களும்
பிணமாகிப் பிரிந்தன
விடியலைத் தேடிடும்
சுனாமியின் நினைவலைகள்..!



## பாலன் வருகை

இணுவில் வாகீசன்

பால் நிலவின் ஒளியெடுத்து
பால் முகம் வடித்தெடுத்து
பாலகன் யேசு பிறப்பெடுத்தார்
பால்தரும் மாட்டுத்தொழுவத்திலே

பாலகன் யேசு பாலகனல்ல
பாவிகள் எம் மீட்பர்
பாவங்கள் நீக்கி பரிசுத்தமாக்க
பாரினில் தோன்றிய பிரான்

புத்துயிர் வருடத்தில்
புத்தொளி பரவிட
பாலனின் வரவை பார்த்திருப்போம்
பாவங்கள் நீங்கி பரிசுத்தமாவோம்

## அன்னை தெரேசா



அருளானந்தம்
ஞா.பிரகாஷ்
கந்தப்பளை

மனிதர்களுல்
புனிதராய்
வாழ்ந்து
இவ் உலகையே
அன்பினால்
அரவணைத்து
பாசம் நேசம்
கருணையிலும்
இலக்கணமாய்
திகழ்ந்தவரே ?

அன்பிற்கு
அன்னை
தெரேசா என்று
அடைமொழி
கொண்டு வாழ்ந்து
மறைந்தாயே ?

உன் இறப்பை
கண்டு கலங்காத
கண்களே கிடையாது தாயே ?
நீங்கள் மறைந்தாலும்
உங்களின் நினைவுகளும்
சேவைகளும் என்றும்
மறையாது தாயே ?

## ஆழிப் பேரலை

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

ஆழிப் பேரலையென
அடிமனதில் வேரூன்றி
ஆயிரமாயிரம் உயிர்களை
அரக்கத்தனமாய் கொன்றொழித்ததே

கண்ணிமைக்கும் நேரத்தில்
காவுகள் அரங்கேற்றப்பட்டு
களவுகளாகிப்போன உயிர்களால்
கவலைகள் இன்னும் தீரவில்லை

அலையழகைப் பார்த்தவரும்
கலையழகாய் அதை ரசித்தவரும்
விலையில்லா உயிர்களைக் கொடுத்து
நிலைகுலைந்து போனதுதான் ஏனோ

கடலின் சீற்றத்தினால்
காசினியெங்கும் களேபரம்
திடலில் உறங்கிய மனிதனும்
திணறிப் போனது பரிதாபம்

கடலின் கொந்தளிப்பில்
கதிகலங்கியே மானிடர் பலரும்
உடலில் காயங்களுடன்
உணர்வற்றுப் போனதும் வரலாறு

உயிர்களும் உடைமைகளுமாய்
உருக்குலைந்து போனதினால்
உயிரிருந்தும் இல்லாதது போல்
உறவினர்கள் பலரும் அழுகின்றனரே

எண்ணிட முடியா அழிவுகளும்
கண்ணிவெடியில்
அகப்பட்டதுபோல் கட்டடங்களும்
மண்ணில் புதையுண்டு போனதை
மறக்கத்தான் முடியுமா

இனியும் ஒரு சுனாமி
இப்பூவுலகில் வேண்டாம்
குவியும் பிரார்த்தனைகள்
குவலயத்தை நிரப்பும்

## இயேசு பாலன்

கனகசபாபதி
செல்வநேசன்
அல்வாய்

ஈசனின் தூதனாய்
தேசமே துலங்கிட
நேசனும் தோன்றினானே
பாவிகளை ரட்சித்து
பரிசுத்தம் செய்யவே
பாலனும் பிறந்தானே
ஏழையின் குடிசைக்குள்
ஏற்றிய தீபத்தில்
ஏகனும் சிரித்தானே
அன்பினால் அகிலம்
அழகாய்ச் செதுக்கவே
அதிரூபன் அழைத்தானே
மந்தைகள் மேய்த்தவன்
விந்தைகள் செய்துமே
சிந்தையைத் துலக்கினானே
சேவகம் செய்தவன்
வாசகம் தெளிந்துமே
சேவிதம் காண்போமே



## நத்தார்

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

இயற்கை நியதிகள்
இறை நியதிகள்....
இங்கே மாற்றிட முடியாதே
இறை நியதிகளை....

இருந்தும்...
இதோ மாறுகின்றது...
இறைவனாலயே
இயற்றப்பட்ட இறை நியதி....

மண்ணில் மழலை பிறக்க
அவனும் அவளும்
அத்தியவசியமன்றோ....
இருப்பினும்...
இறையற்புதம் நிகழ்ந்துவிட்டதே.....

இங்கேதான் இதயம்
இறைவனை ஏற்றுக்கொள்கின்றது....

மாசுபடா மாமங்கை
மரியமின் வயிற்றில்
மானுடம் கண்டிரா
மனிதக் கருவாய்
ஒரு மாமனிதரின்
உதிப்பு....

எந்த மனிதனும்
என்னைத் தீண்டியதில்லை...
எந்தப் பிசாசும்
என் வசம் வந்ததில்லை....
எப்படி என் வயிற்றில்
கருவாய் வந்துதித்தாய் மகனே....
ஆம் ...
தந்தையின்றியும் தாய்
கருக்கொள்வாள் ....
இது இறை சக்தி
இதை மிஞ்ச இங்கே ஏது சக்தி...

அற்புதப் புருஷராய்
அவதரித்தவர்....
தாய்மடியிலிருந்தே தன்பிறப்பை
அகிலத்தார் அறிய
அழகுற அச்சொட்டாய்
அங்கேயே உரைத்துவிடுகிறார்...

தாய்மடிக் குழந்தை
பேசிடுமா....
ஆம்...
இயேசு (ஈஸா) பேசினார்...
ஆம்...
இறை நியதி அதுவே..

இறை தூதராய் வந்துதித்தவர்
இறைவனை நெருங்கச் செய்தார்..
இழிநோய்களை இல்லாதொழித்தார்...
இன்னும் பல அற்புதங்களை நிகழ்த்தினார்...
இறை தூதர் இன்று
இருந்திருந்தால்
இந்த மதுப்பிரியர்களைக் கண்டு
இதுவல்லவே நான் காட்டிய வழியென
இதயம் நொந்திருப்பார்....

மது விலக்கி....
மனதில் ஏற்றுவோம்
மா மனிதரின்
மாசு படா வாழ்வை....

ஏனெனில்...
சீர் வாழ்வென்பது...
தோள் சுமக்கும்
சிலுவைப் பாரம்
போன்றதுதான்....



## உலகின் விடிவெள்ளி

வன்னிக்கவி லக்சன்...

பாரில் பாவங்கள் பெருகிட
மனிதர்கள் பாவிகளாய் மாறிட
உலகம் பாவ இருளில் மூழ்கியது
பாவம் போக்க இரட்சகரை தேடியது
சிருஷ்டிகரும் உலகமதை நினைத்தார்
இயேசுவாய் பூமியில் பிறந்தார்
பாவமதையும் வெற்றி கொண்டார்
இயேசுவே,
உலகின் விடிவெள்ளி
துதித்திடு நாளும் அவர் நாமம் சொல்லி

## கனவில் தோன்றிய கண்மணிகாள்

பூவை சரவணன்

சமாதானப் புறாவுக்கு
சட்டை தைத்துக் கொடுக்க
எண்ணம் கொண்ட என்
வெள்ளைப் புறா மகளே

பள்ளிக் கூட வெள்ளைத் துணி
இன்னும் கிடைக்காமல்
பதினெட்டு ஆண்டுகளாய்
பாற் கடலுக்கு அப்பால் சென்றனையே

மார்கழி இருபத்தியாறு வந்தால்
மதி மயங்கி நிலைகுறைந்து
நீங்கள் புரண்ட கரையெல்லாம்
தாங் கொணா துயரில் தேடுகின்றேன்

சுதிசேர்த்து சொற் பிழைத்தவிர்த்து
மதி நிறைந்த ஆண்டாள் திருப்பாவை
மனதில் வந்து வந்து போகிறது
மாமழையாய் கண்ணீர் சொரிகிறது

திங்கள் ஒளி முகத்தாய் நீ
தங்கையுடன் வந்தென்னை
தட்டித் தட்டி எழுப்புகிறாய்
ஆலிங்கனமாய் எழுந்தேன் அதுகனவே,

பூபாளத்தில் எழுந்தேன் உங்கள்
புன்னகை முகம் மறைந்ததுவே
கார்கால புல்வெளியாய் இன்று
காய்ந்து மனம் கனக்கிறதே,



## நத்தார் சிறப்பு

பாண்டியூர் பொன்
ஏ.பி.என். நவநீதன்

மார்கழிப் பனியில்
மாட்டுத்தொழுவமதில்
மரியின் மடியில்
இறைமகனாக எங்கள்
இயேசு பிறந்தார!
பாவக்கறை படிந்த இந்த
பாருலகைச் சீராக்கி
அன்புவழி மக்கள்
அனைவரும் வாழ்ந்திட
ஆண்டவர் இயேசு பிறந்தார்!!
பாவக்கார யூதர்களின் கண்
பார்வையிலே இயேசு குற்றவாளி
பாரச் சிலுவையினைச் சுமையாக்கி
ஆண்டவரின் சரீரத்தில் கூர்
ஆணிகளை அறைந்தது கொடுமை...
மரிக்குப் பிறந்த மகனிங்கே
மரிக்கப்பிறந்தவரா என்ன?
ஆண்டுகள் 2022 இது
ஆண்டவர் இயேசுவின் இருப்பு!
நத்தார் அவரின் சிறப்பு!

# தியாக தீபம்

பசறையூர்
ஏ.எஸ்.பாலச்சந்திரன்...



அந்த விடியற் காலைப் பொழுது ரம்மியமாகப் புலர்ந்திருந்தது. கிழக்குச் சூரியன் தன் கதிர்களை நாலாபுறமும் பரப்பிக் கொண்டிருந்தான். பறவைகளின் கீச்சிடும் ஓசை கூட நாதஸ்வரமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

இளங்காலை நேரத்து நிகழ்வுகளில் தன் இதயத்தைப் பறி கொடுத்தவனாய் சுந்தரம் அப்படியே லயித்துப்போய் இருந்தான். மனதில் மெது மெதுவாகப் பழைய நினைவுகள் வந்து மோதத் தொடங்கின. நம் ஊரில் இந்தக் காலைப்பொழுது எப்படியெப்படி எல்லாம் இருக்கும். மனிதர்கள் அசுர வேகத்தில் இயங்கிக் கொண்டிருப்பார்களே....பெரட்டுக் களத்துக்கு போவதற்கு ஆண்கள் தயாராகுவார்கள். அடுப்பை மூட்டி விட்டு ரொட்டி சுடுவதற்காக பெண்கள் கோதுமை மாவைப் பிசைந்து கொண்டிருப்பார்கள். கோழியின் கொக்கரிக்கும் ஓசை... ஆடு, மாடுகளின் மேச்சலுக்குத் தயாராகும் சுறுசுப்பான ஆட்டம், ஓட்டம், கால், முகம் கழுவ பீலியடியில் சண்டை போடும் சிறார்கள் என்று.... என்னதான் இருந்தாலும் நம்ம வூர் நம்மவூர் தான்.

"என்னங்க,... காலையிலேயே கடுமையான யோசனை போல"...ஒரு கணம் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தபோது அவன் மனைவி மேரி, தேனீரோடு நின்று கொண்டிருந்தாள். "இல்லம்மா.... ஒண்ணுமில்ல... புள்ளைங்க எழும்பிட்டாங்களா?" "இன்னைக்கு சேர்ச்சுக்கு போகனுமில்ல... ரெண்டு பேரும் நேரத்தோட எழும்பி உடுப்பெல்லாம் அயன் பண்ணுறாங்க" அப்போது தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. ஆம், இன்று நத்தார் தினமல்லவா.. அந்த நேரத்தில் அதை நினைவூட்டும் முகமாக தேவாலய காண்டாமணி ஓசையும் ஒலிக்க ஆரம்பித்தது. "தேநீர் ஆரிடப் போகுது" என்ற தன் மனைவியின் முகத்தை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தரம். கவலை ரேகைகள் முகத்தில் அவ்வப்போது சுளித்தாலும், மேரி எதையுமே காட்டிக் கொள்ளாமல் சிரித்த முகத்துடனே நின்றிருந்தாள்.

சில சமயம் அவளுக்கு இருக்கின்ற தைரியமும் தன்னம்பிக்கையும் அவனுக்கு இல்லாமல் போவதுண்டு. அவள் தரும் நம்பிக்கையில் மீண்டும் எழுந்து நிற்பான். மேரியை திருமணம் செய்த புதிதில் எப்படி வாழ்க்கையை ஆரம்பிக்க போகிறேனோ என்ற கவலை அவனுக்கு எழுந்த போதெல்லாம் அவள் அவனுக்கு தோளோடு தோளாக நின்றிருந்தாள்.

"என்னங்க என்னையே பார்த்துகிட்டு இருக்கீங்க..தேத்தண்ணியைக் குடிச்சிட்டு சீக்கிரமா நீங்களும் ரெடியாகுங்க." மேரியிடம் இருந்த தேநீர் கோப்பையை வாங்கிக் கொண்டவனாக "சரியம்மா ரெடியாகுங்க. நானும் இதோ வந்திருரன்" என்று தேநீரைப் பருகிக்கொண்டே காலைக் கடமைகளில் ஈடுபட தொடங்கினான் சுந்தரம்.

சுந்தரம் மலையகத்தில் தேயிலை தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன். அப்பாவும், அம்மாவும் தொழிலாளர்கள் அவனுக்கு இரண்டு அக்காமாரும் ஒரு தங்கையும் இருந்தார்கள். தோட்டப் பாடசாலையிலே சாதாரண தரக் கல்வியை கற்றவனுக்கு, குடும்பக் கஷ்டம் காரணமாக படிப்பை மேலும் தொடர முடியாமல் போனது. வேறு வழியின்றி தொழில் தேடித் திரிந்தான். அவன் தகுதிக்கு உள்ளூரில் பொருத்தமான தொழில் ஒன்றும் கிடைக்கவில்லை. அப்பா அம்மாவைப் போல தோட்டத்து தொழிலாளியாக தொழில் புரிய அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை.

ஆகவே ஒரு நண்பரின் உதவியோடு தொழில் தேடி தலைநகருக்கு வந்தான். தலைநகரில் உள்ள ஒரு பிரபலமான ஆடைத் தொழிற்சாலையில் உதவியாளனாகத் தான் தொழிலை தொடர்ந்தான். கிடைக்கின்ற சொச்ச வருமானத்தில் தனது செலவுகள் போக மிச்சத்தை வீட்டுக்கு அனுப்பினான். இதனால் அவன் வீட்டாரின் குடும்ப கஷ்டமும் கொஞ்சம் குறைந்தது. அவர்கள் அனைவரும் இவனையே பெரிதும் நம்பி இருந்தார்கள். லீவு கிடைக்கும் போதெல்லாம் ஊருக்கும் போய் வருவான். வீட்டுக்குப் போகும்போதெல்லாம் எல்லாம் அக்காமாரின் திருமணத்தைப் பற்றியும், தங்கையின் மேற்படிப்பை பற்றியும் அவன் அப்பா நச்சரித்தவாறு இருப்பார்.

"தம்பி... ஒவ்வொரு முறையும் அப்பா இதையே சொல்லுறாருன்னு வீட்டு பக்கம் வராம இருந்துடாதப்பா.... உன்ன விட்டா எங்களுக்கு வேறு யாரு இருக்கா" என்று அம்மா கட்டி அணைத்து உச்சி மோர்ந்து கண்ணீர் சிந்தும் போது அவனும் சேர்ந்து அழுது விடுவான்.

ஆகவே அநாவசிய செலவுகளை குறைத்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டு போனான்.

அதே ஆடை தொழிற்சாலையில் தான் மேரியும் வேலை செய்து கொண்டிருந்தாள். மேரி நீர்கொழும்புப் பகுதியை சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பெண். இருவரின் கண்களை சந்திக்க வைப்பது இறைவனின் நாடக லீலை அல்லவா.. அதே போல் தான் சுந்தரம் மேரி இருவரின் சந்திப்பும் ஆரம்பத்தில் சாதாரண நட்பாகி, காலப் போக்கில் காதலாய் மலர்ந்தது. மேரியைப் பொறுத்தவரையில் அவள் குடும்பமும் சாதாரண குடும்பம் தான். அவள் அப்பா ஒரு மீன் வியாபாரி. அவளுக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் இருந்தார்கள். குடும்ப கஷ்டம் காரணமாக அவளும் தொழில் தேடி தலைநகருக்கு வந்தவள் தான். தற்போது அந்த ஆடை தொழிற்சாலையில் தைக்கின்ற பெண்களுக்கு மேற்பார்வையாளராக இருக்கிறாள். சுந்தரம், மேரி இருவருக்குமிடையே காதல் மலர்ந்தது. மனிதன் தோன்றி மனித நாகரீகம் தோன்றாக் காலத்திலேயே மனதுக்குள் தோன்றியது காதல். நரை விழுந்த முடியினரும் கரை காணத் துடிக்கின்ற ஆசைக் கடல் இந்த காதல். அப்படியானால் இவர்கள் மட்டும் விதிவிலக்கா என்ன? காதலுக்கு இன, மத, குல பேதம் இல்லை என்பார்களே... அதே போல் தான், இந்துவான சுந்தரத்துக்கும், கிறிஸ்தவ பெண்ணான மேரிக்கும் இடையே காதல் உருவாகி புனிதமாக தொடர்ந்து கொண்டிருந்தது. மேரியின் உண்மையான காதலுக்கு சுந்தரம் அடிமையானான். தன் ஊரையும் ஏன் வீட்டையும் கூட மறந்து போனான். ஊருக்கு போவதையும் கூட குறைத்துக் கொண்டான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் மேரியின் கரத்தைப் பற்றிக் கொண்டு ஆனந்தமாய் தலை நகரை சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தான்.

அன்றொரு நாள் கடற்கரை ஓரத்தில் மேரியின் மடியில் தலை சாய்த்தவாறு காத்து வாங்கிக் கொண்டிருந்தான் சுந்தரம் அவன் தலையை கோதியவாறு மேரி "இங்க பாருங்க இனியும் நீங்க வீட்டுக்கு பணம் அனுப்புறத நிப்பாட்டுங்கோ. நாம இன்னும் எவ்வளவு நாள் தான் இப்படியே இருக்கிறது. நமக்கு ஒரு குடும்பம், வீடு, வாசல் இருக்க வேணாமா" என்றாள் சாவகாசமாக.

இதைக் கேட்டு ஒரு கணம் திடுக்கிட்ட சுந்தரம் "என்னம்மா சொல்லுற" என்றான் ஆச்சரியத்தோடு, "நான் உண்மையா உறுதியாத்தான் சொல்லுறன். எனக்கும் வயசு போகுதில்ல?" "இப்போ நம்ம கல்யாணத்துக்கு என்னம்மா அவசரம் நான் என்ன உன்னை விட்டுட்டா போக போறேன் முதல்ல அக்காமாரோட கல்யாணத்த முடிச்சிட்டு அப்புறம் பார்ப்போமே. அப்பாவால ஒண்ணும் செய்ய முடியாது. அவர் வயசாலி வேற. எனக்கு தானே அந்த பொறுப்பு". "அதெல்லாம் முடியாது நானா உங்க அக்காமாரா, இன்னைக்கே இப்பவே எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும்." மேரியின் வார்த்தைகள் கடுகடுப்பாக இருந்தது.. அவன் சற்று அதிர்ந்து போனான். "சரி சரி என்னையும் கொஞ்சம் யோசிக்க விடு." அவளை ஒருவாறு சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான். அன்று இரவு அவனுக்கு நித்திரையே வரவில்லை. விடியும் வரை ஒரே யோசனையில் புரண்டு புரண்டு இருந்தான்.

மறுநாள் விடுமுறை எடுத்துக்கொண்டு ஊருக்கு திரும்பினான். வீட்டார் இன்முகத்தோடு வரவேற்றார்கள்.

ஆனால் அவன் முகமோ வாடியிருந்தது. விடயத்தை கூறினால் வீட்டார் என்ன சொல்வார்களோ என்ற பதட்டம் வேறு. சமயம் பார்த்து மெதுவாக ஆரம்பித்தான். அப்பா ஆத்திரமடைந்தார். அம்மாவும், சகோதரிகளும் அவனை கட்டித் தழுவியவாறு அழுதார்கள்.

பொம்பள தேடவா அவ்வளவு தூரம் போன.. ஒரு வேதக்கார புள்ளையா கிடைச்சா? உனக்கு அறிவு இருக்கா? நம்ம ஜாதி என்ன? அவங்க குலம் கோத்திரம் என்ன? உனக்கு வெட்கமா இல்ல... எப்படியானாலும் ஒட்டாதே... ஒத்துப் போகாதே..... உன்னை எப்படி எல்லாம் நம்பி இருந்தேன்.. அக்காமார மறந்துட்டு உன்

கல்யாணம் பெருசா போச்சே.. நாங்க எக்கேடு கெட்டுப் போறோம். இனி இங்க திரும்பியும் பார்க்க கூடாது.. இப்போவே திரும்பி போயிடு. இல்லாட்டி நான் மகன்னு கூட பார்க்க மாட்டேன்." அப்பாவின் ஆத்திரம் அதிகரித்தது. ஒரு அரக்கனைப் போல் உருமாறி இருந்தார். "நீ போயிடுப்பா. எங்களை பத்தி கவலைப்படாதே.. நீ நல்லா இரு" அம்மா கூற". "ஆமா தம்பி எங்களுக்கு கல்யாணம்வேண்டாம்பா..நாங்களப்படியோ இருந்துட்டு போறோம்.

நீ உன் புள்ளகுட்டிகளோடு நல்லா இரு" அக்காமாரும் கூற. அதை ஆமோதிப்பது போல தங்கையும் கண்ணீரோடு தலையசைத்தாள்.. வேறு வழியின்றி வீட்டை விட்டு வெளியேறினான். நான் செய்தது தவறா சரியா என்று எனக்கே புரியவில்லை. ஒரு பைத்தியக்காரனைப் போல் தலைநகரை வந்தடைந்தேன்.

அம்மாவின் கண்ணீரும் சகோதரிகளின் வேதனைகளும் என் இதயத்தை கூறிய ஈட்டியை கொண்டு துளைத்து எடுப்பது போல் இருந்தது.

மறுநாள் மேரி எனக்காக காத்திருந்தாள். நடந்தவற்றை விவரித்தேன் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. என் கண்ணீரை மேரி கைகுட்டையால் துடைத்து விட்டாள்.

கவலைப்படாதீங்க. உங்களுக்கு நான் இருக்கேன். இன்னைக்கு என்னை அவதுறா பேசின உங்க அப்பாவே என்னை ஒருநாள் பாராட்டத்தான் போறாரு.. நாம ரெண்டு பேருமே சேர்ந்து உழைச்சி அக்காமார கரை சேர்ப்போம்.. "என்ன நம்புங்க சுந்தரம் நம்புங்க..அவள் சொன்னது அப்போதைக்கு ஆறுதல் தந்தாலும் அவனுக்கு என்னமோ பெரிய பயமாக இருந்தது.

காலங்கள் உருண்டோடின. மேரி அவனை விடவே இல்லை அவனை தைரியமாக தனது வீட்டுக்கு கூட்டிச் சென்றாள். மேரியின் வீட்டார் தம் மகளுக்காக விட்டுக் கொடுக்கச் சம்மதித்தார்கள்.

நீர்கொழும்பிலுள்ள ஒரு பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ தேவாலயத்தில் அவர்கள் முறைப்படி "சுந்தரம் மேரி" இருவரின் திருமணமும் நடந்தேறியது. அந்த தேவாலய பாதிரியாரே முன் நின்று நடத்தி வைத்தார். அத்தனை பேர் எனக்கென்று இருந்தும் கூட, யாருமற்ற அனாதையாகி விட்டோமே என்ற கவலை அவனை அவஸ்தைப்படுத்தியது.

மேரியின் வீட்டார் தமது மகளுக்கு கொடுக்க வேண்டிய சீதனப் பொருட்களோடு ஒரு தொகை பணத்தையும் சேர்த்தே தந்திருந்தார்கள். இனியும் ஆடை தொழிற்சாலையில் தொழில் புரிவதில்லை என முடிவெடுத்தார்கள். கையில் வைத்திருந்த பணத்தை கொண்டு தமக்கு தெரிந்த ஒருவரின் கடையொன்றை வாடகைக்கு வாங்கி அதில் ஒரு சாப்பாட்டுக்கடையை ஆரம்பித்தார்கள்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரர்களும் தொடர்புடைய சம்பள அளவின் ஆரம்ப சம்பள மட்டத்தில் வைக்கப்படுவார்கள்.
- சம்பந்தப்பட்ட பணியிடங்களுக்கு உள்வாரி விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்கள் தற்போதுள்ள பொது நிர்வாக சுற்றுநிரூப விதிகளின்படி தொடர்புடைய சம்பள விகிதத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

**விண்ணப்பங்கள் :**

அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தில் நிரந்தர பதவியிலிருக்கும் ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை பணிபுரியும் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

இவ் அலுவலகத்திலிருந்து அல்லது **http : www.srilankateaboard.lk** இணையதளத்திலிருந்து பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ் நகல்கள் மற்றும் தகுதி மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு **2023.01.03** க்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**2022.11.13** ஆம் திகதியன்று பத்திரிகைகளில் வெளியான எமது விளம்பரத்திற்கு பதிலளித்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க தேவையில்லை.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல.574, காலி வீதி, கொழும்பு 3.**

SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB

# தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

இந் நிறுவனத்தின் கீழ்க்காணும் நிரந்தர பதவிக்காக தகைமை உடைய இலங்கையரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) - MM 1.1 (II தரம்)

**வேலை விபரம் :** நிறுவனத்தின் சகல பொது நிர்வாக விடயங்கள் பற்றியும் பொறுப்புக்கூறல் வேண்டும்.

**தகைமைகள் : வெளி விண்ணப்பதாரிகளுக்கு (கீழே 1 அல்லது 2)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வர்த்தக/ அரச நிர்வாக/ முகாமைத்துவம்/ வணிகம்/ பொருளியல் ஆகிய துறைகளில் தரச் சித்தியுடன் பட்டம் மற்றும் அப் பட்ட தகைமையை பெற்றுக் கொண்ட பின்பு அங்கீகரிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனம், சபை, அரச திணைக்களத்தில் அல்லது தனியார் நிறுவனத்தில் பொது நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட குறைந்தபட்சம் மூன்று வருட (03) சேவை அனுபவம்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட வர்த்தக/ அரச நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வணிகம்/ பொருளியல் ஆகிய துறைகளில் விசேட பட்டம் மற்றும் அப் பட்ட தகைமையைப் பெற்றுக் கொண்ட பின்பு அங்கீகரிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனம்/ சபை/ அரச திணைக்களத்தில் அல்லது தனியார் நிறுவனத்தில் பொது நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டதாக குறைந்தபட்சம் ஐந்து வருட (05) சேவை அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**
குறித்த துறையில் கனிஷ்ட முகாமைத்துவம் (1ம் தரம்) பதவியொன்றில் ஐந்து வருட (05) சேவை அனுபவம்.

**சம்பள அளவு :** MM 1.1- ரூ. (53,175 - 10x1375 - 15x1910 - 95575)
(ஆரம்பத்தில் ரூ. 51,175/- மற்றும் அரசு அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும்)

**வயதெல்லை :** 25 வயதிற்கு குறையாது இருப்பதுடன், 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இந்த கூடிய வயதெல்லை பொருந்தாது.

### 2. பயிற்றுவிக்கும் நிபுணர் - (கணக்கு மற்றும் நிதி முகாமைத்துவம்) MM 1.1 (II தரம்)

**வேலை விபரம் :** விடயத்தோடு இணைந்த விரிவுரைகளை நடத்துதல், பெருந்தோட்டத் துறையில் பயிற்சி தேவைப்பாடுகளை மதிப்பிடல், கணக்கு மற்றும் நிதி முகாமைத்துவ துறையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடநெறிகளைத் தயாரித்தல்.

பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடநெறிகளைத் திட்டமிடல் மற்றும் நடத்துதல், பயிற்சி நிகழ்வுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்காக துணைப்பாக செயற்பாட்டை தயாரித்தல், நிறுவனத்தின் பாடநெறி / நிகழ்ச்சித் திட்டங்களின் முகாமைத்துவத் திறனை மேம்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுதல்.

**தகைமைகள் : வெளி விண்ணப்பதாரிகளுக்கு**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட அரச நிர்வாகம் / முகாமைத்துவம் / வணிக / விவசாய / பொருளியல் போன்ற துறைகளில் தரச் சித்தியுடன் விசேட பட்டம் மற்றும் பட்டத் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்பு அங்கீகரிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனம் / சபைகள் / அரச திணைக்களமொன்றில் அல்லது தனியார் நிறுவனத்தில் நிறுவன பாடத் துறையுடன் சம்பந்தப்பட்ட குறைந்த பட்சம் மூன்று வருட (03) சேவை அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**
குறித்த துறையில் கனிஷ்ட முகாமைத்துவம் (1ம் தரம்) பதவியொன்றில் ஐந்து வருட (05) சேவை அனுபவம்.

**சம்பள அளவு :** MM 1.1- ரூ. (53,175 - 10x1375 - 15x1910 - 95575)
(ஆரம்பத்தில் ரூ. 53,175/- மற்றும் அரசு அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரித்துடையராவர்)

**வயதெல்லை :** 25 வயதிற்கு குறையாது இருப்பதுடன், 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இந்த கூடிய வயதெல்லை பொருந்தாது.

### 3. பயிற்சி அளிக்கும் அதிகாரி - (கணக்கு மற்றும் நிதி முகாமைத்துவம்) பதவி - JM 1.1 (II தரம்)

**தொழில் விபரம் :** விடயம் சம்பந்தமான விரிவுரைகளை நடத்துதல், பயிற்சி நிபுணருக்கு பயிற்சி தேவைப்பாடுகளின் ஆய்வொன்றை நடத்துவதற்கு உதவுதல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், பயிற்சி நிகழ்ச்சிகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்.

**தகைமைகள் : வெளி விண்ணப்பதாரிகளுக்கு**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட முகாமைத்துவம் / வணிகம் அரச நிர்வாகம் / கணக்கியல் ஆகிய துறைகளில் நான்கு வருட விசேட பட்டத்துடன் பட்டத் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்பு அங்கீகரிக்கப்பட்ட அரச / தனியார் துறையில் குறைந்த பட்சம் ஒரு வருட (01) சேவை அனுபவம்.

**சம்பள அளவு :** JM 1.1- ரூ. (42,600 - 10x755 - 18x1135 - 70580)
(ஆரம்பத்தில் ரூ. 42,600/- மற்றும் அரசு அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரித்துரிமை பெறுவர்)

**வயதெல்லை :** 25 வயதிற்கு குறைவாக இருப்பதுடன், 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

### 4. நிகழ்ச்சித்திட்ட அதிகாரி - (பரீட்சை மற்றும் இணைப்பு) பதவி - JM 1.1 (IIம் தரம்)

**வேலை விபரம் :** உள்ளக/ வெளி பரீட்சைகளை ஒழுங்குபடுத்தல், நடத்துதல் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை குறித்த தரப்பினருக்கு விநியோகித்தல், நிறுவனத்தில் பயிற்சி நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்துதல் மற்றும் சமுகமளிப்போர் மற்றும் ஏனைய குறித்த தரப்பினருக்கிடையில் விநியோகிப்பதற்காக குறித்த கைப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் பயிற்சி செயற்பாடுகளை ஒன்றிணைத்தல், பயிற்சி தேவைப்பாடுகள் மதிப்பீடுகளை ஒழுங்கு படுத்துதல் மற்றம் பயிற்சி நிகழ்வுகளில் குறித்த செயற்பாட்டு வெளிப்பாடுகளை தயாரித்தல் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு சமுகமளிப்போருக்கு விநியோகிப்பதற்கு சான்றிதழ்களை தயாரித்தல் மற்றும் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் ஆவணப்படுத்தலை நடத்திச் செல்லல், சான்றிதழ் பத்திரங்களை வழங்குவதற்காக வருடாந்தம் சான்றிதழ் பத்திரம் வழங்கும் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல், பயிற்சி புள்ளிவிபரங்களை காலத்திற்கு ஏற்ப தயாரித்து நடத்திச் செல்லல் மற்றும் தேவைப்படும் போது அவற்றை நிறுவனத்தின் நிர்வாகசபை, அமைச்சு மற்றும் ஏனைய குறித்த நிறுவனத்திற்கு சமர்ப்பித்தல், ஒழுங்குபடுத்தல்.

**தகைமைகள் : வெளி விண்ணப்பதாரிகளுக்கு (கீழே 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக் கொண்ட முகாமைத்துவம்/ வணிகம்/ அரச நிர்வாகம்/ வர்த்தக முகாமைத்துவம்/ கணக்கியல்/ விவசாயம்/ விவசாய பொருளியல் ஆகிய துறைகளில் பட்டம்

அல்லது

2. விடயத்துறையுடன் சம்பந்தப்பட்ட அனுமதிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற தொழில்சார் பட்டய நிறுவனமொன்றில் இடைநிலை மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

பட்டத் தகைமையை பெற்றுக்கொண்ட பின்பு அங்கீகரிக்கப்பட்ட அரச/ தனியார் துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட (01) சேவை அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு (கீழே 1 அல்லது 2)**
மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

2. குறித்த துறையில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) MA 1.1 (11ம் தரம்) பதவியொன்றில் ஐந்து வருட (05) சேவை அனுபவம்.

**சம்பளம் அளவு :** JM 1.1- ரூ. (42,600 - 10x755 - 18x1135 - 70580)
(ஆரம்பத்தில் ரூ. 42,600/- அரசு அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரித்துரிமை உடையவராவர்)

**வயதெல்லை :** 25 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.

**சேர்த்துக் கொள்ளும் முறைமை :** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது தொழில்சார் நேர்முகத் தேர்வுக் குழுவினரால் நடத்தப்படும் கட்டமிடப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**பொதுவான விடயங்கள்:** மேற்படி சகல பதவிகளுக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கில மொழியை சிறப்பாக கையாளும் திறமை மற்றும் பொதுக் கணனி செயற்பாடுகளை கையாளுதல் பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.

உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்காக இரட்டை அடிப்படையில் சேவையாற்றுவதற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

மேற்படி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் குறித்த அலுவலக விடயங்களை முறையாக நிறைவேற்றுதலுக்காக உடல் மற்றும் உலரீதியான தகைமை இருப்பதுடன் சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் தலைமையகத்தில் அல்லது நாட்டின் எப்பாகத்திலும் அலுவலக விடயங்களை நிறைவேற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

**ஏனைய அனுகூலங்கள்**

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அடிப்படை சம்பளத்திலிருந்து 12 மற்றும் 3% பங்களிப்பை நிறுவனத்தினால் வழங்கப்படும். (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு அடிப்படை சம்பளத்தில் 10%ஆகும்)
- அங்கத்தவர் மற்றும் அவரது கிட்டிய குடும்ப அங்கத்தவர்களுக்கு பங்களிப்பு சுகாதார காப்புறுதி திட்டம்.
- கிட்டிய நகரங்களுக்கு போக்குவரத்து வசதிகள் (கடுவளை/ கொட்டாவ)

**விண்ணப்பிக்கும் முறை:**
உறவினரல்லாத இரு பரிந்துரைப்பவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் உங்களது முழுமையான சுயதரவுக் குறிப்பு, குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு 2023 ஜனவரி 10ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத்தின் தலைமை மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். எந்த ஒரு நிலைமையிலும் பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

**கவனிக்கவும்**
இவ் அறிவித்தல் www.nipm.gov.lk என்ற இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்**
**எம்.டி.எம். ஜயவர்தன மாவத்த, அத்தருகிரிய.**
**தொலைபேசி: 011-27702323**

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845
















## கொழும்பு 7

2 படுக்கையறைகள் (ஏசி உடனானது) 3 ஆம் மாடி தொடர்மாடி (1997 ச.அடி) புல்லர்ஸ் ஒழுங்கையில் இணைக்கப்பட்ட குளியலறைகளுடன் மற்றும் ஓரளவு தளபாடமுள்ள சமையலறை/ மரத் தரை வசிக்கும் அறை. தொடர்மாடிக்கான ஒரு ஒதுக்கப்பட்ட வாகன தரிப்பிடம்.

விலை: 55 மில்லியன் இலங்கை ரூபா.

தயவு செய்து **0757 068 068** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.







தினகரன் வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

**classified@lakehouse.lk**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு
**100/-** ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948
ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383
கயனி - 011 2 429 342

# படித்ததும் பகர்வதும் 124



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### வறுமை நிலையில்..

மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி இலங்கையின் வறுமை நிலை அதிர்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது. 2022 ஆகஸ்ட் மாதத்துக்கான இதன் அறிக்கையில் இலங்கையில் ஒரு நபரின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு குறைந்த பட்சம் மாதாந்தம் 13,810 ரூபா தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



கொழும்பு மாவட்டத்தில் இத்தொகை 14,894 ரூபா எனவும் மொனராகலை மாவட்டத்தில் 13,204 ரூபாவாகவும் இது காணப்படுகிறது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இவ்வறிக்கையின் பிரகாரம் இன்று மக்கள் வறுமை நிலையினால் கஷ்டப்படுவதை எவரும் அறியக்கூடியதாக உள்ளது.

மக்களின் பிரச்சினைகள், கஷ்டங்கள், வறுமை நிலை என்பன எல்லா காலங்களிலும் காணப்பட்டாலும், இன்றைய நிலைமைகளில் வறுமைக் கோட்டுக்கு தள்ளப்பட்டுள்ளோர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. வசதி வாய்ப்புகள் உள்ளோரும், ஏதோ ஒரு அளவில் மற்றவர்களுக்கு உதவக் கூடிய நிலை உள்ளவர்களும் இந்நிலையை புரிந்து கொண்டு, தமது சக்திக்கும், வசதி வாய்ப்புகளுக்கும் ஏற்ப தேவையுள்ளோருக்கு உதவிகள் செய்திட முன்வர வேண்டும்.

நடுத்தர மக்களில் பலர் தமது கஷ்டங்களையும், வறுமை நிலைமைகளையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்தாமல் மறைத்து வாழ்ந்தாலும், அவர்கள் தமது அன்றாட தேவைகளைக் கூட சரியான முறையில் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதே யதார்த்த நிலையாகும். இத்தகையவர்களை எம்மால் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ள முடியும். இவர்கள் மற்றவர்களிடம் கேட்டுப் பெறுவதற்கு கூச்சப்படுபவர்களாக இருப்பதனால் இத்தகையவர்களைத் தேடிப் பிடித்து நாமாகவே அவர்களுக்கு உதவிகள் செய்வது அவசியமாகும். அவர்களது துயர் களைய துணை நிற்க வேண்டும்.

நாட்டின் இன்றைய வறுமை நிலைமை, எல்லா தரப்பினரையும் ஏதோ ஒரு வகையில் பாதித்துள்ளமையினால், பாதிப்புக்கு உள்ளானோருக்கு இயலுமான சகல வழிகளிலும், தத்தமது வசதிகளுக்கேற்ப உரிய உதவிகள் செய்திட ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக முயற்சிகள் செய்திட வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**வறுமை கொடியது வதைத்திடும் தினமது**
**வலிகளைத் தருவது வாட்டியே வதைப்பது**
**வருத்தம் தருமதை வாழ்வினில் துரத்திட**
**விரும்பி உதவுவது வாழ்வினில் சிறப்பது**

## நெஞ்சோடு நெஞ்சம்




**வைரங்கள் கோடி சேர்த்து**
**வைக்கோலின் மீது அமர்த்தி**
**புன்னகையெனும் பூவிதழ் விரித்து**
**துன்பமெனும் கர்வம் தொலைத்து**
**இன்பம் எனும் மணிமுடி தந்த**
**இயேசு பிரான் பிறந்த நாள் இன்று**
**இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்.!**

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### நிஜ ஆட்ட நாயகன்!

கத்தார் 2022 உலகக்கோப்பை கால்பந்து (2022 FIFA World Cup) போட்டிகள் வெகு சிறப்பாக நடந்து முடிந்தன. முழு உலகும் வெகுவாகப் பாராட்டும் வகையில் கத்தார் இதனை மிகச்சிறப்பாக நடாத்தி முடித்து சாதனை படைத்துள்ளது.



32 நாடுகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனா அணி நடப்பு வருட சாம்பியனான பிரான்சை எதிர்த்தாடியது. இறுதிப் போட்டிக்கே உரிய, அதி உச்ச விறுவிறுப்போடு நடைபெற்ற இப்போட்டியில் மேலதிக நேரம் வரை இரு அணிகளும் கடுமையாகப் போராடி 3 க்கு 3 என சமநிலையில் இருந்த நிலையில், வெற்றியை தீர்மானிக்க தண்ட உதைகள் (penalty kick) அவசியமாகின. இதில் 4 க்கு 2 என வென்று மூன்றாவது தடவையாக உலகக்கோப்பையை வெற்றி கொண்டது ஆர்ஜன்டீனா.

இவ் இறுதிப் போட்டியில் பிரான்ஸ் வீரர் கிலியான் எம்பாப்பே மூன்று கோல்களை அடித்து ‘ஹெட்ரிக்’ சாதனை புரிந்தார். 1966ஆம் ஆண்டின் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் சோப் அர்சுட் பெற்ற ‘ஹெட்ரிக்’ற்குப் பிறகு 56 ஆண்டுகளுக்குப் பின்னர் இச்சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இச்சுற்றில் அதிக கோல்களை (எட்டு) எடுத்து தங்கக் காலணியைப் பெற்ற வீரராகவும் கிலியான் எம்பாப்பே சாதனை படைத்தார்.

ஆர்ஜன்டீனா அணித் தலைவர் லயனல் மெசி இச்சுற்றில் ஏழு கோல்களை எடுத்து சுற்றின் சிறந்த ஆட்டக்காரர் விருதைப் பெற்று தங்கப் பந்தையும் தனதாக்கிக் கொண்டார். சிறந்த கோல் காப்பாளராக எமிலியானோ மர்ட்டீனசும், சிறந்த இளம் ஆட்டக்காரராக என்சோ பெர்னாண்டசும் தெரிவாகினர். இருவரும் ஆர்ஜன்டீனா வீரர்களாவர். இறுதிப் போட்டியின் நிலைமை இதுவாயினும், 2022 உலகக்கோப்பை கால்பந்து தொடரின் உண்மையான ஆட்ட நாயகன் கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானிதான் என முழு உலகும் போற்றுகிறது.

மத்திய கிழக்கு வலய நாடொன்றில் குறிப்பாக அரபு நாடொன்றில், அதிலும் விசேடமாக பாலைவனத்தில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை முதன்முறையாக நடத்தியமை, அதற்கென புத்தம் புதிதாக பிரமாண்டமான எட்டு மைதானங்களை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நிர்மானித்தமை, உலகக்கிண்ணத்தின் 64 போட்டிகளும் நடைபெற்ற மைதானங்களில் பீர் விற்பனையை நிறுத்தியமை, யாராலும் எவருக்கும் எவ்வித இடையூறும் இல்லாத, அசம்பாவிதங்கள் ஏதுமில்லாத, யாரும் கைது செய்யப்படாத, நிகழ்வாக இம்மாபெரும் போட்டித் தொடரை நடாத்தியமை என இப்பிரமாண்ட நிகழ்வின் பிதாமகனாக இருந்தவர் கத்தார் அமீர்தான்.



இவற்றோடு இரசிகரொருவர் ஒரே நாளின் நான்கு போட்டிகளையும் மைதானத்தில் நேரடியாகக் கண்டுகளிக்கும் வாய்ப்பு, யாவருக்கும் ஐந்து நட்சத்திர அதியுயர் பாதுகாப்பு, முதன்முறையாக பெண்களும் நடுவர்களாக பங்குபற்றல், மைதானங்களில் ஜும்ஆ தொழுகைக்கான ஏற்பாடு, ஆரம்ப விழாவில் இறைமறை ஓதல், விமானத்தள நுழைவாயிலில் நபிகளாரின் அறிவுரை என அமைந்த நாட்டின் தனித்துவத்தோடு இணைந்ததான ஏற்பாடுகள் எல்லோரையும் கவர்ந்தமை கண்கூடு.

மேலும், அனைவரையும் அன்போடும் முகமலர்ச்சியோடும் வரவேற்றதோடு, கத்தாருக்கு வருகை தந்த அனைவரும் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் தமது நாடு திரும்பிச் செல்ல காரணமாக இருந்த உலகக் கோப்பையின் ஒப்பற்ற ஒருங்கிணைப்பாளராக அவர் திகழ்கிறார். இனவாதம் வகுப்புவாதத்திற்கு எதிராக அன்பையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டியதன் மூலம் இந்த உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் நிஜமான ஆட்ட நாயகனாக இவர் வரலாற்றில் இடம் பெறுகிறார்.

பல்வேறு விமர்சனங்கள், மேற்கத்திய உலகத்தினரின் எதிர்மறையான பிரசாரங்கள், வெறுப்புப் புரளிகள், அனைத்தையும் தைரியமாக முகம் கொடுத்து, வெற்றி பெற்று எல்லோரது இதயங்களையும் வென்ற கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி எல்லோரதும் பாராட்டுக்கும் உரியவர்தான்.

2022 உலகக்கோப்பை கால்பந்து தொடரின் உண்மையான ஆட்ட நாயகன் கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானியை ‘படித்ததும் பகர்வதும்’ பாராட்டி வாழ்த்துகிறது.

## புது வரவு

### நபிகளாரின் சமூக உறவு

தென் இந்திய தமிழக சட்டமன்ற உறப்பினர் எ. எச். ஜவாஹிருல்லாஹ் எழுதி, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில், இலங்கையில் வெளியிடப்பட்ட நூல் ‘நபிகளாரின் சமூக உறவு’,

இலங்கையில் பேரின மக்கள் முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும், நபிகளார் மீதும் எண்ணற்ற அபாண்டங்களை சுமத்தியுள்ள வேளையில், அவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் இந்நூல் அமைந்திருப்பதாக, நூல் வெளியீட்டின்போது, பலராலும் சிலாகித்துக் கூறப்பட்டது. இது சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

‘தமிழில் ஒரு முன்னோடியாக அமையும் இந்த நூலில் உலகில் கோடிக்கணக்கான மக்கள் பின்பற்றும் முகம்மது நபிகளாரின் சமூக உறவை ஜவாஹிருல்லா அறிமுகம் செய்கிறார்.’ என்றும், ‘மதீனாவில் ஆட்சியாளராக பொறுப்பேற்ற நிலையில் அங்கு வாழ்ந்த பன்முக சமூகத்தாருடன் நல்லுறவை நிலைநாட்ட நபிகளார் செய்து கொண்ட மதீனா பிரகடனம், யூதர்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் மட்டுமின்றி தாம் பிறந்த மக்கா நகரிலிருந்து வெளியேற்றிய மக்கத்து இறை நிராகரிப்பாளார்களுடன் செய்து கொண்ட ஹுதைபிய்யா உடன்படிக்கை முதலியவற்றை சமூக உறவுகள் கண்ணோட்டத்துடன் அலசுகின்றது இந்தப் புத்தகம்.’ என்றும் இந்நூல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.




“இன்று முஸ்லிம்கள் எதிர்நோக்கும் தனிப்பட்ட அகப் பிரச்சினை, பெரும்பான்மை வாதத்தால் உருவாக்கப்படும் புறப் பிரச்சினை ஆகியவற்றை நபிகளாரின் சமூக உறவுகளிலிருந்து கற்றுக் கொள்ள உதவுகிறது இந்த நூல்” என்று கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர் அவர்களும், “இஸ்லாம் குறித்துத் திட்டமிட்டுப் பரப்பப்படும் பல வதந்திகளுக்கும் அவதூறுகளுக்கும் தெளிவாக பதிலளிகிறது இந்தப் புத்தகம்” என்று முனைவர் தமீம் உஸாமாவும், “மனிதநேயம், சகோதரத்துவம், பிற சமயத்தினருடன் இணக்கமாக வாழ்தல் போன்றவற்றை இந்த நூல் மிகவும் சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறது.

காலத்தின் தேவைக்கேற்ற ஆக்கம்” என்று முனைவர் வி. எஸ். அன்வர் பாதுஷாஹ்வும் தெரிவித்திருக்கின்றமை இந்நூலின் சிறப்பை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. எந்தவொரு நாட்டிலும் சிறுபான்மையினராக வாழ்வோருக்குமுரிய உரிமைகளை பெரும்பான்மையினர் எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை நபிகளாரின் வாழ்விலிருந்து எடுத்துக்கூறும் இந்நூல் பல்லின மக்கள் வாழும் நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் தவறாது வாசிக்கவேண்டிய நூல் என்றால் மிகையல்ல.

## கவிக் ‘கடி’கள்

### ஹைக்கூ

தந்தையின் இறப்பு
மகன் இழக்கின்றான்.
பள்ளிப் படிப்பு

கல்வியில் கெடுபிடி
மறைந்து போகின்றன
சிறுவர் விளையாட்டுக்கள்

தொடரும் காடழிப்பு
அதிகரித்துச் செல்கின்றது
சூரிய வெப்பம்

அமோக விளைச்சல்
வேலையின்றி விவசாயி
இயந்திர அறுவடை

விவசாயத்துக்கு மழையில்லை
கடைக்கு வருகின்றன
உழுத மாடுகள்

**- நஸீரா எஸ். ஆப்தீன்**

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

---



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 32

மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# இலங்கைத் தமிழ்ச் சிறுகதை முன்னோடி இலங்கையர்கோன்

“ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன் ஈழத்தில் தோன்றிய நவீன இலக்கிய எழுச்சிக்கு தன்முயற்சியாலும் உழைப்பாலும் அடித்தளமிட்ட முன்னோடிக் கலைஞர் இலங்கையர்கோன். தென்னிந்தியாவில் சிறுகதைக்கான சிவிகையாக மணிக்கொடி தோன்றிய அதே 1933இல் இலங்கையில் எதுவித வழிகாட்டலுமின்றி தனது முதல் சிறுகதையான மரிய மகதலேனாவை கலைமகளில் வெளியிட்டு ஈழத்தமிழ் சிறுகதைக்கான மரபினையும் வரலாற்றினையும் தோற்றுவித்த முன்னோடி இவர்” எனக் குறிப்பிட்டுள்ளார் சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப், தனது இலங்கைத் தமிழ்ச் சிறுகதை முன்னோடி இலங்கையர் கோன் என்ற நூலில்.

பெண்கள் மீதான அவருடைய பரிவும் பச்சாதாபமும் அவருடைய ‘மரிய மகதலேனா என்னும் முதற்படைப்பிலேயே தோற்றம் கொள்கிறது. ஒரு சமுதாயப் பிரச்சினையான விபசாரம் பற்றியதாகவே அவருடைய முதற்கதை அமைந்தது என்பதைவிடவும் பெண்களுக்கெதிரான வீண்பழிகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் எதிரான மன வெளிப்பாடாகவே அது அமைந்தது என்பதே சரியான வாதமாக அமையலாம்.

1933இல் இவருடைய முதற்கதையான மரிய மகதலேனா கலைமகளில் பிரசுரம் பெற்றது. அப்போது இவருக்கு வயது 18தான். ஒரு 18 வயது இளைஞனுக்கு விபசாரம் என்னும் சமுதாயப்பிரச்சினையை விடவும் பெண்கள் மீதான பரிவுணர்வே கூடுதலாக இருந்திருக்கிறது. “வாழ்க்கையின் நுட்பமான உணர்வுகளில் உள்நுழைந்து நயம்காணும் ஆற்றல் கொண்டவர் இலங்கையர்கோன்” என்கிறார் கலைமகள் ஆசிரியர் அமரர் கி.வா.ஜ.

இலங்கையர்கோன் ஏழாலை என்னும் கிராமத்தில் நடராசா இளையாச்சிப்பிள்ளை தம்பதியின் மூத்த மகனாக 06.09.1915இல் பிறந்தவர். இவருக்கு தாய்,தந்தையர் இட்ட பெயர் சிவஞான சுந்தரம். இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏழாலை சைவப்பாடசாலையில் பெற்று பின்னர் மல்லாகம் இந்து ஆங்கிலப் பாடசாலையில் கற்றார். உயர் கல்விக்காக பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை ஆங்கில மொழி மூலமே பெற்ற இவர், இலண்டன் பல்கலைக் கழகத்தின் பொருளாதார இடைநிலைத்தேர்வில் சித்தி பெற்று, கொழும்பு சட்டக்கல்லூரியில் சட்டம் படித்து சட்டத்தரணியானார். பின்புபரீட்சையில் சித்தியடைந்து DRO என்னும் அரச உயர திகாரி பதவி பெற்றார். நெடுங்கேணி மட்டக்களப்பு முதலான இடங்களில் பதவி வகித்த இலங்கையர்கோனின்



நிர்வாகத்திறனும் நேர்மையும் பலராலும் பாராட்டப் பெற்றன.

இவருக்குத் தமிழ் ஆர்வம் ஏற்பட்டபின் தமிழாசிரியர்கள், பண்டிதர்களைத் தேடிப்போய் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் புராண இதிகாசங்களையும் கற்றார். தலைமை ஆசிரியராக இருந்த பண்டிதர் த.பொ. கார்த்திகேசனிடம் சிலப்பதிகாரத்தைக் கற்றுத் தேர்ந்தார். சுப்பிரமணியம், செல்லப்பா ஆகிய ஆசிரியர்களிடம் தமிழ்கற்று பாலபண்டிதர் பரீட்சைக்குத் தோன்றியிருந்தார். முறையாகத் தமிழ்கற்க விரும்பிக் கற்ற இலங்கையர்கோன் சமஸ்கிருதம் இலத்தீன் மொழிகளையும் கற்றுணர்ந்தார். இவருக்குத் தமிழார்வம் ஏற்பட்ட பின் இலங்கையர்கோனின் கல்விப்பின்னணியும் காரியாதிகாரியாகக் கடமை செய்த நிர்வாகப்பின்னணியும் அவரது சிறுகதைப் படைப்புக்களின் நவீன பண்புகளையும் களங்களையும் நிர்ணயித்திருக்கின்றன என்கிறார் செங்கை ஆழியான்.

அக்காலக் கல்வி முறைப்படி ஆங்கில மொழிமூலமே தனது கல்வியைப் பெற்ற இலங்கையர்கோன் ஆங்கில மொழியில் மிகுந்த தேர்ச்சி பெற்று அந்த ஆங்கில மொழிப்புலமை மூலம் ஆங்கில இலக்கியங்கள் மீதான நாட்டம் கொண்டவராக மாறினார். சிறுகதை, நாவல் போன்ற புத்திலக்கிய வடிவங்கள் ஆங்கில இலக்கியங்கில் தோன்றி வேகமாக வளர்ச்சி பெற்று வரும் சூழல் அவருடைய ஆங்கில இலக்கிய அறிவுக்குப் புலனாகியது.

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் 1930 தொடக்கம் சிறுகதை உருவப் பிரக்ஞையுடன் எழுதப்படக்கூடிய காலம் உருவானது. இதற்குச் சாதகமாக இரண்டு காரணிகள் அமைந்தன. ஒன்று ஆங்கிலக் கல்வியின் பயனாக எழுத்தாளர்களுக்கு அறிமுகமான சிறுகதை இலக்கியம் பற்றிய பரிச்சயம். மற்றையது தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த சுதந்திரச்சங்கு, கிராம ஊழியன், நவசக்தி, மணிக்கொடி, கலைமகள் போன்ற இதழ்கள் மூலம் அறிமுகமான சிறுகதைகள் ஏற்படுத்திய அருட்டுணர்வு.

ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர்கள் பலரும் இந்த இரு நிலைமைகளுக்கும் ஆட்பட்டிருந்தனர். சிறுகதை எனும் இலக்கிய வகைமையை அவரவர் தத்தமது அறிவு, அனுபவம், திறன் சார்ந்து கையாளக்கூடிய நுட்பங்களுடன் படைப்பாக்க உந்துதல் மேலெழ வெளிப்பட்டனர். இவ்வாறு வந்தவர்தான் இலங்கையர்கோன் எனக்குறிப்பிட்டுள்ளார் தெ. மதுசூதனன்.

இலங்கையர்கோன் இலங்கை நிருவாக சேவையில் உயர் அதிகாரியாக இருந்து பணிபுரிந்தவர். இவரது அனுபவம் வெவ்வேறுபட்ட களங்கள் நோக்கி கவனம் குவிக்க வைத்தது. ஆங்கில இலக்கிய ஊடாட்டம் இவரது படைப்பாளுமையில் மிகுந்த தாக்கம் செலுத்தியது.

ஆரம்பத்தில் பல ஆங்கிலக் கதைகளை மொழி பெயர்த்தார். இதன்மூலம் கதைகூறும் முறைகளின் சில அடிப்படையான நுட்பங்களை அறிந்து தெளிந்து கொண்டார். மேலும் இதிகாச சரித்திரக் கதைக்கருக்களை வைத்துக்கொண்டு சுலபமாக எழுதும் பயிற்சியில் ஈடுபட்டார். இவையாவும் இலங்கையர்கோன் என்னும் படைப்பாளியைப் பட்டைதீட்ட உதவின எனலாம். இதனால் நவீன சிறுகதையின் அம்சங்களை, பண்புகளை உள்வாங்கிய படைப்புகள் இவரிடம் இருந்து வெளிவரத் தொடங்கின. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழகேசரியிலும் சிறுகதைகள் எழுதி வந்தார். வெள்ளிப் பாதசரம், மனிதக் குரங்கு, மச்சாள், சக்கரவாகம், நாடோடி, வஞ்சம், கடற்கரைக்கிளிஞ்சல் முதலான கதைகளில் யாழ்ப்பாணம் களமாக அமைந்தது. இந்த மண்ணின் வாழ்க்கையும் மனித உறவுகளும் கலாசாரப் பெறுமானங்களும் சிறுகதையின் பொருளாக அமைந்தன. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையில் புதிய செல்நெறிப் போக்குகள் தடம்பதிக்க இலங்கையர்கோன் காரணமாக அமைந்தார்.

இவரது ஆதர்ச எழுத்தாளராக கு.ப.ராஜகோபாலன் விளங்கினார். இருப்பினும் தனக்கென்று தனித்துவம் வாய்ந்ததொரு நடையைப் பின்பற்றி வந்தார். உரையாடல்கள் வாயிலாகச் சம்பவங்களை விளக்கிச் சொல்லும் திறன் இயல்பாக இருந்தது. இதைவிட மனவுணர்வுகளின் அடிப்படையிலான முரண், மோதல் இவற்றை நுட்பமாகப் பதிவுசெய்யும் ஆற்றல் கொண்டிருந்தார். குறிப்பாக உணர்வு பூர்வமான சித்திரிப்புக்கு அழுத்தம் கொடுத்தார். ஆண்பெண் உறவு நிலையில் எழக்கூடிய மாற்றங்கள், எண்ணவோட்டங்கள் அற்பமானவையாக இருந்த போதும் அவை எத்துணை அற்புதமான நெருடல்களையும் நெருக்கங்களையும் உருவாக்கும் என்பதனை 'வெள்ளிப் பாதசரம்” கதை நுட்பமாகப் பதிவு செய்கிறது. வாழ்க்கையின் நுட்பமான உணர்ச்சிகளில் உள்நுழைந்து நயம் காணும் ஆற்றல் இருந்த அளவுக்கு, அவற்றின் விளைவாக காத்திரமான படைப்புகள் இவரிடமிருந்து வெளிவரவில்லை. இதே காலகட்டத்தில் புதுமைப்பித்தன் போன்ற ஆளுமைகள் தமிழில் ஏற்படுத்திய புதிய சலனங்கள் புதுப்பார்வை போல் இவரால் புதுத் தடத்தில் கனதியாக வெளிப்பட முடிய வில்லை.

இருப்பினும் ஈழத்துத் தமிழ்ச்சூழலில் முகிழ்த்து வந்த படைப்பாக வெளியில் இலங்கையர்கோன் ஒரு தொடக்கமாக மெதுமெதுவாக நகர்கின்றார். பெரும் பாய்ச்சல் மடைமாற்றங்களுக்கு தளமாற்றம் செய்தவர் என்று கூறமுடியாதுதான். ஆனால் இந்த மரபின் தொடர்ச்சி பின்னால் உருவான படைப்பாக்கச் செழுமைக்கு வளம் சேர்த்தது. மண்வாசனை மிகு இலக்கியங்கள் உருவாக்கப்படுவதற்கும் சாதகமான சூழல்களை உருவாக்கிக் கொடுத்தது.

முப்பதுகளில் சிறுகதைகளுடன் ஆரம்பித்த இலங்கையர்கோனின் படைப்புப் பயணம் புராணம், இதிகாசம், வரலாறு, சமூகம் என பலவகை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் மூலம் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துறைக்கான வரலாற்றை ஏற்படுத்தியது இவரது இலக்கியப்பயணம்.

இலங்கையர்கோன் சிறுகதைகள் மட்டுமின்றி நாடகம் எழுதுவதிலும் அக்கறை கொண்டிருந்தார். குறிப்பாக இவர் வானொலிக்காக எழுதிய நாடகங்கள் இவருக்குப் புகழ் சேர்த்தன. மேடை நாடகங்களிலும் தனது கவனத்தைச் செலுத்தினார். பச்சோந்தி, லண்டன் கந்தையா, விதானையார் வீட்டில், மிஸ்டர் குகதாசன் ஆகியன யாழ்ப்பாணத்தில் மேடை ஏறிய நாடகங்கள்.



இவர் ஆரம்பத்தில் மொழி பெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டுப் பின்னர் சிறுகதைகள் எழுத ஆரம்பித்துத் தொடர்ந்து நாடகம் எழுதுவதில் அதிகம் ஆர்வம் கொண்டவராக இருந்தார். மட்டக்களப்பில் அவர் காரியாதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது தனது 46வது வயதில் (15.11.1962) காலமானார். இதற்குள் இலங்கையர்கோன் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடிப் பரம்பரையுள் ஒருவராக வாழ்ந்துள்ளார். ஈழத்து விமரிசனச் சூழல் இவரை இன்னும் முழுமையாக மதிப்பிடவில்லை. ஆனால் இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது.

இவரது வெள்ளிப்பாதசரம் என்னும் சிறுகதைத் தொகுப்பு 1962ல் கி.வா. ஜகந்நாதனின் மதிப்புரையுடன் வெளிவந்தது. தற்போது இந்நூல் 3ஆம் பதிப்பாக மித்ர வெளியீடாக வெளி வந்துள்ளது.

# சிறுவர் உலகம்
சுகந்தி



குறளமுதம் :

**கல்வி: யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு**

**தெளிவுரை :**

கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவா யினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 43

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| | 14 | 15 | | | 16 |
| 17 | 18 | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | 25 | |

பெயர் ..........................................

வகுப்பு ..........................................

தொலைபேசி இல ..........................................

பாடசாலை பெயர் ..........................................

வதிவிட முகவரி ..........................................

..........................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலகெங்கும் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்களுக்கு இன்றைய நாள் மிகவும் புனிதம் நிறைந்தது. உலக மக்களை மீட்க வந்த இயேசு பாலன் அவதரித்த நன்னாள்.

(8) நாகணவாய் என்ற மற்றொரு பெயர் கொண்ட இப்பறவையானது பார்த்து இரசிக்கக் கூடியது. அலகு மற்றும் கண்களின் அருகில் மஞ்சள் நிறம் கொண்ட பறவை.

(10) சோறு மாத்திரம் இருந்தால் போதாது. அதனுடன் சேர்த்து உண்பதற்குத் தேவையானது இது. (தலைகீழான சொல்)

(12) உலகின் மேற்பரப்பில் சுமார் முக்காற்பங்கு இதுதான். ஆழமாக உள்ளதால் இக்காரணப்பெயர் வந்தது. (தலைகீழான சொல்)

(14) முட்டைக்குள் உள்ளது. (தலைகீழான சொல்)

(17) ஏரி, ஆறு, கடல், கடனீரேரி போன்று இதுவும் நீர்நிலைகளில் ஒன்று. (தலைகீழான சொல்)

(19) ஆகாயத்தில் எப்போதும் அசைந்தபடியே காணப்படும்.

(22) உருவத்தில் மிகச் சிறியதாக இருப்பினும் உணவுக்கு சுவையூட்டியாகச் சேர்க்கப்படும் போது மிகவும் சுவை தருவது.

**மேலிருந்து கீழ்**

(1) நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய உணர்வு இது. ஒருவர் செய்த உதவியை மறக்காமல் என்றும் மனதில் வைத்திருக்க வேண்டும். அந்த உணர்வை இவ்வாறு கூறலாம்.

(3) உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் முதல் தெய்வம் இவள். (தலைகீழான சொல்)

(5) ஆழ்ந்த உறக்கத்தில் வருவது.

(8) மிகவும் மெதுவாக நகருகின்ற உயிரினம். ஆபத்து வருகின்ற போது அவயவங்களை தனது ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும். (தலைகீழான சொல்)

(11) மீனை உலர வைத்து பதப்படுத்தினால் இப்பெயர் பெறும்.

(16) மிருகங்கள் பலவற்றின் நீளமான உடல் உறுப்பு.

(17) கவிதைகள் படைப்பவர் இவர். (தலைகீழான சொல்)

(20) மிகவும் சிறிய உருவம் கொண்ட பறவை இது. நியூஸிலாந்து நாட்டின் தேசியப் பறவை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 42

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சங்கீதம் 09. நம் 11. முல்லை
14. கீரி 19. வடை 21. இரும்பு

**மேலிருந்து கீழ்**

01. சதம் 03. கீரை 08. பாலை 10. நரி
12. வயல் 15. கீதம் 17. இமை 20. கடை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 41

### பாராட்டு பெறுவோர்

**1. ஏ.சி.எப். இக்ரா**
தரம் 06, கைரியா மகளிர் கல்லூரி,
இல. 258/21, டாம் வீதி, கொழும்பு 12.

**2. எஸ்.ஐ. பதுரியா ஜெஹான்**
தரம் 03A, கைரியா மகளிர் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் வீதி, கொழும்பு 10.

**3. எம்.ஆர்.எப். ரிமாஷா**
தரம் 11, ரிபாயா மகளிர் அரபிக் கல்லூரி,
159, கப்புவத்த, தெனிபிட்டிய, வெலிகம.

**4. எம்.ஏ.எப். அஸ்மா**
தரம் 08B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர

**5. பஹ்மா ருஷ்டி**
தரம் 08B, பென்ஹில் சர்வதேச பாடசாலை,
கம்பளை.

**6. எம்.எஸ். சையாப்**
தரம் 06, அல் அஸர் தேசிய பாடசாலை,
இல. D123/4, பள்ளிபோருவ, ஹெம்மாதகம.

**7. அதீப் ரிஸ்வி**
தரம் 07B, ம/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 48/18, 2ம் ஒழுங்கை, மல்வத்த வீதி, மாத்தளை.

**8. ஆர். ஹபீஸா ஹிபாம்**
தரம் 03, களு/நளீம் ஹாஜியார் தேசிய பாடசாலை,
சீனன் கோட்டை, பேருவல.

**9. ரங்கநாதன் மேவர்ஷா**
தரம் 03, மட்/மட்/ அரசடிப் பிள்ளையார் க.வி,
கடற்கரை வீதி, குருக்கள் மடம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 43
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# சண்டா கிளாஸ்

கிறிஸ்மஸ் நாளில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் உற்சாகப்படுத்துபவர் சிவப்பு அங்கி அணிந்து பரிசுப் பொருட்களுடன் வரும் வெண்தாடி தாத்தா தான். இவரது ஆங்கிலப் பெயர் சண்டா கிளாஸ். கிறிஸ்து பிறந்த பின்பு (15 மார்ச் 270), அக்காலத்து ரோம் சாம்ராஜ்யத்தில் இருந்து துருக்கியின் பாடாரா (Patara, Lyciay, Turkey) பகுதியில் லைசியா என்ற துறைமுக ஊரில் பிறந்தார் நிகோலஸ். தனது இளம் வயதில் பெற்றோரை இழந்த நிகோலஸ் ஏழை மக்களுக்கு உதவுவதே இயேசு அன்பை பிறருக்கு சொல்லும் எளியமுறையாக கருதி அனேக ஏழை மக்களுக்கு உதவி செய்து வந்தார்.

கிறிஸ்துவ இறையியல் பணியினை சிறப்பாக செய்த நிகோலஸ், லைசிய பகுதியின் பிஷப் பதவியை ஏற்றார். பிஷப் பதவியில் இருந்த பொழுது, டிசம்பர் 6ஆம் திகதி இரவு குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசுகளை கொடுப்பார். ரோம் நகர பேரரசன் டயோக்ளீஸ் காலத்தில் கிறிஸ்தவர்கள் வேட்டையாடப்பட்ட போது, பிஷப் நிக்கோலஸும் சிறையில் தள்ளப்பட்டார். பின்பு பேரரசர் கன்ஸ்டான்டின் காலத்தில் விடுதலை செய்யப்பட்டார். பிறகு மீண்டும் ஏழை மக்களுக்கு உதவும் பணியினை தொடர்ந்தார்.

அவர் 73ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். மக்களிடம் அவர் காட்டிய கருணை, அன்பின் காரணமாகவும் அவரது தயாள குணம் காரணமாகவும் இன்றளவும் குழந்தைகள் மனதில் வாழ்ந்து வருகின்றார். செயின்ட் நிகோலஸ் என்பது டச்சு மொழியில் சண்டா கிளாஸ் என்று மருவியது.

பின்னர் ஆங்கிலம் பேசும் மக்கள் அவரை சண்டா கிளாஸ் என அன்புடன் அழைத்தனர். நிகோலஸ் காலத்தில் பிஷப்கள் அணிந்திருந்த சிவப்பு வெள்ளை அங்கியே கிறிஸ்மஸ் தாத்தாவின் உடையாகிவிட்டது. அப்போது முதல் உலகம் முழுவதும் அன்பின் திருவுருவமாக கிறிஸ்மஸ் தாத்தா உலா வருகிறார்.

# அணுவை கண்டு பிடித்தவர் யார்?

'ஒரு பொருளை மேலும் பிரிக்க முடியாத கடைசித்துகள் அணு என்பது புராதன கால இந்தியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் தெரிந்திருந்தது. அதை அவர்கள் தத்துவ ரீதியாகவே பார்த்தார்கள்.

1803இல் ஜான் டால்டன் என்ற விஞ்ஞானி அணுவைப் பற்றிய விஞ்ஞான ரீதியான ஒரு கருத்தை வெளியிட்டார். உலகிலுள்ள எல்லாப் பொருட்களுமே மிக நுட்பமான அணுக்களால் ஆனவை என்று கூறினார். நூறு வருடங்களுக்கு பிறகு ரதர் போர்ட் என்பவர் சூரிய மண்டல இயக்கம் போல் அணுவில் மையப் பகுதியும் அதை சுற்றி வரும் புரோத்திரன்களும் இலத்திரன்களும் வலம் வருவதாகவும் கூறினார். இப்போது அணுவுக்குள் 20 வீதமான துகள்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. இன்னும் கூட அணுவை விஞ்ஞானிகள் முழுவதுதமாக புரிந்து கொண்டு விட்டதாக கூற முடியாது.

**கே.எல். ஹில்மி,**
**தேசிய பாடசாலை, சம்மாந்துறை 10**




# பேராதனை பல்கலைக்கழக நூலகம்

பேராதனைப் பல்கலைச் சாலையிலே
உயர்ந்து நிற்கும் நூலகம்
நூற்றாண்டு கொண்டாடி
அக மகிழ்ந்து பாடுவோம்.

இருள் உறைந்த நாட்டிற்கு
ஒளி பாய்ச்சி நிற்குதே
புதிய பாதைகள் போட்டு நாம்
பயணம் செய்ய உதவுதே!

இயற்கை எழில் கொஞ்சிடும்
மலையில் ஊறும் நீராகும்
இன்ப மாகப் பருகி நாம்
அறிவுத் தாகம் தீர்ப்போமே

பல்கலை செல்ல நாம்
பள்ளிப் பாடம் படிக்கணும்
அடடா, அந்த நூலகம்
நாங்க ளும் பார்க்கணும்

தேனி மொய்க்கும் இடத்திலே
செம் மொழி மணக்குதே
நுகர்ந்து சுவைக்க தமிழிலும்
ஒன் னரை இலட்சம் நூட்களே

அழிந் திடாச் சொத்தென
விரும்பி நாம் சேர்க்க ணும்
தாய் மொழிக் கல்வியில் – நாம்
பல்கலை செல்வோமே

**இக்பால் அலி**



# கையால் சாப்பிடுவோம்

உணவை கையால் எடுத்துச் சாப்பிடும் பழக்கம் நம் பாரம்பரியமாகும். இதனால் இரத்த ஓட்டம் மேம்படுகிறது. ஜீரணம் தூண்டப்படுகிறது. உடலின் வெப்பநிலை உணர்வுகள் தூண்டப்படுகின்றன என பல நன்மைகள் உள்ளன. இதனால் தான் நம் முன்னோர்கள் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தினர். சாப்பிடுவதற்கு பயன்படுத்தும் மற்ற பொருட்களை விட மனித கைகள் மிக சுகாதாரமானவை.

முன்னால் பின்னால் பக்கவாட்டில் என அனைத்து பக்கங்களிலும் பறக்க முடிந்த பறவை

**தேன்சிட்டு**

# இவ்வார மழலை




மொஹமட் ஷர்பான் /பாத்திமா வபா,
கொழும்பு

# வாரம் ஒரு பெரியார்

## முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

தமிழையே மூச்சென்று சுவாசித்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர். தமிழுக்கு தொண்டாற்றியவர்களில் மிகவும் முக்கியமானவர். இவர் ஆற்றிய தமிழ் பணிகளும் சமூக சேவைகளும் இவரை உயர் நிலைக்கு இட்டு சென்றது.



ஆசிரியராக, தமிழ் பண்டிதராக, விஞ்ஞான பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழி பெயர்ப்பாளராக வாழ்ந்து தமிழுக்கும் சமூகத்துக்கும் பெரும் தொண்டாற்றினார்.

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் காரைதீவு எனும் ஊரில் 1892ஆம் ஆண்டு 03ஆம் மாதம் 27ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி, தாயின் பெயர் கண்ணம்மா.

இவரது இயற்பெயர் மயில்வாகனன். ஆரம்ப கல்வியை கல்முனை மெதடிஸ் கல்லூரியில் கற்றார். 1912 இல் கொழும்பு தொழில்நுட்ப கல்லூரியில் விஞ்ஞானம் பயின்று 1916 இல் அறிவியலில் பட்டம் பெற்றார்.

இவர் ஒரு தமிழ் ஆசிரியராக மட்டக்களப்பு மைக்கல் கல்லூரியில் தனது கல்விப்பணியை துவங்கினார். பின்பு கொழும்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். மதுரை தமிழ் சங்கம் நடாத்திய தேர்வில் சித்தி பெற்று பண்டிதர் பட்டம் பெற்றார். இலங்கையில் இருந்து இந்த பட்டத்தை பெற்றுக்கொண்ட முதல் நபர் இவராவார்.

யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளினுடைய பழக்கம் துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலானந்தர் ஆக்கியது. இவர் துறவு பூண்டாலும் மக்களை விட்டு விலகவில்லை. சமூகத்தில் நிகழ்ந்த துன்பத்திலும் மகிழ்ச்சியிலும் பங்கெடுத்தார்.

ஆச்சிரம வாழ்க்கை முடிந்து சுவாமி விபுலானந்தர் எனும் குரு பட்டத்தை இராமகிருஸ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தரிடம் இருந்து பெற்றுகொண்டார். அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி கலாச்சாரத்தில் இருந்த வீழ்ச்சியில் இருந்து தமிழ் சமூகத்தை இவர் தட்டி எழுப்பினார்.

அறிவியல் கல்வியானது தமிழில் போதிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் இருந்தது. இவர் அறிவியல் கலை சொல்லாக்கத்துக்காக உழைத்திருக்கின்றார். 'யாழ்நூல்' என்று மிகச்சிறந்த இலக்கியத்தை இவர் படைத்திருக்கிறார்.

இது பழந்தமிழரின் இசைக்கருவியான யாழ் பற்றி சிறந்த ஆராய்ச்சி நூலாக போற்றப்படுகின்றது. 14 ஆண்டு ஆராய்ச்சியின் பலனாக இந்த நூல் கிடைத்தது. தமிழ்சங்கம் வெளியிட்ட செந்தமிழ் எனும் இலக்கியத்தில் பல கட்டுரைகளை இவர் எழுதி இருந்தார்.

இவர் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தெளிவாக கற்று அவற்றின் பெருமைகளை மக்களுக்கும் புரியும் படியாக தனது நூல்களிலும் கட்டுரைகளிலும் இவர் எழுதி இருந்தார். மகாககவி பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் அவரை முதன்மைப்படுத்தி தனது வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

தாழ்த்தப்பட்ட மக்களும் மேன்மையடைய வேண்டுமென்று விரும்பினார். நவீன மனிதனுக்கு தேவையான பழங்கால சிந்தனைகள் என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் புகழ் வாய்ந்தவையாக உள்ளன.

முத்தமிழை முதன்மைப்படுத்தி இவர் எழுதிய நூல்களும் ஆய்வுகளும் பெரும் புகழ் உடையனவாக காணப்படுகின்றன.

இவ்வாறு மிகச்சிறந்த தமிழ்ப்பணிகளை ஆற்றி தமிழையே பெருமைப் படுத்திய விபுலானந்தர் அவர்கள் 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி உடல்நல குறைவினால் உயிர் இழந்தார்.

இறக்க முன்னரே தான் கனவு கண்டதனை போலவே மிகச்சிறந்த தமிழ் பணிகளை இவர் ஆற்றி சென்றிருக்கின்றார்.

# சிறுவர் சித்திரங்கள்



**ஜே. ஈவன் எக்லி**
தரம் 2A, புனித அந்தோனியார் ஆண்கள் தேசிய பாடசாலை, கொழும்பு - 13.



**பி. அக்ஷித் யாதவ்**
தரம் 07, கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு - 15



**ஏ. ஸலா ஸம்ளுட்**
தரம் 02, கமு/சது/றோயல் கனிஷ்ட கல்லூரி, இறக்காமம்

# விளையாட்டு

## டெஸ்டில் கவனம் தேவை



இந்த ஆண்டு டி20 உலகக் கிண்ணம், அடுத்த ஆண்டில் ஒருநாள் உலகக் கிண்ணம் என்று வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் அதிக அவதானம் செலுத்தும் இலங்கை அணிக்கு டெஸ்டில் பெரிதாக கரிசனை இருப்பதாக தெரியவில்லை. இலங்கை ரசிகர்கள் முதற்கொண்டு நிர்வாகம் வரை இதே போக்கை காண முடிகிறது.

அடுத்த ஆண்டு இலங்கை ஆடவிருக்கும் மொத்த டெஸ்ட் போட்டிகளே வெறும் ஐந்துதான். என்றாலும் இலங்கை டெஸ்ட் அணிக்கு ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் விளையாடும் வாயில் இன்னும் திறந்தே இருக்கிறது.

இத்தனைக்கும் இலங்கை டெஸ்ட் போட்டிகளில் ஆடாத நிலையிலேயே டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. இலங்கை அணி இப்போது டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் 64 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தை பெற்றிருக்கிறது. அதன் புள்ளிகளின் வீதம் 53.33.

டெஸ்ட் சம்பியன்சிப் போட்டி அட்டவணையில் இலங்கை அணிக்கு இன்னும் இரண்டு போட்டிகள் எஞ்சி இருக்கின்றன. அதுவும் நடப்புச் சம்பியனாக இருக்கும் நியூசிலாந்துக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் அந்த போட்டிகள் நடைபெறவுள்ளன.

வரும் மார்ச் மாதம் நடைபெறும் இந்த டெஸ்ட் தொடரை முழுமையாக வென்றால் இலங்கையால் அதிகபட்சமாக 61.11 புள்ளி வீதத்தை பெற முடியும். இது மற்றைய போட்டிகளின் முடிவுகள் எவ்வாறு அமைந்த போதும் இலங்கையால் குறைந்தது புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்தை பிடிக்கப் போதுமானது.

இப்போது அவுஸ்திரேலியா 76.92 புள்ளி வீதத்துடன் முதல் இடத்தில் இருக்கும் நிலையில் அந்த அணி டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியை கிட்டத்தட்ட உறுதி செய்திருக்கிறது.

இறுதிப் போட்டியில் ஆடும் மற்ற அணியை தீர்மானிப்பதற்கே போட்டி நிலவுகிறது. என்றாலும் இந்தப் போட்டியில் இலங்கையுடன் புள்ளிப்பட்டியலில் இரண்டு மற்றும் மூன்றாவது இடத்தில் இருக்கும் இந்தியா, தென்னாபிரிக்க அணிகளே தொடர்ந்து நீடிக்கின்றன.

இந்திய அணி இப்போது 55.77 புள்ளி வீதத்துடன் இரண்டாவது இடத்தில் இருந்தபோதும் அந்த அணிக்கு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவேண்டி இருப்பது பெரும் சவாலானது.

அதேபோன்று மூன்றாவது இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்கா 54.55 புள்ளி வீதத்தை பெற்றிருக்கிறது. என்றாலும் அந்த அணி தற்போது ஆடிவரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் வெறுமனே இரண்டு நாட்களுக்குள் தோல்வியை சந்தித்தது. இந்த சூழலில் அந்த அணியும் புள்ளிகளை அதிகரிக்க சிரமத்தை எதிர்கொண்டிருக்கிறது.

2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்சிப் போட்டி லீக் முறையில் நடைபெறுகிறது. ஓர் ஆண்டுக்கு மேல் லீக் முறையில் நடக்கும் போட்டிகள் அடிப்படையில் அதிக புள்ளிகளின் வீதத்தை பெறும் அணிகளுக்கு இடையே இறுதிப் போட்டி நடத்தப்பட்டு வெற்றிபெறும் அணிக்கு டெஸ்ட் சம்பியன் கேடயம் வழங்கப்படுகிறது.

முதல் டெஸ்ட் சம்பியன்சிப்பை நியூசிலாந்து அணி வென்றபோதும் இந்த முறை அதனால் போதிய புள்ளிகளின் வீதத்தை பெற முடியவில்லை. இங்கிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கும் இதே நிலைதான்.

என்றாலும் இலங்கை ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்சிப் லீக் போட்டிகளின் சுழற்சியில் இதுவரை ஆடிய 10 போட்டிகளில் 5இல் வென்று 4இல் தோல்வியை சந்தித்தது அதன் முன்னேற்றத்திற்கு காரணமாகி இருக்கிறது.

டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் ஓவலில் நடைபெறவிருக்கிறது. இந்தப் போட்டிக்கு தகுதிபெற எப்போதும் இல்லாத அளவுக்கு இலங்கைக்கு பொன்னான வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கிறது. என்றாலும் அதனை அடைவதற்கான சவாலும் மிகப்பெரியது.

எப்படி இருந்தபோதும் இலங்கைக்கு இந்த சவாலை அடைவதற்கு போதுமான போட்டிகளோ பயிற்சியோ இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆண்டு முழுக்க டி20 போட்டிகளில் கவனம் செலுத்திய இலங்கை அடுத்த ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணம் வருவதால் ஒருநாள் கிரிக்கெட்டிலேயே கவனம் செலுத்தப்போகிறது.

இதற்கிடையே திமுத் கருணாரத்னவின் தலைமையில் பிரத்தியேக அணியாக இருக்கும் டெஸ்ட் அணி வருடத்தில் ஆங்காங்கே வந்துவிட்டுப் போகும் அணியாகவே இருக்கப்போகிறது.

இலங்கைக்கு நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரை தவிர்த்துப் பார்த்தால் அடுத்த ஆண்டில் அயர்லாந்துக்கு எதிராக முதல் முறை டெஸ்ட் போட்டி ஒன்றில் அடவிருக்கிறது. ஏப்ரல் மாதத்தில் சொந்த மண்ணில் இந்த டெஸ்ட் நடைபெறும்.

தவிர, வரும் ஜூலையில் பாகிஸ்தான் அணி இலங்கை வந்து இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடும். அதன்பின் எதிர்கால போட்டி அட்டவணைப்படி இலங்கை டெஸ்ட் அணி ஆண்டின் பாதியை சும்மாதான் கழிக்கப்போகிறது.

டெஸ்ட் போட்டியை கைவிடுவது ஒரு ஸ்திரமான அணியை உருவாக்க கைகொடுக்காது. அது ஒருநாள், டி20 போட்டிகளிலும் பாதிப்பை செலுத்தும். அரவிந்த டி சில்வா, குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, முத்தையா முரளிதரன் என்று இலங்கையில் தோன்றிய சிறந்த கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் மிகச் சிறந்த டெஸ்ட் வீரர்கள் என்பதை புரிந்துகொள்வது அவசியம்.

எஸ்.பிர்தௌஸ்...

## ஒரே பார்வையில் உலகக் கிண்ணம்

மொத்தம் 64 போட்டிகளுடன் 172 கோல்கள் பெறப்பட்ட உலகக் கிண்ண கால்பந்து தொடரில் ஆர்ஜன்டீனா இறுதியில் கிண்ணத்தை வென்றது. நடப்புச் சம்பியனான பிரான்ஸுக்கு எதிரான பரபரப்பான இறுதியாட்டம் பெனால்டி சூட் அவுட் வரை சென்றே முடிந்தது.

மத்திய கிழக்கில் நடந்த முதல் உலகக் கிண்ணம், குளிர்காலத்தில் இடம்பெற்ற முதலாவது உலகக் கிண்ணம் என்று இம்முறை உலகக் கிண்ணத்திற்கு பல சிறப்புகள் இருந்தது. அதேபோன்று சர்ச்சைகளுக்கும் பஞ்சம் இருக்கவில்லை. இம்முறை உலகக் கிண்ணத்தின் சாதனைகள் மற்றும் போக்கு பற்றி ஒரு சுருக்கமான பார்வை...



### அதிர்ச்சியான உலகக் கிண்ணம்

உலகக் கிண்ணத்தை ஆர்ஜன்டீனா வென்றது என்றாலும் கட்டார் உலகக் கிண்ணம் என்பது எதிர்பாராத அணிகளின் உலகக் கிண்ணம் என்று கூறிப்பிடலாம்.



உலகக் கிண்ணம் ஆரம்பித்து மூன்றாவது நாளில் ஆர்ஜன்டீனாவை சவூதி அரேபியா 2–1 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தியது தொடக்கம் குழு நிலை போட்டிகளில் 12 எதிர்பாராத முடிவுகள் கிடைத்துள்ளன.

இது 64 ஆண்டுகள் நடந்த உலகக் கிண்ண தொடர்களில் சாதனை எண்ணிக்கையாக உள்ளது.

மொரோக்கா நொக் அவுட் சுற்று மற்றும் காலிறுதியில் முறையே ஸ்பெயின் மற்றும் போர்த்துகல்லை வீழ்த்தியது தொடக்கம் காலிறுதியில் பிரேசிலை குரோசியா வீழ்த்தியது வரை தொடரில் 24 வீதமான போட்டிகள் அதிர்ச்சி முடிவுகளாகவே இருந்துள்ளன.

இது 1958இல் சுவீடனில் (26 வீதம்) நடந்த உலகக் கிண்ணத்துக்குப் பின்னர் அதிக அதிர்ச்சி முடிவுகள் கிடைத்த தொடராக இருந்தது.

### குறைந்த உதை... அதிக கோல்...



இம்முறை உலகக் கிண்ணத்தில் மொத்தமாக கோலை நோக்கி உதைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் 1,458 மாத்திரம்தான். இது உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் மிகக் குறைவு.

அதாவது கட்டார் உலகக் கிண்ணத்தில் சராசரியாக போட்டி ஒன்றில் 22.8 வீதம் தான் கோலை நோக்கி உதைக்கப்பட்டிருக்கிறது.

என்றாலும் இது கோல் மழை பொழிவதை தடுக்கவில்லை. மொத்தம் 172 கோல்கள் பெறப்பட்டன. அதாவது 1998 உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் அணிகள் 32 ஆக அதிகரிக்கப்பட்டது தொடக்கம் தொடர் ஒன்றில் பெறப்பட்ட அதிக கோல்கள் இதுதான். 1998 மற்றும் 2014 உலகக் கிண்ணங்களில் தலா 171 கோல்கள் பெறப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று போட்டி ஒன்றில் சராசரியாக பெறப்பட்ட கோல்கள் என்று பார்த்தால் இந்த உலகக் கிண்ணத்தில் 2.69 கோல்கள் பெறப்பட்டிருப்பதோடு, 1994இல் அமெரிக்காவில் நடந்த உலகக் கிண்ணத்திற்கு மாத்திரமே (2.71) பின்னிற்கிறது.

### ஒழுக்கமான உலகக் கிண்ணம்

இம்முறை உலகக் கிண்ணத்தில் நடுவர்களால் 227 மஞ்சள் அட்டைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. இது 2010க்கு பின்னர் அதிகம் என்றாலும் நடுவர்களின் கண்டிப்பான தீர்ப்புகள் இதற்குக் காரணம் என்று குறிப்பிடலாம். தவிர நான்கு சிவப்பு அட்டைகள் காண்பிக்கப்பட்டன. இது ரஷ்யாவில் நடந்த



கடந்த உலகக் கிண்ணத்துடன் ஒத்துப் போகிறது.

என்றாலும் தவறிழைப்புகள் என்று பார்த்தால் தொடர்ச்சியாக நான்காவது உலகக் கிண்ணத் தொடரில் வீழ்ச்சியை நோக்கிப் போகிறது. இந்த நூற்றாண்டில் மிகக் குறைவாக அது 1,599 ஆக உள்ளது.

மொத்தம் 23 பெனால்டிகள் வழங்கப்பட்டன. அது சராசரியாக போட்டி ஒன்றில் 0.36 வீதம் ஆகும். இதில் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் மூன்று பெனால்டிகள் வழங்கப்பட்டபோதும், 2018 உலகக் கிண்ணத்தை விடவும் குறைவே.



### அதிக இளம் வீரர்கள்

2022 தொடர் வேறு எந்த உலகக் கிண்ணத்திலும் இல்லாத அளவுக்கு அதிக பதின்ம வயது வீரர்கள் பங்கேற்ற தொடராக இருக்கிறது.

19 வயது இங்கிலாந்து மத்திய கள வீரர் ஜூட் பெலிங்கம், 19 வயது ஜெர்மனி மத்திய கள வீரர் ஜமால் முசையலா மற்றும் 18 வயது ஸ்பெயின் மத்தியகள வீரர் காவி உட்பட போட்டிகளுக்கான 20 ஆரம்ப அணிகளில் 10 பதின்ம வயதினர் பங்கேற்றிருக்கிறார்கள்.

அதிக முறை ஆரம்ப அணிகளில் இடம்பெற்ற இளம் வீரர் என்று பார்த்தால் 23 வயது பிரான்ஸ் முன்கள வீரர் கிலியன் ம்பப்பே முதலிடத்தில் இருக்கிறார். இம்முறை உலகக் கிண்ணத்தில் அவர் பிரான்ஸ் அணியின் இன்றியமையாத வீரர் என்பதோடு கடந்த உலகக் கிண்ணத்தில் பதின்ம வயது வீரராக பிரான்ஸ் அணியில் ஆறு முறை ஆரம்ப வீரராக இருந்திருக்கிறார்.

### மெஸ்ஸியின் உலகக் கிண்ணம்

ஆர்ஜன்டீன அணி மூன்றாவது முறை உலகக் கிண்ணத்தை வெல்வதில் மெஸ்ஸியின் பங்கு பெரியது. அதாவது இந்தத் தொடரில் ஆர்ஜன்டீனா மொத்தமாக 15 கோல்களை பெற்றதோடு அதில் 10 கோல்கள் மெஸ்ஸி புகுத்தியதாகவோ அல்லது அவர் உதவியதாகவோ இருந்தன.

இதன்போது 35 வயது மெஸ்ஸி உலகக் கிண்ணத்தில் அதிக கோல்களை பெற்ற ஆர்ஜன்டீன வீரர் என்ற கப்ரியேல் படிஸ்டுடாவின் சாதனையை முறியடித்தார்.

தவிர பிஃபா உலகக் கிண்ணத்தில் அதிக போட்டிகளில் ஆடிய லூதர் மத்தவுஸின் சாதனையை முறியடித்த மெஸ்ஸி உலகக் கிண்ணத்தில் அதிக நிமிடங்கள் ஆடிய பவோலோ மல்டினியின் சாதனையையும் முறியடித்தார்.

### ம்பப்பேவின் எழுச்சி

உலகக் கிண்ணத்தை வென்று தொடர் நாயகனுக்கான தங்கப்பந்தையும் மெஸ்ஸி வென்றபோதும் அவரின் பீ.எஸ்.ஜி கழக அணியின் சக வீரரான பிரான்ஸின் கிலியன் ம்பப்பே இம்முறை உலகக் கிண்ணத்தில் மொத்தம் எட்டு கோல்களை பெற்று தங்கப் பாதணி விருதை தட்டிச்சென்றார்.

அதேபோன்று உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவர் ஹட்ரிக் கோல்களை பெற்றதன் மூலம் 1966இல் இங்கிலாந்தின் ஜியோப் ஹர்ஸ்டுக்கு பின்னர் இந்த சாதனையை படைத்த முதல் வீரராக பதிவானார்.

கடந்த உலகக் கிண்ணத்தையும் சேர்த்து உலகக் கிண்ணத்தில் ம்பப்பே பெற்ற மொத்த கோல்கள் 12. இது கால்பந்து ஜாம்பவான் பீலேவின் கோல்களுக்கு இணையாகும்.

அவரைவிடவும் உலகக் கிண்ணத்தில் அதிக கோல்கள் பெற்றவர்கள் வரிசையில் 20 பேர் முன்னால் இருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற்று அல்லது ஓய்வு பெறும் வயதை எட்டி இருப்பதால் எல்லோரையும் முந்துவதற்கு ம்பப்பேவுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது.

### கொஸ்டாரிகா பரிதாபம்

உலகக் கிண்ணத்தை வெல்லாவிட்டாலும் இம்முறை உலகக் கிண்ணத்தில் அதிக கோல்களை பெற்ற அணி பிரான்ஸ்தான். அது மொத்தம் 16 கோல்களை பெற்றது. மறுபுறம் டென்மார்க், கட்டார், துனீசியா, பெல்ஜியம் மற்றும் வேல்ஸ் அணிகள் குறைந்தபட்சமாக ஒரு கோலையே பெற்றன. இந்த அணிகள் ஆரம்பச் சுற்றுடனேயே வெளியேறியதில் ஆச்சரியப்படத் தேவையில்லை.

கொஸ்டாரிகா எதிரணிக்கு அதிக கோல்களை விட்டுக்கொடுத்ததில் முன்னணியில் இருக்கிறது. அந்த அணி 3 போட்டிகளில் 11 கோல்களை விட்டுக்கொடுத்தது. ஸ்பெயினுக்கு எதிரான போட்டியில் அந்த அணி 0–7 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்றது இதில் பெரும் தாக்கத்தை செலுத்தியது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 டிசம்பர் 25 ஞாயிற்றுக்கிழமை
Model: - Ranu
Dressed By: Salon Lochana
Lochana Perera, Jaela
Pix By: Shan Rupassara

# அரசின் 84 மில். டொலரை வீணாக்கிய மாணவன்



2007ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அரசாங்கம் இணையதளத்தில் ஆபாச தளங்களை முடக்குவதற்கு செயலி ஒன்றை கண்டுபிடித்தது. அதற்காக அரசு 84 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை செலவிட்டது. அந்த செயலி பாடசாலைகள், நூலகங்கள் மற்றும் வீடுகளுக்கு அரசினால் வழங்கப்பட்டது. அவுஸ்திரேலிய அரசைப் பொறுத்தவரை இது ஒரு பாரிய திட்டம். ஆனால் பாருங்கள் 16 வயது கல்லூரி மாணவன் டொம் ப்ரூக் வெறுமனே 40 நிமிடங்களில் இந்த தணிக்கை செயலியை முறியடித்துவிட்டார். "இந்த 84 மில்லியன் டொலர் என்பது பெரும் வீண் செலவு" என்று அரசுக்கே அறிவுரை கூறுகிறார்.

# ஒரு தொடர் கொலையாளிக்கான கொடிய தண்டனை

ஹட்ஜ் முஹமது முஸபேவி. மொரோக்கோ நாட்டின் செருப்புக் கடைக்காரர். ஒரு பயங்கர தொடர் கொலையாளி. குறைந்தது 36 இளம் பெண்களை கொலை செய்திருக்கிறார். தனது கடைக்கு வரும் பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து கொலை செய்திருக்கிறார்.

சிதைக்கப்பட்ட இருபது உடல்கள் முஸபேவியின் கடையில் இருந்து பொலிஸார் கண்டுபிடித்தனர். மேலும் 16 உடல்கள் அவரது தோட்டத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன. அந்த பெண்களிடம் இருந்து பணத்தை திருடுவதற்காகவே கொலை செய்ததாக முஸபேவி ஒப்புக்கொண்டார். அந்தப் பெண்களிடம் இருந்து திருடப்பட்ட பணம் மிகச் சொற்ப தொகைதான்.

நீதிமன்றம் அவருக்கு சிலுவையில் அறைந்து மரண தண்டனை விதிக்கும்படி உத்தரவிட்டது. என்றாலும் மனித உரிமை விவகாரங்களால் அந்தத் தண்டனையை நிறைவேற்ற முடியவில்லை. கடைசியில் முஸபேவி கடை போட்டிருந்த சந்தையிலேயே அவரை உயிரோடு வைத்து சுவர் எழுப்பப்பட்டது. இரண்டு நாட்கள் அந்த சுவருக்குள் முஸபேவியின் கூச்சல் கேட்டது. 1906 ஜூன் 13 ஆம் திகதி அவர் உயிரிழந்தார்.






# மகனை கொன்றதற்கு தந்தை கூறிய அபூர்வ காரணம்!



அமெரிக்காவின் இன்டியானா நகரிலே 1999 ஜூன் 20ஆம் திகதி டெய்லர் என்ற ஏழு மாத ஆண் குழந்தை தொட்டிலில் இறந்து கிடந்தது. குழந்தைகளுக்கு ஏற்படும் திடீர் மரணமே இறப்புக்குக் காரணம் என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்.

ஆனால் இரண்டு நாட்கள் கழித்து குழந்தையின் தந்தை ரொனால்ட் செனபேகர் சொன்ன கதைதான் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. தானே குழந்தையை கொன்றதாக ஒப்புக்கொண்ட அவர், தனது மனைவி எமியை பழிதீர்க்கவே தனது குழந்தையை கொன்றாராம்.

அதாவது எமியை திருமணம் முடித்ததும், குழந்தை பெற்றதும் மனைவி அந்தக் குழந்தை மீது அதிக அன்பு பாராட்ட வைத்ததும் எல்லாமே, ரொனால்டின் சதி வேலை.

எல்லாவற்றுக்கும் காரணம் ரொனால்டின் தந்தையின் மரணம்தான். 1996 ஆம் ஆண்டு அவரது தந்தை மரணிக்கும்போது, காதலியாக இருந்த எமி சுற்றுலா சென்றிருந்தார். அந்த சுற்றுலா பயணத்தை பாதியில் நிறுத்திவிட்டு தனது சோகத்தில் கலந்து கொள்ளும்படி எமியை ரொனால்டின் கெஞ்சாத குறையாகக் கேட்டும் அதனை அவர் ஏற்கவில்லை.

அப்போது ஏற்பட்ட கோபத்தில், 1997இல் எமியை திருமணம் முடித்து, குழந்தையை பெற்று பழி தீர்ப்பதற்கு குழந்தையை கொல்லும் அளவுக்குச் சென்றுவிட்டார்.

என்றாலும் இந்த வழக்கு ஒரு குழப்பத்துடனேயே நகர்ந்தது. உண்மையிலேயே ரொனால்ட் இப்படி செய்திருப்பாரா என்பதை யாராலும் நம்ப முடியவில்லை. கடைசியில் அவருக்கு 49 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

# இப்படி ஒரு தேர்தலா!

ஜனநாயகம் பிறந்தது பண்டைய கிரேக்கத்தில் என்று சொல்வார்கள். ஆனால் அங்கு ஜனநாயகம் வித்தியாசமானது. தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கு மாத்திரம் அல்ல அவர்களை வெளியேற்றுவதற்கும் கூட ஓட்டுப்போட்டார்கள். இந்தத் தேர்தலை பண்டைய ஏதன்ஸில் 'புறக்கணிப்பு' என்று கூட கூறுவார்கள்.

அதாவது ஒவ்வொரு ஆண்டும் மக்கள் அரசியல்வாதிகள், தலைவர்கள் ஏன் சமூகத்தில் முக்கியஸ்தர்கள் போட்டியிடும் தேர்தலில் வாக்களிப்பார்கள். இதில் ஜனநாயக செயல்முறைக்கு அழிவை ஏற்படுத்தக் கூடியவர் யார் என்பதையே மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். வெற்றி பெறுபவர் 10 ஆண்டுகளுக்கு ஏதன்ஸ் நகரில் இருந்து வெளியேற்றப்படுவார்கள்.



இப்படி ஒரு தேர்தல் இப்போது இருந்திருந்தால் எப்படி இருக்கும்?

# உலகக் கிண்ணத்தில் சாதனை படைத்த ரசிகன்

உலகக் கிண்ண கால்பந்து போட்டிகளில் ஆடிய வீரர்கள், அதிக கோல் பெற்றவர்கள்.. என்ற சாதனை பட்டியல் ஒரு பக்கம் இருக்கட்டும், உலகக் கிண்ணத்தில் சாதனை படைத்த 75 வயது டனியேல் பார்டோலமியு சிப்ரூசி பற்றித் தெரியுமா?

பிரேசில் நாட்டைச் சேர்ந்த இவர்தான் அதிக உலகக் கிண்ணத் தொடர்களில் கலந்து கொண்ட பார்வையாளர் என்ற கின்னஸ் சாதனையை படைத்திருக்கிறார். கட்டாரில் அண்மையில் முடிவுற்ற உலகக் கிண்ண கால்பந்து போட்டி அவர் பார்வையிட்ட 11 ஆவது உலகக் கிண்ணத் தொடராகும்.

முதல் முறை ஆர்ஜன்டீனாவில் 1978 ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ணப் போட்டியை பார்வையிடச் சென்ற அவர் தொடர்ந்து மெக்சிகோ (1986), இத்தாலி (1990), அமெரிக்கா (1994), பிரான்ஸ் (1998), ஜப்பான் மற்றும் கொரியா (2002), ஜெர்மனி (2006), தென்னாபிரிக்கா (2010), பிரேசில் (2014), ரஷ்யா (2018) கடைசியில் கட்டார் (2022) உலகக் கிண்ணங்களையும் நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறார்.



# திகிலூட்டும் மர்மப் பேய்கள்!



(கடந்த வாரத் தொடர்)

7. சிலந்தி

பண்டைய ஜப்பானிய புராணங்களின் படி, யோரோகுமோ இரத்தவெறி கொண்ட அசுரன்... பெரும்பாலான விசித்திரக் கதைகளில், அவர் ஒரு பெரிய சிலந்தி என்று விவரிக்கப்படுகிறார், மிகவும் கவர்ச்சிகரமான பெண்ணின் வடிவத்தை எடுத்து, ஆண்களை மயக்கி, அவளை அவளது குகைக்குள் இழுத்து, அவற்றை விழுங்குவார்.

8. ஹறா

ஹுண்டாங் ஒரு முகமற்ற தீமை, இது சீன புராணங்கள் மற்றும் காஸ்மோகோனியில் பேரழிவு மற்றும் குழப்பத்தின்



ஆதாரமாக கருதப்படுகிறது. இந்த பேயின் விசித்திரமான விஷயம் அது எவ்வளவு பழமையானது என்பதுதான். சீன நம்பிக்கைகளின்படி, இது வானமும் பூமியும் பிரிக்கப்படுவதற்கு முன்பே, அதாவது பெருவெடிப்பிற்கு முன்பு இருந்தது.

9. எலிகோஸ்ங்

எலிகோஸ் நரகத்தின் பெரிய டியூக் ஆவார், அவர் அரக்கர்களின் அறுபது படைகளை ஆளுகிறார். அவர் மறைக்கப்பட்ட விஷயங்களைக் கண்டுபிடித்து, போர்களின் எதிர்காலத்தை அறிவார். எலிகோஸ் பொதுவாக ஈட்டி, ஒரு பதாகை மற்றும் ஒரு பாம்பை ஏந்திய ஒரு பக்தியுள்ள குதிரையாக சித்தரிக்கப்படுகிறார்.

10. ஜீ

ஜின் அரபு மற்றும் இஸ்லாமிய பிற்பட்ட புராணம் மற்றும் இறையியலில் இயற்கைக்கு அப்பாற்பட்ட மனிதர்கள்.

ஜின் புகை இல்லாத மற்றும் "எரியும் நெருப்பால்" ஆனது என்று கூறுகிறது, ஆனால் அவை மக்கள் மற்றும் பொருள்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் கொண்டவை.

பேய்வியலில் பார்படோஸ் முப்பது படையணி பேய்களை ஆளும் நரகத்தின் பிரபு. அவருக்கு நான்கு அரசர்கள் துணைவர்களாக இருக்கிறார்கள், அவர் படையணிகளை கட்டளையிட உதவுகிறார். மந்திரவாதிகளின் மந்திரத்தால் மறைத்து வைக்கப்பட்ட பொக்கிஷங்களுக்கு அவர் மக்களை வழிநடத்த முடியும் என்று நம்பப்படுகிறது, ஆனால் இதற்காக அவர் மிக அதிக விலை கேட்கிறார் ஆன்மாக்கள்.

12. பரகியேல்

ஏனாக் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இருநூறு தேவதைகளின் இருபது தலைவர்களின் ஒன்பதாவது பார்வையாளர் பரகியேல். அவரது பெயர் "கடவுளின் மின்னல்" என்று பொருள்படும், இது ஆச்சரியப்படுவதற்கில்லை, ஏனெனில் பராகியேல் தனது வீழ்ச்சிக்கு முன்னர் மக்களுக்கு ஜோதிடம் கற்பித்ததாக நம்பப்படுகிறது.

13. ஹசி தஹாகா

ஹசி தஹாகா என்பது ஈரானிய புராணங்கள் மற்றும் மதத்தின் புயல் அரக்கன். அவர் கால்நடைகளைத் திருடி மக்களைத் தாக்குகிறார் என்று கூறப்பட்டது. இது மூன்று தலைகள் மற்றும் ஆறு கண்களைக் கொண்ட ஒரு பாம்பு அரக்கன், இது பாபிலோன் காலத்தில் ஈரானின் அடக்குமுறையையும் வெளிப்படுத்துகிறது.

14. அகரேஸ்

அகரேஸ் நரகத்தின் டியூக் ஆவார், அவர் அதன் கிழக்கு பகுதியை வைத்திருக்கிறார் மற்றும் முப்பத்தோன்று பேய்களின் படைக்கு கட்டளையிடுகிறார். அவர் ஒரு முதலையைப் போல் தோன்றுகிறார் மற்றும் அவரது கையில் ஒரு பருந்து உள்ளது.

அகரேஸ் தப்பியோடியவர்களைத் திரும்பக் கொண்டுவந்து எதிரிகளைத் தள்ளிவிட முடியும் என்று நம்பப்பட்டது. அவர் மக்களை உயர்த்தவும், அனைத்து மொழிகளையும் கற்பிக்கவும், பூகம்பத்தை ஏற்படுத்தவும் முடியும்.

15. அபாடன்ஹறா

வெளிப்படுத்துதல் புத்தகத்தில், சாத்தானைப் போல தோற்றமளிக்கும் அபடோன் என்ற தேவதை வெட்டுக்கிளிப் படையின் ராஜா என்று விவரிக்கப்படுகிறார். அவர் ஒரு திரிசூலத்தை வைத்திருக்கிறார், பயமுறுத்தும் சிறகுகள், பாம்பு வால் மற்றும் கொடூரமான கண்களுடன் ஒரு தீய முகம். கிரேக்க மொழியிலிருந்து பண்டைய மொழிபெயர்ப்பில் அவரது பெயர் "அழிப்பவர்" என்று பொருள்.

16. அசாக்ஸி

பண்டைய சுமேரிய மதத்தில், அசாக் ஒரு கொடூரமான அரக்கனாக இருந்தார், அவர் மிகவும் பயமாக இருந்தார், அவர் இருப்பது ஆறுகளில் மீன்களைக் கொன்றது. அவரது பெயர் "நோயை உண்டாக்குகிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

17. Dybbuk டஹறா

யூத புராணங்களில், திப்புக் என்பது ஒரு தீய ஆவியாகும், அது ஒரு நபருக்குள் ஊடுருவி, அவர் இறக்கும் வரை அவருக்குள் வாழ்கிறது. இந்த தீங்கு விளைவிக்கும் உயிரினம் அதன் மோசமான நோக்கத்தை நிறைவேற்றிய பின்னரே அதன் உரிமையாளரின் உடலை விட்டு வெளியேறுகிறது.

18. அபிசு

மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவின் புராணங்களில், அபிசு ஒரு பெண் அரக்கன். அவள் கருச்சிதைவு மற்றும் குழந்தை இறப்பு குற்றம் சாட்டப்படுகிறாள், ஏனெனில் அபிசு மக்களை பொறாமைப்படுவதாகவும், மலட்டுத்தன்மையுடன் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

19. கோல் (கோல்)

கோல் பண்டைய மிகவும் பிரபலமான உயிரினங்களில் ஒன்றாகும், இது முதலில் ஆயிரத்து ஒரு இரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஒரு இறக்காதவர் என்று விவரிக்கப்படுகிறார், அவர் ஒரு அருவமான ஆவியின் வடிவத்தையும் எடுக்க முடியும். ஒரு விதியாக, பேய்கள் கல்லறைகளில் வாழ்கின்றன மற்றும் கேரியனுக்கு உணவளிக்கின்றன.

20. சுக்குபஸ்கா

ஆண்கள் மட்டுமே கற்பழிப்பு செய்கிறார்கள் என்று நினைப்பவர்கள் மிகவும் தவறாக நினைக்கிறார்கள். சுக்குபஸ் என்பது ஒரு அரக்கன், அவர் இடைக்கால புராணங்களில், வடிவத்தில் ஆண்கள் மற்றும் சிறுவர்களின் கனவுகளை ஆக்கிரமித்தார். கவர்ச்சியான பெண்கள் பின்னர் அவர்களை மயக்கி அல்லது பாலியல் பலாத்காரம் செய்தனர்.

21. Xin Tian

சின் தியான், சீனப் புராணங்களில் உள்ள ஒரு தீய தெய்வீக ராட்சதர், அவர் பரலோகப் பேரரசர் ஹுவாங் டிக்கு எதிராகப் போராடினார். அவர் தோற்கடிக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்ட பிறகும், Xin Tian தொடர்ந்து சண்டையிட்டு, அவரது உடலில் ஒரு முகத்தை உருவாக்கினார்: முலைக்காம்புகளிலிருந்து கண்கள் மற்றும் தொப்புளிலிருந்து ஒரு வாய். இருப்பினும், அவர் ஒரு கையில் கோடரியும் மற்றொரு கையில் கவசமும் வைத்திருந்தார்.

22. பேயர்

பதினாறாம் நூற்றாண்டின் பேயியல் இலக்கியத்தில் பியூர் முதன்முதலில் விவரிக்கப்பட்ட ஒரு அரக்கன், அங்கு அவர் நரகத்தின் சிறந்த தலைவர் என்று விவரிக்கப்படுகிறார், ஐம்பது படையினருக்கு கட்டளையிடுகிறார். பியூர் சிங்கத்தின் தலை மற்றும் அவரது உடலைச் சுற்றி ஐந்து ஆட்டு கால்கள் இருப்பதை விவரித்தார், இதனால் பியர் எந்த திசையிலும் செல்ல முடியும்.

23. Azazel

பதினாறாம் நூற்றாண்டின் பேயியல் இலக்கியத்தில் பியூர் முதன்முதலில் விவரிக்கப்பட்ட ஒரு அரக்கன், அங்கு அவர் நரகத்தின் சிறந்த தலைவர் என்று விவரிக்கப்படுகிறார்.

ஐம்பது படையினருக்கு கட்டளையிடுகிறார். பியூர் சிங்கத்தின் தலை மற்றும் அவரது உடலைச் சுற்றி ஐந்து ஆட்டு கால்கள் இருப்பதை விவரித்தார், இதனால் பியர் எந்த திசையிலும் செல்ல முடியும்.

# இதயத்து மொழிகள் இணைந்து மொழிந்ததனால் காதல் பொழிகிறது



ஈழத்து தமிழ் இலக்கிய பரப்பில் கவிதைத் தொகுப்புக்களின் வரவு அண்மைக் காலமாக அதீதமாய் அதிகரித்து வருவதென்பது வீறுகொண்டெழும் தமிழ் தாகத்தின் அடையாளம். அந்தவகையில் நவீன எழுத்தாளர்களுக்கு மத்தியில் முல்லை மண்ணில் பூத்துச் செழித்து தனித்துவமானவராகத் திகழும் பன்முகத் திறமை நிறைந்த விஞ்ஞானப் பாடத்துறை ஆசிரியரும் கவிஞருமான நதுநசி தொட்டில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் "தடம் தந்த வரிகள்" எனும் கவிதைத் தொகுப்பினூடாக கவித்துறையில் சிறந்ததொரு எழுத்தாளுமை மிக்க படைப்பாளியாக தன்னை தடம் பதித்துக் கொண்டவர்.

"கவிஞர் நதுநசியின் கவிவரிகளில் காற்றெடுத்துக் காதல் சுவாசிக்கிறது" காதல் என்னும் அச்சாணியில்தான் உலகமே சுழல்கிறது. ஆதாம் ஏவாள் காலத்திலிருந்து மனத்தோட்டத்தில் கருக்கொண்ட காதல், காலம் தோறும் என்றென்றுமே உயிர்ப்புடன் வாழ்கிறது. உலகிற்கு உயிரூட்டுகிறது. உணர்ச்சிகளின் ஊர்வலத்தால் காதல் உலகத்திற்குள் நுழைந்த கவிஞர் நதுநிசி, அந்தக் காதல் உலகத்திற்குள் மாற்றம் ஒன்றைக் காண விழைகிறார். "மனம் மாறிட குணம் மாற்றிடச் சொல்லும் உறவு நற்குணம் மாறிட நல்லது கெடும் அறிந்திடாயோ?" என்ற முதற் கவிதையில் முற்போக்கான வினாவின் வழியாக புதியதொரு மாற்றத்திற்கான வழியினைத் தேடுகிறார் கவிஞர் நதுநிசி. "என் இதயம் நீ போன்று வாழ்ந்து போகிறேன் எனக்காக நீ துடிக்க மறுத்தால் இறந்து போகிறேன்..." உணர்ச்சிகளின் மூட்டம் காதல் கவிதைகளுக்குப் பலம். உணர்ச்சிக் குவியல்களை அள்ளியெடுத்து இதயத்து ஏக்கங்களாக அகமனதின் அடுக்குகளின் ஆழத்தில் சங்கமமாகி வடித்திருக்கும் சஞ்சரிப்பும் காதலின் கசப்பான அனுபவங்களும் நம்மோடு இணைந்து விடுகிறது.

"பட்டுப் போனமரமாய் உணர்வற்றுப் போனதேனோ? வலிக்கிறது என் மனம், உன் மனம் சிரிக்கிறதோ?" இதயத்து மொழிகள் இணைந்து மொழிந்ததனால் காதல் பொழிகிறது.. நதுநிசியின் உணர்வுத் துளிகள் அடி நெஞ்சில் வழிகிறது..! பொதுவாக அனைத்துலகக் காதல் கவிதைகளுக்கெல்லாம் பொதுவான குணம், மேகம் பொழிவதைப்போல் கற்பனையைக் குழைத்துப் பொழிவது.

கவிஞர் நதுநிசி தமது உள்ளத்து உணர்ச்சிகளுக்கு மட்டுமே நிறமூட்டி தமது படைப்பின் இரகசியத்தை தேடியே அவரது மனம் துடிக்கிறது. இரு மனங்கள் பேசிக் கொள்ளும் காதல் என்பது இனம் புரியாத மொழி. அந்த மொழியினைப் புரிய வைப்பது காதல் கவிதையின் உயிர்ப்பு. "ஓரப் பார்வை ஓராயிரம் வார்த்தை பேசிப் போகிறதே..." காதல் என்பது கண்களின் மொழியென உயிர்ப்புடன் இயைபு படும் கவிஞர் "மனம் மாறனுமே மாற்றம் ஆகனுமே" என மாற்றத்தை நியாயப்படுத்துவது சிந்திக்க வைக்கிறது வரிகள். காதல் என்பது பசிப்பிணிதான். ஆனால் உடல் பசியல்ல மோகப் பசியல்ல என்பதை இங்கிதமாய் சொல்லிக் கொடுக்கிறது கவிதைத் தொகுப்பு.

"கொங்கைகள் மட்டுமா சுவை ஊட்டும் உன் இதழ்களும் கூடத் தான்.." திருவள்ளுவரின் இன்பத்துப் பாலையும் மிஞ்சி விடுமோ என்ற அச்சமும் எழுகிறது.

நீயுரைத்த சொல் இன்றளவும் நனவாகாதோ? உணர்வோடு பந்தாடி வலி சுமப்பதேனோ? காதல் வலிகளால் நெய்யப்பட்ட சொற்கள் நெஞ்சக் கூட்டில் ஊடுருவ, கவிஞரின் காதல் பரிமாணங்கள் சங்க கால அகத்திணைப் பாடல்களின் காதல் வலிகளையும் நினைவூட்டிச் செல்கின்றன. துணையிழந்த வேளை துணிவிழந்து நிற்காள் வழிமறந்த போதும் தடம் மாறிப் போகாள்.. பெண்வர்க்கத்திற்குப் பாடம் புகட்டுவதாய் உணர்வொளிக் கற்றைகளை கசையடியாகவே தெறிக்க விட்டிருக்கிறார்.



## முல்லையில் பூத்துச் செழித்து தனித்துவமாகத் திகழும் பன்முகத் திறமை நிறைந்த கவிஞர் விஞ்ஞான ஆசிரியர்

கருத்தொருமித்துக் காதல் கொண்டோரின் அகத் தேவைதான் என்ன? என்ற சஞ்சலப்பிலேயே எல்லையற்ற காதலுக்குள் சிக்காத மாற்றம் ஒன்றைத் தேடியே கவிதைத் தொகுப்பினூடாகப் பயணிக்கிறார்.

கனவே இல்லாத எந்தன் மனது உந்தன் உறவால் நித்தம் கனவோடு... சொற்களின் புதையல் கவிதைகளுக்குப் பெரும் பலம்.

கவியரசனாய் 'தேவதாசனாய் சொற்களை ஞானியின் மனம் கொண்டே இந்த உலகியல் காதலைக் காணச் செய்கிறார். மனதிற்கு வலிமையானதும் உடலுக்கு உயிராக இருப்பதும் இந்தக் காதல் தான் என்பதையும் இருள் கலந்த வெளிச்சம்போல் இக்கவிதைத் தொகுப்பினூடாக உடன்பட வைத்திருக்கிறார்.

முல்லை மண் வடிவமைத்த, எழுத்தாளுமை மிக்க கவிஞர் நதுநசியின் படைப்புக்கள் தமிழ் கூறும் நல்லுலகை என்றென்றும் ஆளுமை செய்யட்டும். தமிழ் இலக்கிய உலகில் மென்மேலும் பற்பல உன்னதப் படைப்புக்களால் தமிழன்னைக்கு மணிமகுடம் சூட இனிய வாழ்த்துகள்! காதல் மொழிந்தால் மொழிகள் இனிக்கும் நதுநசி கவிதைகளால் தமிழ் மொழி செழிக்கும்! வாழ்க தமிழ் மொழி! என்றும் செந்தமிழ் காதலுடன், கவிஞர் அன்பழகி கஜேந்திரா.

## கலைக்குழுவின் சமூக நலப்பணி!













கலைக்குழுக்களும் சமூக நலப்பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக புதிய அலை கலை வட்டம் சிறப்பான ஒரு நிகழ்வை கடந்த ஞாயிறன்று கொழும்பில் அரங்கேற்றியது. மாணவ, மாணவியர் 60 பேருக்கு இலவசமாக கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது. கொழும்பு 11 ஸ்ரீகதிரேசன் வீதியில் அமைந்துள்ள கதிரேசன் மணிமண்டபத்தில் கலைஞரும் பத்திரிகையாளருமான ராதாமேத்தா தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது. ஆஸ்திரேலியாவை சேர்ந்த நடராஜா மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த கவிஞர் பசுவூர் கோபி ஆகியோரின் நிதி அனுசரணையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. இதில் சிறப்பு நிகழ்வாக மிமிக்ரி போட்டியும் நடைபெற்றது. இதில் மூவர் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வட்டத்தின் தலைவர் கலைஞர் ஷண்மு மேற்கொண்டிருந்தார்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**கணவன் :** பக்கத்து வீட்டு மாமி ரொம்ப நல்லவங்களாச்சே! நீ ஏன் வீணா அவங்களோட அடிக்கடி சண்டைக்குப் போறே?

**மனைவி :** அவங்க அசப்பில் பார்த்தா உங்கம்மா மாதிர இருக்காங்களே, அதான்!



**மனைவி :** “வர வர எனக்கு இந்த நகை, புடைவைகள் பேரில் இருக்கிற ஆசையே விட்டுப் போயிடுச்சிங்க“

**கணவன் :** “நிஜமாவா சொல்லற?“

**மனைவி :** “ஆமாம். எத்தனை நாளைக்குத்தான் இந்தப் பழைய நகைகளையும், பழைய புடவைகளையும் கட்டிண்டு இருக்கிறது....



**மனைவி :** நம் பையன் போன் பண்ணி ரொம்ப நாளாகுதில்ல..

**கணவன் :** ம்ம்ம்.. மனைவி : கடைசியா எப்போ போன் பண்ணினான்?

**கணவன் :** ஒரு நிமிஷம் இரு. செக் புக்கைப் பார்த்து சொல்றேன்.



**மனைவி :** என்னங்க.. நீங்க புட்டிப் பால் குடிச்சு தான் வளர்ந்தீங்களா ?

**கணவன் :** எப்படி கண்டுபுடிச்சே?

**மனைவி :** உங்கம்மா கிட்ட உள்ள வீரத்தில நூறுல ஒரு பங்கு கூட உங்க கிட்ட இல்லையே..!

**நிருபர் :** தீபாவளிக்கு ரிலீசாகுற உங்க படம் பிச்சுக்கிட்டுபோகும்ன்னு சொல்றீங்களே,,,,, படத்துக்கு என்ன பெயர்

**தயாரிப்பாளர் :** "ராக்கெட்டு"





**கடைக்காரர்:** நீங்க உடைத்த பொருள் 100 வருஷம் பழையது தெரியுமா?

**நபர்:** அப்பாடா! நான் அதப் புதுசுனு நெனச்சு பயந்துட்டேன்.

# செல்ஃபி உலா



சுபீக்ஷா



ஷக்தி



மதுமிதா

## பிறந்த நாள் வாழ்த்துகள்



ஹாஷினி (7 வயது -26.12.2022 )
மயூரன் - சுரேக்கா
கனடா, டொரண்டோ

# புதிய ஆண்டில் புதிய பாடல்களை வெளியிடவிருக்கும் ஈழத்து மெல்லிசை மன்னர் M.P. பரமேஷ்





நாம் இசைத்தட்டுகள் வெளியிடும் முன் பரமேஷ் கோணேஷ் "இசைத்தென்றல்" என்ற பெயரில் மேடை நிகழ்ச்சிகளை செய்து மிகவும் புகழ் பெற்றோம். எனது அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்கி என் தம்பியை எம்முடன் இணைத்துக்கொண்டேன். நான் பாடல் வரிகள் எழுதுவது, இசையமைப்பது, பாடுவது, விளம்பர வேலைகள் பொருளாதார சிரமங்களை சமாளிப்பது என்று பொறுப்புக்களை கவனித்ததால் எனது படிப்பை நிறுத்தி விட்டு கொழும்பு சென்று அங்கேயே



தங்கி இசைத்தட்டு வெளியிடும் முன்னேற்றப்பாடுகளில் தீவிரமாக இருந்தேன். என் நண்பன் எனது இசைக்குழுவில் முக்கிய நபர், S.E. மகேஷ் எனக்கு பொருளாதாரரீதியில் மிகவும் உதவி செய்தார். என் தம்பியின் படிப்பு கெட்டு விடகூடாதென்பததிற்காக நான் அவரை தொந்தரவு செய்வதில்லை. தம்பி மேடை நிகழ்ச்சிகளில் வாத்தியக்கருவி (keyboard) வாசிப்பவராக இருந்தார்.

அத்துடன் வாத்தியக்கருவி ஒருங்கமைப்பாளராக (orchestrator) இருந்தார். அவரை மூத்த கலைஞர்கள் வழி நடத்தினார்கள். மூத்த கலைஞர்களிடம் எனக்கு என்ன தேவை என்று சொல்லி விடுவேன், அவர்கள் தமது வேலைகளை திறம்பட செய்வார்கள். நான் இசையமைத்த பாடல்களை பதிவு செய்யும் பொழுது, இலங்கை வானொலியில் வேலை செய்த அத்தனை வாத்தியகலைஞர்களையும் நாடினேன். அவர்கள் மிகவும் திறமையான வாத்திய கலைஞர்கள். அந்த காலத்தில் அவர்களுக்கு கட்டுப்பாடு இருந்தது, அதாவது அவர்கள் இலங்கை வானொலிக்கு மட்டுமே பணி புரிய வேண்டும் என்பது தான்.

நான் தேவையான நபர்களை தொடர்பு கொண்டு அனுமதி பெற்று அத்தனை வாத்திய கலைஞர்களையும் எனது பாடல்களை பதிவு செய்யும் பொழுது அவர்களை பயன்படுத்த ஒழுங்கு செய்தேன்.

அந்த கலைஞர்கள் ஆங்கில notation வாசிக்கும் வழக்கமற்றவர்கள். ஹிந்துஸ்தானிய notation தான் எனது பாடல்கள் பதிவு செய்யும் பொழுது பாவிக்கப்பட்டன.




ஹிந்துஸ்தானிய ஸ்வரத்தட்டுகளை எனக்கோ என் தம்பிக்கோ எழுத தெரியாது. நான்அத்தனை கலைஞர்களுடனும் இருந்து எனக்கு தேவையானவற்றை கேட்டும், சொல்லியும், பாடியும் பெற்றுக்கொண்டேன்.

அந்த நேரத்தில் சகல விதத்திலும் எனக்குஉதவி செய்தவர் ஒரு பெரும் திறம் கலைஞர் Pappa Myskin . மூத்த கலைஞர்களாகிய இலங்கை வானொலி வாத்திய கலைஞர்கள் தான் எனது பாடல்களுக்கு சினிமா பாடல்களின் பின்னணி இசைத்தரம் இணைத்தவர்கள்.

இன்று நான் ஒரு விடயத்தை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். நான் இசையமைத்த சகல பாடல்களுக்கும் எனது மகள் prabalini தான் வாரிசு. வேறு யாரும் இதை உரிமை கொண்டாட என் அனுமதி இல்லை என்று மிகவும் திடமாக சொல்லிக் கொள்கிறேன் என்று பதிலளித்தார் M.P.Paramesh. என்றும் ஒரே சிந்தனை, அது இசை மட்டும் தான். பல கலைஞர்கள் கலை வாழ்க்கையில் பணம் சம்பாதிக்க முடியாது என்ற பட்சத்தில் வேறு தொழில் தேடி சென்று விடுவார்கள்.

இலங்கையை பொறுத்தவரை சிலர் மட்டுமே கலையுடனேயே வாழ்வை தொடர்வார்கள்.




அவர்களுக்கு பாராட்டும் கௌரவமும் கிடைப்பதக்கு மேலாக கிடைப்பது அவமானங்கள் மட்டுமே. அந்த வலிகளையும் தனது வரிகளில் வரைந்து இசையுடன் இணைத்து சுமைகளை பாடி ஒரு ஒப்பற்ற கலைஞனாக வாழ்ந்து காட்டுபவர் எமது கவிஞர், பாடகர், இசையமைப்பாளர் ஈழத்து மெல்லிசை மன்னர் M.P. பரமேஷ். 2000 பாடல்களுக்கு மேலே இசையமைத்து தயாராக வைத்திருக்கிறார், ஆனாலும் பொருளாதார ரீதியில் எல்லாவற்றையும் தரமாக பதிவு செய்து வெளியிட முடியாததால் சில நூறு பாடல்களை பதிவு செய்தும், மீள்பதிவு செய்தும் வருடா வருடம் வெளியிடுகிறார். M.P.பரமேஷின் பாடல்களை itunes, sportify மற்றும் சகல digital platformகளிலுல் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். 2023ல் புதிய பாடல்களை வெளியிடவிருக்கும் "ஈழத்து மெல்லிசை மன்னர் " M.P. பரமேஷ்.

www.mpparamesh.com
youtube link: https://youtu.be/dh7gIXF37k
Article by : வைஷாலி சுப்பிரமணியம் சென்னை, இந்தியா

# சிறப்பாக களை கட்டிய காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழக மாதாந்த பௌர்ணமி கவியரங்கு

15வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் தனது 4வது மாதாந்த கவியரங்கை அதன் தலைவர் கவிமாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி அல்ஹிறா மகா வித்தியாலய மண்டபத்தில் நடாத்தியது.

கவியரங்கிற்கு கவிஞர் கபீர் எம்.ஹஸன் தலைமை வகித்தார். காலங்கள் என்ற தலைப்பில் இடம் பெற்ற கவியரங்கில் கவிஞர்களான ஏ.ரீ.எம்.ரியாஸ், முகைதீ ன்சாலி, உஸனார் ஜாபீர், இக்பால் மௌலவி காத்தான்குடி பௌஸ் இல்மி, அஹமட் லெப்பை, கலைமதி றபாய்தீன் அஜீரா ஹலீல்தீன், ஸாஹிர் குசைன், அ.லெ. பதூர்தீன் ஏ.எல்.சப்ரி 11 கவிஞர்கள் கவி மழை பொழிந்தனர்.

கவிமணி எம்.எச்.எம். புஹாரி பலாஹி முதன்மை விருந்தினராகவும் காத்தான்குடி கலாசார உத்தியோகத்தர் மௌலவி அல்ஹாபிழ் எம்.ஏ.சீ. ஜவாஹிர் பலாஹி கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

கவிதை பாடிய கவிஞர்கள் அனைவரும் கவித்தாரகை பட்டமளித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கவி அரங்கிற்கு தலைமை வகித்த கவிஞர் கபீர் எம். ஹஸன் கவிமேகம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த 7ம் திகதி பௌர்ணமி தினத்தன்று நடைபெறவிருந்த டிசம்பர் மாத பௌர்ணமி கவியரங்கு கிழக்கில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு கடந்த 16ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.





# பொங்கலன்று இலங்கை, இந்திய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகவுள்ள பட்டிமன்ற படப்பிடிப்பு சரஸ்வதி மண்டபத்தில்...



படங்கள்: ருசைக் பாரூக், எம்.நஸார்

# குளிர் காலத்தில் சரும வறட்சியை போக்கும் பழங்கள்





குளிர் காலத்தில் நிலவும் குளிர்ந்த வெப்பநிலையும், குளிர் காற்றும், குறைந்த ஈரப்பதமும் பல்வேறு சரும பிரச்சினைகளுக்கு வித்திடும். சரும வறட்சி, நீரிழப்பு, முகப்பரு போன்றவை எட்டிப்பார்க்கும். சில குளிர்கால பழங்கள் சரும வறட்சியை போக்கி ஈரப்பதத்தை தக்க வைக்கும் தன்மை கொண்டவை. சருமத்திற்கு கூடுதல் பளபளப்பு சேர்க்கக்கூடியவை.

### பப்பாளி

கொலாஜன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் பாப்பைன் என்ற நொதி நிறைந்த பழங்களுள் ஒன்று பப்பாளி. மேலும் இதில் வைட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ மற்றும் சருமத்திற்கு தேவையான ஆன்டி ஆக்சிடென்டுகள் உள்ளன. அவை சருமத்திற்கு தேவையான ஈரப்பதத்தையும், ஊட்டச்சத்தையும் வழங்கும் ஆற்றல் கொண்டவை. முன்கூட்டியே முதுமை பருவம் எட்டிப்பார்ப்பதை தடுக்கும். இந்த பழம் இயற்கையாகவே உடலின் வெப்பநிலையை அதிகரிக்கக்கூடியது. அதனால் குளிர்கால வானிலையை எதிர்த்து போராடி உடல் போதுமான வெப்பநிலையை தக்க வைத்துக்கொள்ள உதவும்.



### மாதுளை

இந்தப் பழம் புத்துணர்ச்சியூட்டும் சக்தி கொண்டது. சரும துளைகளை போக்கவும் உதவும். சரும சுருக்கங்களையும் குறைக்கும். விரைவில் சருமம் முதுமை தோற்றத்திற்கு ஆளாகுவதை தள்ளிப்போடும். மாதுளை பழ ஜூஸ் பருகுவது சருமம் ஈரப்பதத்தை தக்கவைத்துக்கொள்ள உதவும். சருமத்திற்கு போதுமான ஊட்டச்சத்தையும் வழங்கும். இதில் இருக்கும் நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் பைட்டோ கெமிக்கல்கள் சருமத்திற்குள் ஆழமாக ஊடுருவி சரும வளர்ச்சிக்கு வித்திடும்.



### அன்னாசி

இதில் புரோமைலின் மற்றும் வைட்டமின் சி நிறைந்துள்ளது. இவை குளிர் காலத்தில் சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தக்கூடியவை. குளிர்காலத்தில் உடலை சூடாகவும், சருமத்தை எண்ணெய் பசைத்தன்மையுடனும் வைத்திருக்க துணை புரியும். மேலும் இதில் உள்ளடங்கி இருக்கும் வைட்டமின் சி மற்றும் ஆன்டி ஆக்சிடென்டுகள் முகப்பரு, தழும்புகள் மற்றும் கரும்புள்ளிகளை போக்க உதவும். சரும துளைகளை ஆழமாக சுத்தப்படுத்தி சருமத்திற்கு பளபளப்பு சேர்க்கும்.



### கிவி

இந்த பழத்தில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் பருக்கள், தடிப்புகள் மற்றும் தோல் அழற்சியைக் குறைக்கக்கூடியவை. சருமத்தை சுத்தம் செய்யவும் உதவக்கூடியவை. கிவியில் வைட்டமின் சி அதிக அளவு உள்ளது. இது வலுவான சருமத்தை உருவாக்க உதவும். மேலும் இந்த பழத்தில் உள்ள வைட்டமின் ஈ, சருமத்தை பளபளப்பாகவும், ஈரப்பதமாகவும் வைத்திருக்க வழிவகுக்கும்.



### வாழைப்பழம்

பொட்டாசியம், வைட்டமின்கள் சி, ஈ ஆகியவை வாழைப்பழத்தில் நிறைந்துள்ளன. இவை சருமத்தின் பளபளப்பு தன்மையை மேம்படுத்தக்கூடியவை. இறந்த செல்களை நீக்கி சருமத்தை பிரகாசமாக்கும். குளிர்காலத்தில் சரும வறட்சியை குறைத்து ஈரப் பதத்தை தக்கவைத்துக் கொள்ள உதவும்.

### ஆரஞ்சு

குளிர்காலத்தில் ஆரஞ்சு பழங்களை உட்கொள்வது சரும பாதிப்புகளை சரி செய்ய உதவும். ஆரஞ்சுப் பழத்தில் உள்ள கல்சியம், பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற தாதுக்கள் சருமத்தின் இளமைப் பொலிவையும், பளபளப்பான தோற்றத்தையும் தக்கவைத்துக்கொள்ள உதவும்.

# பட்டுப்புடவையை பராமரிப்பது எப்படி?

திருமணத்துக்கு எடுக்கப்படும் முகூர்த்தப் பட்டு சேலையை பெண்கள் பல ஆண்டுகள் பத்திரமாக வைத்திருந்து பாதுகாப்பது வழக்கம். ஆனால் அதனை பராமரிப்பதில் கவனம் செலுத்தினால் அதன் ஆயுள் காலத்தை மேலும் கூட்ட முடியும். சிலர் பட்டு சேலையை ஏதாவது விழாவுக்கு கட்டிக்கொண்டு செல்வார்கள். வீட்டிற்கு திரும்பியதும் உடனே மடித்து பெட்டியில் வைத்து விடுவார்கள்.

வியர்வை ஈரத்துடன் அந்த சேலை மடித்து வைக்கப்படுவதால் அதனை பூச்சிகள் அரித்து பட்டுச்சேலையின் சரிகை கருத்துப்போய் விடுகிறது. இதனால் சேலையின் பளபளப்பு குறைந்து அது கிழிந்து விடும் நிலைக்கு உள்ளாகிறது. அதனை தவிர்க்க சேலையை கழற்றியதும் உடனடியாக மடித்து வைக்காமல் மின்விசிறி காற்றில் சிறிது நேரம் காய வைக்க வேண்டும். பின்னர் அதனை அயர்ன் செய்து பீரோவில் வைத்து அத்துடன் நாப்தலின் உருண்டைகளை போட்டு வைத்தால் சேலைகளை பூச்சி அரிக்காது.

மாதம் ஒருமுறை எல்லாப் பட்டு புடவைகளையும் வெளியில் எடுத்து நிழல்பட உலர்த்தி அயர்ன் செய்து வைத்தால் எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் அந்த சேலைகள் புதியதுபோலவே இருக்கும். மேலும் அதை பாதுகாக்க துணிப்பைகளை தைத்து அதில் சேலையை மடித்து வைத்தால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஜரிகை கருக்காது. அத்துடன் மஸ்லின் துணியிலும் பட்டுப் புடவையை சுற்றி வைக்கலாம்.

பட்டுப்புடவைகளை பூச்சிகள் தாக்காமல் இருக்க அவற்றை மர அலுமாரியில் வைத்து பராமரிக்கலாம். பட்டுச்சேலை மற்றும் பட்டு ஜாக்கெட் அணிந்து வெளியே சென்று திரும்பும்போது ஜாக்கெட் வியர்வையில் நனைந்து இருக்கும். அதனை லேசாக ஷாம்பு போட்டு கசக்கி அலசி காய வைக்க வேண்டும்.

அதற்கு சோப்புகளை பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் அதிக காரத்தன்மை கொண்ட சோப்பை பயன்படுத்துவதால், ஜாக்கெட் பொலிவிழந்து கிழிந்து விடும். இந்த ஆலோசனைகள் பட்டுச் சேலை, ஜாக்கெட்டுகளுக்கு மட்டும் அல்ல... பாரம்பரிய பட்டு ரகங்கள் அனைத்துக்கும் பொருந்தும்.



தினகரன் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில்

# இதயம் கவர்ந்த இசைத்தென்றல்













கலைகளிலேயே இசை என்பது பல இதயங்களைக் கவர்ந்ததொன்றாகும். இசையால் வசமாகா இதயம் உண்டோ என்ற ரி. எம். எஸ்ஸின் பாடல் அதனை அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு முத்திரை பதித்த பாடல்களை பாடும்போது கேட்கின்ற வேளை ஒரு இன்பமும் நம்மையறியாது இனிமை சேர்க்கிறது. சிரேஷ்ட அறிவிப்பாளர் அபுஉபைதா மவ்ஜுட் தயாரிப்பில் பல வருடங்களாக வெற்றி நடைபோடும் "இசைத்தென்றல்" கடந்த 18.12.2022 இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் மண்டபத்தில் பழைய இடைக்கால புதிய பாடல்களால் களைகட்டியது என்றே சொல்லாம். தென்றல் எப். எம் அலைவரிசையில் நேரலையாக தவழ்ந்து வந்து காதுகளை தாலாட்டியது. பாசில் + ரஜினி யின் வீனஸ் இசைக்கலைஞர்களின் இசையில் பாடல்கள் ஒவ்வொன்றும் முத்துக்களாக மின்னியது. அறிவிப்பாளர் ரிலாவின் நகைச்சுவைக் கலந்த நிகழ்ச்சி தொகுப்பு கேட்டவர்களையும், பார்த்தவர்களையும் வெகுவாக கவர்ந்தது. பாடகர்களான பாசில் , கவிக்கமல், அகீல் அக்றம், கோபி, டாக்டர் ஜமீல், பாடகிகளான அபிலாஷா, அஸ்மிதா, திலகா, மதுஷா, மற்றும் தென்னகத்து பாடகர் மறைந்த காயல் சேக் முஹம்மது அவர்களின் புதல்வர் டாக்டர் றஸ்மி ரூமியும் மனது மறக்காத பாடல்களை தந்து உள்ளம் கவர்ந்தார்கள். மண்டபம் நிரம்பி வழிந்த இந்நிகழ்வில் அதிதிகளாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் மயோன் முஸ்தபா, தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், பிதா சந்ரு பெர்ணான்டோ, நசார் இஸ்மாயில், தொழிலதிபர்களான டாக்டர் பஹார்தீன், டாக்டர் ரமீஸ் மொஹமட் , தொழிலதிபர் மவ்ஸும் கலைச்சுடர் ஷாஜஹான், உசைன் போல்ட், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் விஷாரத ஏ.மகேந்திரன், இஸ்மாயில், ஜிப்ரி, எஸ். ஆனந்தகுமார் கலந்து சிறப்பித்தனர். சிறப்பதிதிகளாக டாக்டர் கௌசலாதேவி கோவிந்த பிள்ளை, தெகிவளை நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா, அஹமட் றியாஸ், கலைஞர் கலைச்செல்வன், கவிஞர்கள் கலைஞர்கள் பலரும் வருகை தந்திருந்தனர். மாணவ மாணவிகளுக்கு தேவையான புத்தகங்கள் பாடசாலை bags களும் வழங்கப்பட்டன. ஊடக அனுசரணை தினகரன், தினகரன் வாரமஞ்சரி மற்றும் மொஹபத் tv.

(படப்பிடிப்பு: ஏ.கே. விஜயபாலன், நவாஸ்)

தினகரன் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில்

## அறநெறி பாடசாலைகளுக்கிடையேயான

# அகில இலங்கை கிராமிய ஒன்றியத்தின் ஆடற்கலைப் போட்டி










கொழும்பு மாவட்டத்திலிருந்து அரையிறுதிக்குத் தெரிவு செய்யப்பட்ட முகத்துவாரம் ஸ்ரீ பத்மாவதி அறநெறிப் பாடசாலை ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியம் சுவாமி ஆலய அறநெறி பாடசாலை, கொழும்பு கதிரேசன் வீதி, ஸ்ரீ கதிர்வேலாயுதசாமி அறநெறிப்பாடசாலை மாணவ மாணவிகளைப் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு: எம்.நஸார்)

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## உருவங்களின் சரியான எண்ணிக்கையை எழுதுங்கள்




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





*Look at the picture and circle the correct word*


chicken / check


cut / cat


good / goat


cow / cool


horse / house


dog / dig

# நூல்களின் அட்டைப்படங்களை அலங்கரித்து பலரது இலக்கிய வளர்ச்சிக்கு துணை நின்ற முகம்மது அஸ்மி




ஒவ்வொரு நூலுக்குப் பின்னாலும் மறைந்திருக்கும் ஒரு முகம் நூலாசிரியர் எண்ணத்தைப் பிரதி பலிக்கின்ற ஓர் அழகிய கலைப் பணி அட்டைப்பட வடிவமைப்பாகும்.

மாறுபட்ட இரசனைகளை, கருத்துக்களை கொண்ட ஆக்க இலக்கிய உள்ளங்களின் திருப்தியை பெறும் வரை வடிமைப்பானது தொடரும். அவ்வாறான அழகிய வடிவமைப்புக் கலையை வாழ்வின் தொழிலாக மாற்றிய ஒருவர்தான் அஸ்மி.

கோபங்களை கண்டு கொள்ளாதவர். மன்னிக்கும் மனப்பான்மை உடையவர். அவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தபோது....

◆ **உங்களைப் பற்றிச் சில வார்த்தைகள் ?**

நான் முகம்மது அசிர் முகம்மது அஸ்மி. பெரிய கிண்ணியாவில் பிறந்து வளர்ந்து தற்போது அடப்பனார் வயலில் வசித்து வருகிறேன்.

◆ **இத்துறையில் ஆர்வம் வரக் காரணம் ?**



உயர் தரம் படித்தபின் தொழில் கல்வி ஒன்றை அமைத்துக் கொள்ள விரும்பினேன் அதன் நிமித்தம் கணனித் துறையை தேடிக் கற்க முயற்சித்தேன்.

◆ **நீங்கள் செய்த முதல் அட்டைப்பட வடிவமைப்பு பற்றி ?**

"தென்றலே வீசி வா" கவிஞர் பி ரீ அஸீஸ் அவர்களால் எழுதப்பட்ட நூலே எனது முதல் layout புத்தகமாகும்.

அழகான முறையில் அமையப் பெற்று பல நூலாசிரியர்களின் கவனத்தை ஈர்த்த நூலாகும்.










◆ **இதுவரையில் எத்தனை நூல்களை வடிவமைப்புச் செய்துள்ளீர்கள் ?**

இருநூறுக்கு மேற்பட்ட நூல்களை அட்டைப் படம் உட்பட layout செய்துள்ளேன் .

மற்றும் விளம்பரங்கள்(Banner), சின்னங்கள்(logo) என்னால் வடிவமைப்புச் செய்யப் படுகிறது.

◆ **எந்தெந்த நூல்களுக்கு வடிவமைப்பு செய்துள்ளீர்கள் ?**

இலக்கிய நூல்களான கவிதை,சிறுகதை, நாவல், கட்டுரை என பல வகையானது வினாவிடை புத்தகங்களும் என்னால் layout செய்யப் படுகிறது.

பல இடங்களிலிருந்தும் என்னை நாடி வருகிறார்கள். அவர்களின் விருப்பங்களை நிறைவு செய்கிறேன்.

◆ **நீங்கள் வடிவமைத்த நூல்களுக்கு அரச அங்கீகாரம் கிடைத்துள்ளதா ?**

ஆமாம் ! இலங்கையின் தேசிய நூலகங்களுக்கு பொருத்தமான நூல்களாக சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது கவிஞர் பி ரீ அஸீஸ் அவர்களின் "சின்னப்பாப்பா" எனும் சிறுவர் பாடல்கள் நூல் மற்றும் கவிச்சுடர் ஏ எம் கஸ்புள்ளாவின் விடியும் பொழுதும் விலகிடும் இருளும் என்ற நூலை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்குப் பொருத்தமான நூலாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும் கொடகே சாகித்ய விருது பெற்ற, கலாசார திணைக்களம் கொள்வனவு செய்த பல தகைமை பெற்ற நூல்கள் என்னால் layout செய்யப்பட்டுள்ளது.

◆ **வினா விடை நூல்கள் எதனூடாக அச்சடித்து வெளியீடு செய்யப் படுகிறது ?**

இலங்கையின் பிரபலமான புத்தகசாலை" இஸ்லாமிய புக் சென்டர்" ஊடாகவும் ஸ்டுடன் பப்ளிகேஷன்ஸ் எனும் நிறுவனத்தினூடாகவும் நூல்கள் அச்சடித்து வெளியீடு செய்யப் படுகிறது இன்றும் அதன் பணி சிறப்பாக இடம் பெற்று வருகிறது.

◆ **இதற்கு முன்னர் அட்டைப்படம் உட்பட வடிவமைப்பு செய்த அனுபவம் உங்களிடம் உண்டா ?**

ஆமாம்! நான் ஒருவருடம் கிண்ணியா பிரதான வீதியில் அமைந்த அம்றா கிராபிக்ஸ் எனும் நிறுவனத்தில் கடமை



செய்தேன். அந்நிறுவனம் மூடப்பட்டதன் பின்னால் தனியாக இத்தொழிலை மேற்கொள்கிறேன்.

◆ **எத்தனை வருடகாலமாக இதனைச் செய்து வருகிறீர்கள் ?**

எட்டு வருடமாக இத்தொழிலை செய்து வருகிறேன். இது எனது தனிப்பட்ட முயற்சி. அதனை விரிவுபடுத்த எண்ணம் கொண்டுள்ளேன்.

◆ **நாட்டின் பொருளாதார நெருக்கடி மிகுந்த நிலையில் எதிர்கால இளைய சமூகம் எவ்வாறான தொழிலை கற்றுக் கொள்ள வேண்டும் ?**



ஒவ்வொருவரும் தமக்கான கைத் தொழிலைக் கற்றுக் கொண்டு அதனூடாக, வாழ்வை முன்னேற்றம் காணும் வழிகளை தேடல் வேண்டும்

நவீன உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்க தயாராக வேண்டும். அதற்குத் தகுந்தவாறு தொழிற்நுட்பங்களை அறிதல் சிறந்தது.

ஏ. எம். கஸ்புள்ளா...

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# நபிகளாரின் சமூக உறவு

அண்ணலார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு_ அலைஹி வஸ்ஸலம் அவர்கள் சமூக மனித ராக பன்மைத்துவ சமூகங்களின் முன்மாதிரி மனிதராக மிளிர்ந் தவர். அவர் ஆன்மீக வழிகாட்டி யாக இருப்பவர். சக மானுடநே யத்தை இந்த உலகுக்கு வாழ்ந்து காட்டிய முன்னோடி.

'நபிகளாரின் சமூக உறவு'' என்கிற இந்த நூல் தமிழ்நாட் டைச் சேர்ந்த பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா அவர்க ளால் எழுதப்பட்டது. முஸ்லிம் மீடியா ஃபோரம் அண்மையில் தபால் நிலையக் கேட்போர் கூடத்தில் வெளியீட்டு நிகழ்வை நடத்தியது.




மாற்றுப் பிரதிகளின் வெளியீடாக வந்துள்ள நபிகளாரின் சமூக உறவு காலத்தின் தேவையமைந்த பனுவலாகும். பெருமானா ரின் வாழ்வியல் வரலாற் றோட்டத்தை சமூக உறவுநிலை நின்று அலசுகிறது. தேவைக்கேற்ப விளக்கப்படங்களும் ஒளிப்படங்க ளும் ஆதாரம் சேர்க்கிறது. நபிகள் நாயகம் ஸல் அவர்கள் சமூக மனிதனாக வாழ்ந்து காட்டியவர். இன நல்லிணக்கம், புரிந்துணர்வு, பகைமறப்பு, மானுடநேயம் என்பன தேவைப்படும் காலத்தில், வெளிவரும் இந்நூல் நபிகளார் காலத்தின் அனுப வச்சாறு.

நபிகளார் அகிலத்துக்கான அருட் கொடை. அவருடைய வாழ்வு ஒரு வழிகாட்டல் அம்சம்தான். முஸ்லிம் அல்லாதாருடன் நபிக ளார் எத்தகைய உறவு பேணினார் என்பது ஆராயத்தக் கது. மக்கா முதல் மதீனா வரை முஸ்லிம் அல்லாதோருடன் நபி களார் நட்புப் பாராட்டிய விதம் இன்றைய பல்லின சமூகத்துக்கு ஒரு அனுபவப் பகிர்வுதான். தமிழில் ஒரு முன்னோடியாக அமையும் இந்நூலூடாக பேராசிரியர் ஜவாஹி ருல்லா கோடிக்கணக்கான மக்கள் பின்பற்றும் முஹம்மது நபிகளா ரின் சமூக உறவை அறிமுகம் செய் கிறார். அவர் பணி சிறக்கட்டும்.

## இரு வழி மொழித் தடம்

கலை இலக்கியச் செயற் பாட்டுக் களத்தில் மொழி எல்லை தாண்டியதாக விரி வுறும் மொழிபெயர்ப்புத் துறையின் வளர்ச்சி குறித் தும் ஆய்வுப் புலம் விரிவுற வேண்டும்.

இலங்கையில் இருமொழி வழியேயும் மொழிபெயர்ப்பு மேலுற வேண்டும்.தமிழிலி ருந்து சிங்களத்துக்கும்சிங் களத்திலிருந்து தமிழுக்கு மான சமமானசமாந்தரமான மொழிபெயர்ப்பு வழி விரிவின் தேவை அவசியமானது.

சமூக பண்பாட்டு பரந்த உணர்வுக்கும்,மொழி மற்றும் இலக்கிய மேம்பாட்டுக்கும் சமூக உறவுக்கும் இந்தத் தளம் அவசியம். தளத்தில் பணி யாற்றக்கூடிய ஆளுமைகளை வளர்த்தலும் ஊக்குவித்தலும் பிரதானமானது.

இன்று சிங்களத்தில் வருகிற நவீன இலக்கியங்கள் அனைத் தும் தமிழுக்கும் உள்ளாகின்ற னவா என்பது வெறும் கேள்வி யாகவே உள்ளது.

ஒருசில மொழிபெயர்ப்பாளர் கள் தொழிற்படுகின்றனர்.திக்கு வல்லைக் கமால் குறிப்பிடும்ப டியானவர்.

ரிஷான்ஷெரீப் சிறுகதை,நா வல்,கவிதையென விரிநிலை யில் தொழில்படுகிறார்.இப்னு அஸ_மத் கவிதை சார்ந்து முகப்பக்கத்தில் அதிகம் இயங் குகிறார்.வேறு சிலரும் இயங் கக்கூடும்.

தமிழிலிருந்து நவீன இலக் கியப் பாய்ச்சலை சிங்கள வழி கடத்துவதற்கு எத்தகைய விரிந்த முயற்சிகள் உள்ளன என்பதும் கேள்வியே. அண்மை யில் வெளிவந்த ‘Jaffna Doors and Windows’ ஒரு நல்ல முயற்சிதான்.

கல்வியில் இருவழி மொழிக்கொள்கை பயன்பாட்டி லுள்ளது. கலை, இலக்கியத்தில் இதற்கான விரிதளம் வியாபிக்க வேண்டும்.

மொழி வெறுமனே ஒற்றைத் தன்மை கொண்டதல்ல. அது கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கம், வாழ்வியல்முறை போன்ற சகல பரிமாணங்க ளும் கொண்டது.

இலக்கிய மொழிபெயர்ப்பின் மூலம் இதனை அறிந்துகொள் ளவும் பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்படவும் வழி ஏற்படுகிறது.

தமிழ், சிங்கள மொழி இணைவு, கலாசார இணைவுக் குமான காரணியாகிவிடுவது மிகுந்த அவதானிப்புக்குரியது என்பதால் சமூக உறவின் வலு வூட்டத்துக்கு மொழிமாற்றுச் செயற்பாடுகளும் வலுவூட்டுவ னவே.

## முயலாடு முன்றில் 02

### மழலை

**முல்லை முஸ்ரிபா**

சங்க இலக்கியங்களிலிருந்தே சிறுவர்கள் மையப்பட்ட செய்யுள்கள் தோன்றி விட்டன. குழந்தை வாழ்வின் கோலங்கள் இலக்கியமாகுதல் அவசியமானதுதான்.

குழந்தை முயற்குட்டிகள் துள்ளி விளையாடும் இலக்கிய முன்றில் சோலை வனமொத்த நறுமணம் கொண்டது@ ரம்மியமானது. பாரதியின் பாப்பாப் பாடல்கள் அழகானவை.



**ஓடி விளையாடு பாப்பா**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா**

**சின்னஞ் சிறுகுருவி போலேநீ**
**திரிந்து பறந்து வா பாப்பா**
**வண்ணப் பறவைகளைக் கண்டு நீ**
**மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா**



முயலாடு முன்றிலில் முகம் மலரும் பாப்பாக்களின் அழகுக் காட்சியது. மக்கட்பேறு குறித்து வள்ளுவம் பேசுகிறது. 'பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற'','அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்'','குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்''ம ழலையரின் முயலாடு முன்றில் குரலினிதின் காட்சி மொழிதான்.



வண்ணத்துப்பூச்சி அழகு மிக்க குழந்தையுலகு உளவியல் தன்மை கொண்டது. குழந்தை களை அணுகுதல் மீது கவனக் குவிவு மேலானது. உடல் வளர்ச்சி, இயக்க வளர்ச்சி,அறிவு, சமூக வளர்ச்சி என்பனவற்றின் மீது மாஸ்லோ குறிப்பிட்டபடியான சுயதிறனியல், கணிப்பு,அன்பும் பாசமும்,சுதந்திர உணர்வு மற்றும் காப்புத் தேவைகள் கவனிக்கப்படும் போது முயலாடு முன்றில் அழகாகிறது. குழந்தை முயல்கள் அழகானவர்கள். அவர்களது செய லூக்கம் வெவ்வேறு வர்ணம் கொண்டது. தேட லூக்கம்,திரட்டூக்கம்,ஆராய்வூக்கம்,ஆக்கவூக்கம், பணியூக்கம் உள்ளிட்ட மக்டூகல் முன்னெழுப்பும் இயல்பூக்கங்கள் குழந்தையுலகு மீது,அவர்தம் மனவெழுச்சி மீது நிகழ்த்துதலும் குழந்தை இலக் கியத்தின் கூறுகள்தான்.

முயலாடு முன்றிலில் காணவியலுமான அசை வியக்கம்தான்.

உளவியல் நடத்தைவாதிகள், அறிஞர்கள் பப்லோ, ஸ்கின்னர், தோண்டைக் மற்றும் பியா ஜேயுடைய உளவளர்ச்சிப்பருவவிய லின் மீதான நுண்ணிதான கவனிப் பும் அவசியமெனலாம்.

குழந்தையுலகை வகைப்படுத்தி நோக்குதல் உளவியல் சார்ந்தது. புலனியக்கம், தூய சிந்தனை, நிய மசிந்தனை என குழந்தைப்பருவங் கள் மீதான புரிதல் இலக்கியத்திலும் வெளிப்படையாக இன்றியமையாதது.

குழந்தையுலகைப் புறக்கணிக்குமி டத்தில் முயலாடு முன்றில் இருள்மை யடைகிறது.

நவீன இலக்கியங்களிலும் ஃ பின் நவீன இலக்கியங்களிலும் கூட குழந் தையுலகு செயற்படுகிறது.

அன்புருகும் அழகும்,பாசம் பொங்கும் பக்குவமும்,கருணையும், இரக்கமும்,துயரமும், இழப்பும், ஏக் கமுமென குழந்தைமையின் வெட்டுமுகமொன்று கவிதை முழுதும் விரவும்.

## ஔவன் கவிதை

## வெண்பொழுது / நட்சத்திரம் / நீ

வெளிறிய மஞ்சள்
பூவொன்றின் வாசத்தை
கருகிய செம்மலர் தின்றதென
எழுதிய கவிதை
எழுந்து பறக்க
சிறகில் தொங்கிய
நீல வானிலிருந்து உதிர்ந்தன
தொள்ளாயிரம் நட்சத்திரமும்
ஒரேயொரு வெண் பொழுதும்
நட்சத்திரங்களைப் பொறுக்கிக்
கொண்டிருந்த காற்றிடம்
யாரும் எதுவும் பேசிலர்
காற்றின் விரல்களில் பளபளப்பு

வெண்பொழுதில் இருளப்பிய
கணத்தில்
உன் முகம் வெளிப்பட்டதை
நான் கண்டிருந்ததாக
இரவில் பெய்த மழை
மின்னல்
முழக்கம்
யாவும் சொல்லின

உன் மனசிடம்
ஒரேயொரு நட்சத்திரம்
பூத்துக்கிடந்ததாக
எவரும் பேசிலர்



# தமிழ் சினிமாவின் பண்பட்ட நடிகை லட்சுமி



தமிழ் சினிமாவின் பண்பட்ட நடிகை லட்சுமி. இவர் தமிழ்த் திரைப்பட நடிகையும் தொலைக் காட்சித் தொகுப்பாளரும் ஆவார். இயக்குநர் மல்லியம் ராஜகோபால் "ஜீவனாம்சம்"என்ற படத்தின் மூலம் லட்சுமியை திரையுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.இப்படம் 1968ஆம் ஆண்டு வெளிவந்தது. லட்சுமியின் தந்தை யரகுடிபாடி வரத ராவ் மற்றும் தாய் குமாரி ருக்மணி இருவருமே திரைத்துறையில் பணியாற்றியவர்கள். தந்தை வரத ராவ் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நெல்லூர் நகரைச் சேர்ந்தவர். நடிப்பதோடு சமூகப்பிரச்சினைகளை அலசும் திரைப்படங்களை தயாரிக்கவும் செய்தார். லட்சுமியின் தாய் ருக்மணியும் சிறந்த தமிழ் நடிகையாக விளங்கினார். எனவே திரைப்படங்களில் நடிப்பது அவருக்கு இயல்பாகவே அமைந்தது.இவரின் இயற் பெயர் வெங்கடமகாலட்சுமி. முதல் கணவர் பாஸ்கர், நடிகர் மோஹன் சர்மா இரண்டாவது கணவர், நடிகர் சிவச்சந்திரன் மூன்றாவது கணவர். பிள்ளைகள்: ஐஸ்வர்யா. பெற்றோர்: ஒய். வி. ராவ் ,ருக்மணி 1970ம் ஆண்டுகளில் நான்கு தென்னிந்திய மொழிப்படங்களிலும் வெற்றிக்கொடி நாட்டினார். அவரது மலையாளப்படம் சட்டக்காரி (1974) லட்சுமிக்கு புகழ் தேடித் தந்தது. இத்திரைப்படம் 1975 ம் ஆண்டு ஜுலி என ஹிந்தியிலும் மிஸ் ஜுலி பிரேம கதா என தெலுங்கிலும் எடுக்கப்பட்டன. ஹிந்திப்பட நடிப்பிற்காக பிலிம்ஃபேர் விருதும்,வங்காள திரையிதழாளர்கள் விருதும். கிடைத்தது. 1977ஆம் ஆண்டில் வெளிவந்த சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் புதினத்தை ஒட்டி எடுக்கப் பட்ட தமிழ் திரைப்படத்திற்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருது வாங்கினார். 1980களில் முதன்மை பாத்திரங்களில் நடிப்பது குறைந்தபோது துணைநடிகையாக பல படங்களில் நடித்துள்ளார். ஜீன்ஸ் படத்தில் பாட்டியாக நடித்து கவனத்தைக் கவர்ந்தார்.400 படங்களுக்கும் மேலாக நடித்துள்ளார்.நடிகர் திலகம் சிவாஜி கணேசன்,மக்கள் திலகம் எம்ஜியார்,ஜெய்ஷங்கர்,சிவக்குமார், முத்துராமன்,கமலஹாசன்,ரஜினிகாந்த் போன்ற உச்ச நட்சத்திரங்களுடன் ஜோடியாக நடித்தவர் லட்சுமி.நூற்றுக்கு நூறு,ராஜ ராஜ சோழன், தியாகம்,சங்கே முழங்கு, ஆனந்தக்கண்ணீர்,அவன் அவள் அது, ராஜரிஷி,ஸ்ரீ ராகவேந்திரா,சிறை, கண்மணி ராஜா,புகுந்த வீடு அந்தஸ்து, திருமாங்கல்யம்,உதயகீதம்,என் உயிர் கண்ணம்மா,ஒரு மலரின் பயணம், நெற்றிக்கண்,பொல்லாதவன்,ரத்த தானம்,மாநகரக் காவல் போன்ற படங்களில் பண்பட்ட நடிப்பைக் காணலாம். பல ஊடகங்கள் சிறை படத்தில் லட்சுமியின் நடிப்பைப் பாராட்டியது.உதயகீதம் படத்தில் இவர் ஏற்ற காவல்துறை வேடம் மீண்டும் ஓர் தங்கப்பதக்கம் எஸ். பி.சௌத்ரியை ஞாபகப்படுத்தியது. எந்த வேடமானாலும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் போல நடிப்பில் அசத்துபவர் லட்சுமி.மாநகரக் காவல் படத்தில் மறைந்த பிரதமர் இந்திரா காந்தியைப் போல ஒப்பனையாற்றி நெகிழ்வாக நடித்தார். தென்னிந்திய சினிமா வரலாற்றில் லட்சுமிக்கு ஓர் தனியிடமுண்டு. சின்னத்திரையிலும் அச்சமில்லை,அச்சமில்லை என்ற அரட்டைக்காட்சியில் தமது முத்திரையைப் பதித்தார். சமூகப்பிரச்சினைகளையும் தனிமனித அவலங்களையும் இத்தொடர் வெளிக் கொணர்ந்தது.கன்னட சுவர்ணா தொலைக்காட்சியில் எது கதே அல ஜீவனா எனும் அரட்டைக்காட்சியை நடத்தி வந்தார்.சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சி மூலம் பல சமூக விழிப்புணர்வகளை வெளிச்சம் போட்டுக் காண்பித்தார். தனது பதினேழாம் வயதில் பெற்றோர் ஏற்பாடு செய்த பாஸ்கர் என்பவரை மணம் புரிந்து 1971ம் ஆண்டு ஐஸ்வர்யா என பெண் குழந்தையை பெற்றெடுத்தார். இதன் பின்னர் பாஸ்கருடன் மண முறிவு ஏற்பட்டு தனது மகளை தன்னுடன் வளர்க்கும் உரிமை பெற்றார். ஐஸ்வர்யா 1990களில் இருந்து தமிழ் திரைப்படங்களில் நடித்து வருகிறார். மலையாள படமான சட்டக்காரியில் நடித்த போது நடிகர் மோகனுடன் ஏற்பட்ட உறவும் முறிந்தது. என் உயிர் கண்ணம்மா எனும் திரைப்படத்தில் நடிக்கும்போது உடன் நடித்த நடிகரும் பட இயக்குநருமாகிய சிவச்சந்திரனு டன் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

அங்கம் 15

# முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா



1967ஆம் ஆண்டு தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலும் இந்திய நாடாளுமன்ற தேர்தலும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அண்ணா அதற்கு ஓர் ஆண்டு முன்பாகவே தேர்தல் பணிகளை தொடங்கி புதிதாக வியூகம் அமைத்தார்.

கடந்த தேர்தலைவிட இத்தேர்தலில் இன்னும் அதிகமான தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியை தோற்கடித்து தி.மு.க வெற்றி பெற வேண்டும் என்பதே அண்ணாவின் எண்ணமாக இருந்தது. தமிழகத்தில் பத்துக்கும் மேற்பட்ட எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி காங்கிரஸிற்;கு எதிரான வலுவான கூட்டணியை அண்ணா உருவாக்கினார். தேர்தலுக்காக கூட்டணி அமைப்பது தமிழகத்தில் அதுவே முதன்முறை ஆகும்.

அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். கத்திக்குத்து வரை செல்லக்கூடாது. சந்து முனையிலிருந்து அது கத்துவதாகவும் இருக்கக் கூடாது என்கிற பண்பட்ட எண்ணத்தை நாம் வளர்த்துக்கொள்வது நல்லது.மேலும் அண்ணா காமராஜர் பற்றி கூறியதாவது, "காமராஜர் படிக்காத மேதை" என காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலை பாடசாலை தலைமை ஆசிரியர் கூறினார். சிலர்தான் படிக்காமலே மேதையாக முடியும். ஆனால் அனைவருமே மேதை ஆக வேண்டும் என்றால் படிக்காமல் இருக்க வேண்டும் என்று பொருள் கொண்டுவிடக்கூடாது. காமராஜர் அவர்கள் படிக்கவில்லையே தவிர "கல்லூரிகளில் நான் படிக்கவில்லையே" என்கிற ஏக்கம் கொண்டவர். அவர் பிறந்த காலம்குடும்ப சூழ்நிலை படிக்க நேரம் கிடைக்காத தன்மை அரசியல் ஈடுபாடு ஆகியவற்றால் தான் அவர் கல்லூரியில் படிக்க முடியவில்லை. காமராஜர் கல்லூரியில் படித்து பட்டம் பெறவில்லையே தவிர, அவர் படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர் படித்துக்கொண்டுதான் இருப்பார். இதை ஆறடி மேடையில் மாலை நேரத்தில் பொதுக் கூட்டங்களில் மட்டுமே பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் என்னைப் போல் நெருங்கிப் பழகுகிறவர்கள், அவரது படிப்பு ஆர்வத்தைப் புரிந்து கொள்வார்கள். அண்ணா மேலும் காமராஜரை பற்றி பேசும் போது, "இங்கு நான் மாணவர்களுக்கு பரிசுகள் அளித்தேன். இப்போது நான் காமராஜர் படத்தை திறந்து வைத்து இதனை யாருக்கு பரிசளிப்பது? எதற்கு பரிசளிப்பது? அதை இந்த தமிழ் சமூதாயத்திற்கே பரிசாக தருகிறேன்." என்றார்.அண்ணா மேலும் பேசியதாவது, "கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பாராட்டப்படவேண்டியதை பாராட்டுவது என்பது தமிழ்ப் பண்பாடு. அந்த பண்பாடு மேலும் சிறக்க வேண்டும் என்பதற்காகவே காமராஜரின் உருவப்படத்தை திறந்தேன்." என்றார். மேலும் அண்ணா கூறினார் காமராஜர் தமிழகத்திற்கு நன்மை செய்தார் என்பதற்காகவே நான் காமராஜரின் உருவப்படத்தை திறந்தேன் என்று கூறி பேச்சை முடித்தார். தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றி விட்டோம் என்று அண்ணா ஒருபோதும் பெருமை அடையவில்லை. மாறாக, தன்மீது பெரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து அவர் உண்மையில் அக்கறையோடு நடந்து கொண்டார் என்பதுதான் உண்மையாகும். அண்ணா தமிழகத்தின் முதலமைச்சராக சுமார் இரண்டு ஆண்டுகள்தான் பொறுப்பு வகித்தார் ஆனால் அந்த இரண்டு ஆண்டுகளில் அவர் செய்த சாதனைகள் மகத்தானதாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் உள்ளிட்ட பகுதி சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகும் தமிழகம் "மெட்ராஸ் ஸ்டேட்" என்றே அழைக்கப்பட்டு வந்தது. இதனை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று தமிழ் ஆர்வலர்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்த போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சங்கரலிங்கனார் என்பவரும் ஈடுபட்டார். அவரது கோரிக்கையை காங்கிரஸ் கட்சியே ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டியது. தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்பட்டால் தனி நாட்டு கோரிக்கையை நாமே ஆதரித்தது போலாகிவிடும் என்று கருதி காங்கிரஸ் கட்சி தயக்கம் காட்டியது.

ஆனால் "தமிழ்நாடு" என்று பெயரை மாற்றக் கோரி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் மேற்கொண்டார். அந்தக் கட்டத்தில் அண்ணா சங்கரலிங்கனாரை சந்தித்து "உங்கள் ஆசையை நான் நிரைவேற்றி வைப்பேன். நீங்கள் உண்ணா விரதத்தை கைவிடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால் அதனை மறுத்து உண்ணாவிரதத்தை தொடர்ந்து கடைப்பிடித்த சங்கரலிங்கனார் உயிர்துறந்தார். காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவராயினும் சங்கரலிங்கனாரின் மரணம் அண்ணாவை உலுக்கியது. அறிஞர் அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ் நாடு" என்று அழகான தமிழ்ப் பெயராக சூட்ட உத்தரவிட்டார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.